கவிமணி.

தேசிகவிநாயகம் பிள்ளை

(வாழ்க்கைக்-கவிதை இன்பம்-காந்தளூர்ச்சாலை)

எம். கே. பாவா.

சாந்தி நிலயம்,
கோட்டாறு, நாகர்கோவில்.

ரூ. 1-8-0

கவிமணி.

தேசிகவிநாயகம் பிள்ளை

(வாழ்க்கை-கவிதை இன்பம்-காந்தளூர்ச்சாலை)


எம். கே. பாவா.
சாந்தி நிலையம்,
கோட்டாறு.

Printed at the
Asisi Press, Nagercoil.
1946.

கவிமணியின்
எழுபதாவது ஆண்டு நிறைவுமலராக
இந்நூலை
தமிழன்னையின் பாதகமலங்களில்
சமர்ப்பிக்கின்றேன்.

"பாவா."

கவிமணி தேசிய
விநாயகம் பிள்ளை



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

முகவுரை.

கவிஞரை இனியொரு கவிஞரால்தான் அறியமுடியும் என்பார்கள்; உண்மை. நான் கவிஞரை அறிய முயற்சிக்க வில்லை. அவரை அணுகிப்பார்க்க முயற்சித்தேன். அந்த முயற்சியின் விளைவு இந்நூல். கவிமணியிடம் நெருங்கிப்பழகியதால் ஏற்பட்ட கவிதைப்பித்து, இத்துறையில் என்னை இழுத்துச் சென்றது. சரியோ தப்போ என்னுள்ளத்தில் தோன்றியதை எழுதி வைத்திருக்கிறேன். அவ்வளவுதான்.

இந்த என் முயற்சியினால் தமிழன்னைக்கு ஏற்படும் லாப நஷ்டக் கணக்கைப்பற்றி முடிவு கூறவேண்டியப்பொறுப்பு தமிழுலகத்தினுடையது. அதை அவர்கள் செய்யட்டும்.

கவிமணியின் ஆராய்ச்சித்திறனைக் காட்டுவது காந்தளூர்ச் சாலை. அது இதுகாறும் ஆங்கிலத்திலிருந்தது அதைத் தமிழில் ஆக்கும் பெருமையை கவிமணி எனக்களித்தார். கவிமணிக்கு என்வணக்கம். மொழிபெயர்ப்பு கவிமணியின் அங்கீகாரம் பெற்றது. ஆகவே, அதைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை.

திரு. மகாலிங்கம் முதலியார் ஒரு கலையன்பர். வாணியின் கடாட்சம் பெற்றச் சீமான். பலவேலைகளுக்கிடையே எனது விருப்பத்தை ஏற்று முன்னுரை எழுதி உதவினார். அவருக்கு என்நன்றி.

பொதுவாக இந்த நூலை தயாரிப்பதிலும் சிறப்பாக காந்தளூர்ச்சாலை மொழிபெயர்ப்பிலும் எனது சகோதரர்களான திருவாளர்கள் M. அஹமது B. A; B. L, N. A. நூர் முகமது M. A. B. L. ஆகியோர் எனக்களித்த உதவி அளவிடற்கரியது. அவர்கள் தந்த ஊக்கமும் ஒத்தாசையும் இந்நூல் விரைவில் வெளிவருவதற்கு காரணமாயிருந்தன. அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியறிதலுண்டு.

தமிழ் வாழ்க, தமிழன் வாழ்க!

சாந்தி நிலையம்.
15th. July 46.

எம். கே. பாவா.

முன்னுரை.

என் வனைய உயிர்களைவிட மக்கள், புறத்திற் காணும் பொருள் சண்டு அகத்திற் கொண்ட நிகழ்ச்சியால் விழையும் நிகழ்ச்சிகளை எடுத்துரைக்க விழைகின்றார்கள்? அறிவுடைமக்கள் மற்றைய உயிர்களோடு ஒவ்வா, பகுத்தறிவால் சிறப்புடைந்தமையன்றோ இதற்குக் காரணம்! ஐம்பொறிகளால் அவனியின் கண் அவதியுற்றாலும், அறிவினால் மனிதன் தனி வேறு உலகில் உலாவ இயலும் என்பது அறிவுடையார் கூற்று. புறப் பொருளும் அகப்பொருளும் மக்கள் வாழ்விற்கு இன்றியமையா இரு கருவிகளாகும். (A Thing of beauty is a joy for ever) என்பது ஒரு ஆங்கிலப் புலவரின் வாக்கு. அழகு அழிவற்ற இன்பம் தருகிறது. உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றது மல்லாமல் அறிவோடுமோதி மக்களை அவ் வின்பக் கடலில் ஆழ்த்தி விடுகின்றது. ஐம் பொறிகளின் வாயிலாக குழலின் ஓசை இதயத்தினிடம் சென்று அவனது உணர்ச்சியை எழுப்பி உலக நெருக்கடியினின்றும் யாதொரு தொடர்புமின்றி அவனைத் தனித்து விலக்கி, அமர நிலையினுக்கு இழுத்துச் சென்றுவிடுகிறது. நோக்கமென்ன? புறப்பொருள் யாவற்றினும், நோக்கம் ஒன்று படிந்து ஒழிந்தே கிடக்கும். குழவி தன் தாயினிடத்தில் எவ்வித நாட்டமுறுகின்றதோ அஃதே போல் மனிதன் இயற்கை அழகுனிடத்திலும் காதல் கொள்ளுகிறான். அவன் விரும்பிய வாறுகிடைத்தாலல்லாமல் மனம் நிம்மதியடையாது. இந்நிலையில், ஒரு கவி தன் கற்பனையினால் புறத்தில், தான் கண்டு தன் உள்ளம் கொண்ட பொருளை உருவகப்படுத்துவான். இனிய, தன் மொழியினால் அவ் விழுமியப் பொருளை விளக்க, மக்கள் அறிவினைக் கவர்ந்து, இன்பமளிக்கும்இலக்கியம் தருவான். இப்பேர்ப்பட்ட கவிகளில், கட்டுப்பாடு புகுத்துவது இயந்திரங்கள் அமைப்பதற்கொப்பாகும். மக்கள் வாழ்க்கை ஒழுங்கற்றது. பல நிறத்தது. காற்றினைப் போல் எங்கும் அலைவது. ஆகையினால் உண்மைக் கவிகளில் உயிர் படிந்து இலங்கல் வேண்டும். உண்மைக்கவி இணையற்ற இன்பத்தை ஈயும். இசைக்கும் அது உறைவிடமாகும். உள்ளச்சுவரில் அது

ஓவியம் அமைக்கின்றது. எவ்விதப் பொருள் நலத்தையும், எண்ணமெனும் கண்ணாடியில் காட்டுகின்றது. கவியானது உயிரும் உடம்பும் போல் சொல்லும் பொருளும் இயைந்து இலங்க வேண்டும். கவிகளின் உள்ளதின் வெளி வடிவமே கவிதையாகலின், அவனது உள்ளம் தெளிவும், ஆழமும் சுவையும் உள்ளத்தோர் இன்பச் சுனையாக இருத்தல் வேண்டும், இத்தகைய ஓர் கவிஞர், மேற்கு மலேயோரத்தில், நாஞ்சில் நாட்டில், புத்தேரி எனும் பதியில் இன்று கவி மணியாக விளங்கிக் கொண்டிருக்கிறார். அப்பெரியார் தான் தமிழகத்தில் புதியக் கவிதைத் தென்றலே தமிழன் வாழ்கையிலே கலக்கச் செய்து வரும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையாகும்.

"உள்ளத் துள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்-உண்மை
தெரிந்துரைப்பது கவிதை" என்பது கவிமணியின் வாக்கு.

தமிழ் நாட்டில் தமிழறிஞர் தலைக் கொண்டு போற்றும், இவ் வித்தகரால் இயற்றப் பட்ட கவிகளில் "மலரும் மாலேயும்" என்பதை தமியேன் ஒருக்கால் படித்தறிந்தேன். என்னை யறியாமல், என் உள்ளம் தனிலோர் கள்வனாக புகுந்து விட்டார் கவிமணி. தன்னை மறந்து என் மனம் துள்ளி விளையாடுகிறது. என்பால், அவர் தாயொக்கும் அன்பு கொண்டிருப்பதை நினைக்க நினைக்க என் மனம் உவகையில் விஞ்சுகின்றது. நிறைந்த கல்வியும், சிறந்தசிலமும், வாய்ந்து விளங்கும் ஓர் **தமிழ்** முனியன்றோ இவர்!. அறம் நிரம்பிய மனத்தினராய், தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் திளைத்து ஈன்ற தாய்நாட்டின் பெருமைமையை போற்றிப் புகழும் திறமறிந்து இன்ப முறுவதற்கு அழகம்மை ஆசிரிய விருத்தத்தில்"

"தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும்
உதிர்கின்ற செரி மரச்சோலை
சூழும் தென்னி ரத புரி"
"செந்தமிழின் மணத்தி னெடு செல்வர்
மணமும் கொடை
செங்கை மணமும் மாறுதென்னிரதபுரி"

எனபாடிக் களிக்கும் சொற்கூட்டமே சான்றுதரும். எங்கெங்கு சென்றாலும், எந்நாட்டில் வாழ்ந்தாலும், நல்லான் ஒருவனுக்கு தன்னடே பொன்னடாகத் தோன்றும். தாய் நாட்டுப்

புகளுரை தக்கோர் செவிகளில் தேன்போல் இனிப்பது இயற்கையாகும்.

கவிகளை எவ்வாறு கற்று பயனடைதல் வேண்டும்? விறகுகளை சேர்த்து தீ மூட்டி, அத்தீ மெல்ல மெல்லப் பிடித்தெரிந்து ஒளியைக்கொடுப்பது போன்ற தன்மையதாகும் காடுமுரடான கவிதைகளை கற்பது. சில நல்ல கவிகளை கண்ணுற்ற அளவிலேயே உடனடியில் முழுமையான உணர்ச்சிகளையும் தந்து விடுகின்றன. மென்மேலும் கற்றுத்தேறவேண்டிய பொறுப்பை அவைகள் விட்டுவிடச்செய்கின்றன. உள்ளத்தை உள்ளவாறு உடனடி கவர்ந்து விடுகின்றன. வெள்ளைக் கவியானுலும் உள்ளம் கவர்ந்தெழும். துருவித் துருவிச் செய்கின்ற ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஆனால்சிலபோழ்து மென்மைக்கவிகளுல் ஆண்மையையும் ஆழ்ந்தக் கருத்துக்களையும் காணலாம் ஆவின் பாற்சுவையை நாழி அளந்துகாட்டிடுமோ (பாரதிபாடலும் பட்டிக்காட்டானும்) "உள்ளக்களிப்பெழுந்து வெளியில் வந்துன்னுருக் கொண்டதுவோ" (கிளிப்பாட்டு.)

"மண்ணிலிருந்து பொருள் வரினும் அதை
மாற்றிமணம் தரச்செய்திடுவோம்" (மலர்)

கவிமணியின், சில கவிகளில் பொருள் ஆழமும் தத்துவ விரவலும், படிந்து விளங்கக் காணலாம்.

"மானைப் படைத்த தெய்வம் புலியையும்
வளர்த்து விடலாமோடீ" (புலி)
"எங்கே இருந்து வந்தாய்-அதை
யானும் அறிந்திடச் சொல் குழந்தாய்"
எங்கும் நிறை வெளியில் இருந்தேன்-சற்றே
இங்கும் இருக்க வந்தேனம்மா!

மக்கள் சமூகவாழ்விற்கு இன்றியமையாத பற்பலக்கருத்துக்களை தம் கவிதைகளில் தெளித்திருப்பது ஊன்றி உணர்தற்குரியன.

"மன்னிய சோலையில்-ஒருகுயில்
வாடிவருந்துமெனின்-கின்னரர்
கிம்புருவர் தம் கீதமிழப்பாரையோ"
"நாமே நமக்குத்துணையானல்
நாடும் புகழும் நற்பொருளும் தாமே
நம்மை தேடிவரும் சற்றே
இதற்கோர் ஐயமுண்டோ"

ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்ட நமது நண்பர் திரு எம். கே. பாவா, கவிமணியின் வாழ்க்கை துறையையும் அவர் களின் நோக்கங்களையும் ஆங்காங்கே இந்நூலில் எடுத்துக் கூறும் தன்னை பான்மையுற்றது அவர்களின் அரும்பாட்டிற் கும், தமிழ் பற்றிற்கும், தொண்டின் மகிமைக்கும், நான், தமிழன் என்ற நிலையில் என்றும் கடமை பட்டவனாகின்றேன் அவரது தமிழ் பற்றுள்ளம் போற்றர்க்குரியது. இவ்வித உணர்ச்சி மலிந்த ஆராய்ச்சியாளர்கள் நம்தமிழகத்தில் பெரு கும் வண்ணம் இறையிருள் புரியுமாகுக.

கவிகளின் நுட்பங்களை எடுத்து நுண்ணிய ஆராய்ச்சிகளை தெரித்துக்காட்டுவதை மூன்று வகையாகப் பிரிக்கலாம், அதா வது (1) கபிநயங்களை எடுத்துக்காட்டி புகழ்பவன் (Appreciative Critic) (2) துருவித்துருவி அலசிப்பார்ப்பவன் (Analitical Critic) (3) சரித்திர வாயிலாக காலத்தை வரையறுத்து கவிதையின் இயல்புகளை எடுத்துக்காட்டுபவன் (Historian & Literature)

முதல் வகுப்பைச்சேர்ந்த ஆராய்ச்சியாளன் பொதுமக்க ளுக்கு சாதாரணமாய் கவிகளில் காண்பதற்கரிதாய சில உண் மைகளையும் நயங்களையும் எடுத்துக்காட்டுவான, இளைஞர்களுக் கும் ஊன்றி அறிய போதியபோது கிடையாத பெரியோர்களுக் கும் அவன் பெரிதும் பயன்படுவான் ஆனால் இத்தகைய ஆராய் ச்சியாளன் ஆசிரியனை நன்கு அறிந்திருத்தல் வேண்டும் இன் றேல் மக்களுக்குச் சிறிதும் பயன்படான் அவன் புகழ்ந்து ரைக்கு ஓர் எல்லையும் குறித்திருக்கவேண்டும், கவிகளை கற்கும் ஒவ்வொருவனும் தன்னளவிலே தான் ஒரு ஆராய்ச்சியாளனா கப் பாவித்தல்வேண்டும் அன்னாருக்கு இவ் ஆராய்ச்சியாளன் துணைக்கரிவியாதல் வேண்டும். திரு. M. L. பாவா அவர்களை இந்த முறையில் நான் ஒரு •Appreciative Critic அதாவது மேல்குறித்த முதல் வகுப்பைச் சேர்ந்த ஆராய்ச்சியாளராகக் கருதுகிறேன் கவிமணியைப்பற்றி இவர் எழுதுவதும் அவரது கவியின் ஆராயிச்சியும், மக்களுக்குப் பெரிதும் துணை செய்யு மென்று கருதி நான் மனம் உவக்கின்றேன்.

திரு. M. K. பாவா அவர்களுடைய கவிமணியையும் அவரின் கவிதைகளையும்பற்றின ஆராய்ச்சிப் படிந்துள்ள இந்நூலை நான் மனமுவந்து வரவேற்கிறேன். இவர் பன்னூழ்

வாழ்ந்து இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் வெளியிடுமாறு அவரைப் பெரிதும் வேண்டுகிறேன்; கவிமணியோ, உடல் நலம்பெற்று நீடுவாழ்ந்து தமிழன்னையை அழகுபடுத்துவான் என்றும் அணிகள் செய்து கொண்டிருக்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன். தமிழ்மணம் கமழ்ந்த தமிழறிஞர்கள் அவர்களைச் சூழ்ந்து வாவாழ்ர்களாக.

M. Mahalingom Mudaliar,
Cloth & Salt Merchant. Govt. Contractor
Transporting Agent.
Municipal Councillor.

Manika Bavanam,
18-1-1122, Kottar.

கவிமணி தே. வி.

ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் உண்மைக் கவிஞனைக் காணமுடியும் என்று கூறுவார்கள். அது எப்படியுமிருக்கட்டும்; ஆனால் ஒன்று மட்டும் உண்மை.

முன்னுரை. இன்றையத் தமிழன் ஒரே தலைமுறையில் இரண்டு கவிஞர்களைக் காணும் பாக்கியம் பெற்றுவிட்டான். கிழக்குக் கடலோரத்தில் புதுவையில் அன்று பாரதியார் இருந்தார்; தமிழகத்தில் புதிய கவிதைப்புயல் வீச ஆரம்பித்தது; மேற்கு மலையோரத்திலே புத்தேரியில் இன்று கவிமணி இருக்கிறார்; தமிழகத்தில் புதிய கவிதைத்தென்றல் உலாவுகிறது. புதுவைப்புயலும் புத்தேரித்தென்றலும் தமிழன் வாழ்க்கையிலே கலந்து புதிய ஜீவனைக் கொடுக்கின்றன. புயலை வீசிய பாரதியாரைப்பற்றி நாம் வேண்டியமட்டும் அறிந்திருக்கிறோம். தென்றலைத்தரும் கவிமணியை இப்பொழுது அறிந்து கொள்ள வேண்டும். கவிதை இன்பத்தைப் பூரணமாக அனுபவிப்பதற்குக் கவிஞனைப் பற்றின அறிவு அதிகம் துணை செய்யும்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நாஞ்சில் நாட்டுக் கவிஞர். பண்டைச் சேரநாட்டில் இன்றும் தமிழ்வழங்கும் பிரதேசமாக மிளிர்வது நாஞ்சில்நாடு, தோவாளை,

நாஞ்சில் நாடு. அகஸ்தீஸ்வரம் என்ற இரண்டு தாலூக்குகளை உள்ளடக்கி, பொதிகை மலைக்கும், குமரிக் கடலுக்குமிடையில் நெருங்கிக் கிடக்கும் நிலப் பரப்புத்தான் நாஞ்சில்நாடு. இந்நாட்டு மக்கள் ‘எங்கள் நாஞ்சில் நாடு’ என்று பெருமையாகக் கூறிக் கொள்வார்கள். அதற்கு எவ்வளவோ காரணங்களுண்டு. இங்கு காடெல்லாம் செந்நெல் கழனியாக இருப்பது இந்நாட்டு வளப்பத்தைக் காட்டும்; இங்கு மலைகளிலெல்லாம் அலையின் ஓசை கேட்கிறது என்றால் இந்நாட்டுத் திணைமயக்கத்துக்கு அது எடுத்துக் காட்டு; இங்கு ஜாதி, மத பேதமின்றி மக்களெல்

லாம் ஒரே குடும்பமாக வாழ்கின்றார்கள் என்றால் அவர்கள் உள்ளத்திலே கொழுந்துவிடும் தமிழ் ஆர்வத்தைத்தான் அது காட்டும். இந்தத் தமிழார்வம் நாஞ்சில் நாட்டைக் கலைப் பண்ணையாகச் செய்துவருகிறது. இசைக்கு இலக்குமணப் பிள்ளை, இலக்கணத்திற்கு "செய்குத்தம்பி," இலக்கியத் திற்கு "வையாபுரி," நாடகத்திற்கு "சண்முகம்," கவிதைக்கு எங்கள் கவிமணி என்றெல்லாம் நினைக்கும்போது இது எங் கள் நாடு என்று பெருமிதத்துடன் கூறத்தான் தோன்றும். இந்த நாஞ்சில் நாட்டின் தலைநகர் நாகர்கோவில். நாகர்கோவி லுக்கு வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது புத்தேரி. இயற்கைத்தேவி இன்ப நடனம் புரியும் இந்தச் சிறு கிராமம்தான் தமிழ் நாட்டின் "ஸ்டார்ட்போடு ஆவனன்". இங்குதான் கவிமணி இன்று தன் தமிழ்த் தொண்டிலே ஈடுபட்டிருக்கிறார்.

கவிமணியைத் தன்னிடத்திலே வைத்துபுத்தேரி இன்று பெருமையடைகிறது. ஆனால் கவிமணி பிறந்தஇடம் புத்தேரி யன்று. சுசிந்திரத்திற்கடுத்த தேரூர் என்றபழம் பதிதான் கவிமணியைப் பெற்றெடுத்தது. மிகச் சிறுவயதிலேயே தான்பிறந்த இந்தக் கிரா மத்தைத் துறந்து வந்துவிட்டபோதிலும் இந்தக் கிராமத் தைக் கவிமணி என்றுமே மறந்ததில்லை. வாழ்க்கைச் சுழியிலே அகப்பட்டு எங்கெல்லாமோ அலைந்துகொண்டிருந்த 'ரூசோ' தான் பிறந்த இடத்தைப் பற்றி எப்பொழுதும் பெருமையா கவே எண்ணிக் கொண்டிருந்தானும். அப்படித்தான் கவிமணி யும் தேரூரைப்பற்றிப் பெருமை பேசிக் கொள்வார்கள். அவர் பிறந்த ஊரை எவ்வளவு தூரம்புகழமுடியுமோ அவ்வ ளவு தூரம் புகழ்ந்திருக்கிறார் கவிமணி.

பிறப்பு.

'தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும் உதிர்கின்ற
செறிமரச் சோலை சூழும்
தென் விரதபுரி"
பொங்கிடுங் குரவையிட் டெங்குமோரொலி செய்து
பொலிவாக மள்ள ரெல்லாம்
சேற்றுப் பெருக் கூடு நாற்றைப் புதைக்கின்ற
செய்யகஞ் சூழுமூராம்
தென் விரத புரி"

செந்தமிழ் மணத்தினொடு செல்வர் மணமுங் கொடைச்
செங்கைதரு மணமுமாறுத்
தென் னிரத புரி''
என்றெல்லாம்“கவி அழகம்மை ஆசிரிய விருத்தத்தில்'' பாடிக் களிக்கும் வார்த்தைகளிலே அவரின் பிறந்த பதியை அவர் எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பது வெளியாகிறது.

“தெண்டிரையுடுத்த பூமண்டலத்தே வந்த தேவபுரி யொத்த' இந்தத் தென்னிரதபுரியில் கி. பி. 1867-ல் ஆடி மீ 14-வ ஆயிலிய நக்ஷத்திரத்தில் தமிழன்னை செய் தவப்பய னாகப் பிறந்தார் நம் தேசிக விநாயகம் பிள்ளை.

நாஞ்சில் நாட்டில் திரு. பிள்ளையவர்களின் குடும்பம் மிகப் பெரிது. செல்வச் சிறப்பும் அறிவுப்பெருக்கும் பரம்பரையாக அவர்கள் குடும்பத்திற்குண்டு.

மரபு. திரு. சிவதாணுபிள்ளை என்பவர் கவியின் தந்தை. அவர் நாஞ்சில் நாட்டில் முதல்முதல் ஆங்கிலங் கற்ற மிகச் சிலருள் ஒருவர். அரசாங்கப்பதவியில் அவர் நெடு நாளிருந்து பேரும் புகழும் பெற்றார். ஆதிலெக்ஷிமியம்மாள் கவியின் தாயார். நம் கவிமணிக்குக் கிடைத்த தமிழ் அறிவு ஆதிலெக்ஷிமி அம்மாளின் வழியாகக் கிடைத்த பரம்பரை சொத்து. கவியின் அன்னையார் பிறந்த இடம் நாகைப்பட்டி னம். அங்குக் கப்பல் வியாபாரம் செய்து வந்த ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவர் அவர். கால நிலை காரணமாக தொழி லிலே நஷ்டம் ஏற்படவே, ஆதிலெக்ஷிமி அம்மையாரின் தந்தை தமது குடும்பத்துடன் நாஞ்சில் நாட்டில் வந்து குடி யேறினர். தே. வி. யின் தாய் வழிப் பாட்டனாகிய மாணிக்க வாசகம் பிள்ளை என்பவர் ஒரு மூத்தபிள்ளையாவர். பரம் பரையாகச் செல்வச் சிறப்பும் சீரும் பெற்றிருக்கும் சில ருக்கு மூத்தபிள்ளை என்ற பட்டம் அரசாங்கத்தாரால் அன்று அளிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் பிரபு (Lord) பட்டம் அளிப் பதைப் போன்றே நாஞ்சில் நாட்டில் மூத்தபிள்ளைப் பட்ட மும் அளிக்கப்பட்டு வந்தது. அந்தப் பட்டங் காரணமாக சமூகத்திலே அவர்களுக்கு விசேஷச் செல்வாக்குகளும் அர சாங்கத்திலே சலுகைகளும் கிடைத்து வந்தன. அத்தகைய ஒரு மூத்தபிள்ளை தான் மாணிக்க வாசகம் பிள்ளையும். இவர்

ஒரு சிறந்த தமிழ் வித்துவானாக அக்காலத்தில் திகழ்ந்தார். தாமரைக்குளம் என்ற கிராமத்திலிருக்கும் சாஸ்தாமீது "காரியந்தாதி' என்று ஒருநூல் எழுதி அவர் வெளியிட்டிருக்கிறார்.

தே.வி.யின் மாமனார் பாலசுப்ரமணியப்பிள்ளை என்பவர். அவர் ஒரு பௌராணிகர். அவரின் கம்பராமாயணப் பிரசங்கத்துக்கு அப்பொழுது நாட்டில் பெருமதிப்பு இருந்தது. கவியின் அத்தானாகிய சங்கரநாராயணப்பிள்ளை ஒரு சிறந்த அறிஞர். தமிழ்ப்பற்று மிகுதியுமுடையவர். மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இப்படிப் பலவழியிலும் பரம்பரையாக தமிழ் ஆர்வத்தில் மூழ்கி இருந்த குடும்பத்தில் பிறந்த நம் தே. வி. மிகச் சிறு வயதிலேயே தமிழ் ஆர்வத்தில் திளைத்துக் கொண்டிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

படிப்பும் இளமையும்.

திரு. பிள்ளையவர்கள் உரிய காலத்தில் பள்ளிக்கூடம் சென்றார்கள். அந்தக் காலத்தில் இந்தநாட்டுப் பள்ளிக்கூடங்களில் மலையாள பாஷைதான் படித்துக் கொடுப்பார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளெல்லாம் தம் ஆரம்பக் கல்விக்கு மலையாளபாடசாலைகளுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் அந்தக்காலத்திலிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலிருந்த அந்தக்காலத்து இளைஞர்களின் மனவேதனையை "அடியேன் கடையேன், அறியாச் சிறியேன், கொடு மலையாளக் குடியிருப்புடையேன்" என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சித்திரித்துக் காட்டுகிறார். தமிழ் நாட்டிலே தமிழர்களுக்கென, தமிழ்மொழி போதிக்கும் பாடசாலைகள் வேண்டுமென இங்குப் பல கிளர்ச்சிகள் நடந்தன. பேரறிஞர் சிதம்பரம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போன்ற சிறந்த தமிழ் பக்தர்களின் பெருமுயற்சியால் நாஞ்சில் நாட்டில் இப்பொழுது தமிழ்ப் பாடசாலைகள் ஏற்பட்டுவிட்டன. தமிழர்கள் தமிழைப் படிக்க இப்பொழுது வசதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திரு. பிள்ளையவர்களின் பிள்ளைப் பிராயத்திலே இங்குத் தமிழ்ப் பாடசாலைகளே கிடையா. ஆகவே தமிழுக்கெனவே பிறந்திருந்த அவர்கள் முதல் முதல் மலையாள பாஷையைத்தான் படித்தார்கள். பரம்பரை

யாகக் கிடைத்த தமிழறிவு களிக்கு அப்பொழுது இருந்த தாயினும், முறையாகத் தமிழைக் கற்று பண்டிதனுகி விட வேண்டுமென்று அவர் சிறுவராக இருக்கும்போது நினைக்க வேயில்லை. ஆங்கிலமோகம் புதுமையாகப் பூத்தகாலம் அது. ஆங்கிலம் படித்த இளைஞர்களுக்கு ஏகப்பட்ட மதிப்பு இருந்தது சமூகத்தில். அரசாங்கப்பதவியில் எளிதில் அமருவதற்கு ஆங்கலப் படிப்பு ஒத்தாசை செய்தது. எனவே அந்தக் காலத்தின் சூழ்நிலைகளுக்கு ஒத்து, திரு. பிள்ளையவர்களும் ஆங்கிலங்கற்று பெரிய அரசாங்கப் பதவியில் அமர்ந்துவிட வேண்டும் என்றுதான் நினைத்தார்கள். இந்த எண்ணம் இருந்ததினுல் மலையாள பாஷையையும் அவர்கள் வெறுப்பின்றி படித்து வந்தார்கள். ஆனுல் தமிழ்த் தெய்வம் வேறு விதமாக அவரது வாழ்க்கையை எழுதிக்கொண்டிருந்தது. தன் பலம் தனக்குத் தெரியாது என்பார்கள். அதுபோலவே சில மேதாவிகள் விஷயமும். அவர்கள் தங்களைச் சுற்றியிருக்கும் சூழ்நிலைகளுக்கு ஒத்து தங்கள் வாழ்க்கையை உருவாக்க நினைப்பார்கள்; ஆனுல் அவர்களையும் மீறிய ஒருசக்தி அவர்கள் வாழ்க்கையை வேறுவழியாகத் திருப்பிக்கொண்டே போகும். சட்டம் படித்து பெரிய வக்கிலாகிவிடவேண்டுமென்றுதான் மகாத்மா காந்தி சிறுபிராயத்தில் எண்ணினுர்; ஆனுல் அவரின் வாழ்க்கை வேறுவிதமாகத்தானே அமைந்துவிட்டது. எல்லா மேதாவிகள் விஷயத்திலும் இது சர்வ சாதாரணமாக நடப்பது; கவிமணியின் வாழ்க்கையிலும் அப்படித்தான் நடந்தது.

தேரூர்க் கிராமத்தின் பிரசித்தி பெற்ற குளத்தினருகே வாணன்திட்டு என்றொரு மடமுண்டு. அடிக்கடி சிவபக்தர்கள் இந்த மடத்தில் வந்து சிறிதுநாள் தங்குவார்கள். அப்படி வருபவர்களில் சில ஆஷாடபூதிகளும் சிலசமயம் வருவதுண்டு. அவர்களை எப்படித்தான் அந்த ஊர் வாலிபர்கள் கண்டு விடுவார்களோ தெரியாது. அந்த வாலிபர்கள் அவர்களைப் படாத பாடுபடுத்தி வைப்பார்கள். அவர்கள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இரவோடு இரவாகக் கம்பி நீட்டி விடுவார்கள். இப்படிச் செய்வதில் அந்த ஊர் வாலிபர்களுக்குப் பெரிய உற்சாகம். அந்த வாலிபக்கூட்டத்தில் திரு. பிள்ளையவர்களும் பங்கு கொள்ளத் தவறுவதில்லை.

குருவும், சீடரும்.

இந்த வாணன்திட்டு மடத்திற்கு ஒருநாள் திருவாவடுதுறை மடத்தைச் சேர்ந்த ஒரு சிவபக்தர் வந்தார். சாந்தலிங்கத்தம்பிரான் என்பது அவர் பேர். ஸ்ரீ. தம்பிரான் அவர்களுக்குத் தமிழிலே நல்ல பயிற்சியுண்டு. திரு. தே. வி. யவர்களுக்குத் தமிழிலே ஆர்வமூட்டியவர் இவர் தான். மடத்திலே வந்திறங்கியிருக்கும் இந்தப் புதிய பக்தரைப் பதம்பார்ப்பதற்காக காலையில் அங்கே சென்ற வாலிபர்களுடன் திரு. பிள்ளையவர்களும் சென்றார்கள். இந்தச்சமயத்தில் வாலிபர்களின் காரியம் பலிக்கவில்லை. அவர்கள் நழுவிவிட்டார்கள். ஆனால் திரு. பிள்ளையவர்களுக்குமட்டும் ஸ்ரீ. தம்பிரானிடத்தில் ஏதோ ஒரு விதமானபாசம் ஏற்பட்டது. அது காரணமாக அவர்களுக்குள் நட்பும் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் ஐந்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ. தம்பிரான் தம் இளநண்பரை அழைத்து அன்பாக நெடுநேரம் உரையாடுவார். இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கவே, நம் தே. வி. யின் உள்ளத்திலே பதுங்கி இருந்த மேதாவிலாசம் ஸ்ரீ. தம்பிரானுக்குப் புலப்பட்டது. அவர் விளையாட்டாக எழுதிய ஒன்றிரண்டு தமிழ்ப் பாடல்களும் ஸ்ரீ. தம்பிரான் காணநேரிட்டது. ஒருநாள் அவர், தே. வி. யை தம் அருகிலே அழைத்து "எதிர் காலத்தில் நீ ஒரு பெரிய கவியாக விளங்கப் போகிறாய். அதற்குரிய சின்னங்கள் உன்னிடம் மலிந்து காணப்படுகின்றன. அவைகளை நீ பண்படுத்தி வளரச் செய்யவேண்டும்" என்று உபதேசித்தார். ஒரு மகான்; பக்தர்; தமிழிலே தேர்ந்த அறிவு பெற்றவர் தம்மைப் பார்த்து இந்த வார்த்தைகள் உரைத்ததும் அந்த இளங்கவிஞருக்கு எங்குமில்லாத உற்சாகம் பொங்கிற்று. ஆங்கிலம் படித்து அரசாங்க சேவை புரியவேண்டுமென்று நினைத்திருந்த நம் வாலிபப்புலவருக்கு தமிழிலே ஆர்வம் பிறந்தது. தமிழ் படித்து தமிழுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுது மனதிலே மலர ஆரம்பித்தது. எனவே திரு. பிள்ளையவர்கள் ஸ்ரீ. தம்பிரானிடமே தமிழ் படிக்க ஆரம்பித்தார். பள்ளிக்கூடத்திற்குச் சென்று மாலையில் திரும்பியதும் நேராக மடத்திற்குச் சென்று தமிழ் கற்று வரலானார். தேவாரம், திருவாசகம், கம்ப ராமாயணம் முதலிய தமிழ் நூற்களை ஸ்ரீ. தம்பிரானிடம் பாடங் கேட்டு,

அவைகளிலே மனம் லயித்து இரவு வெகுநேரம் வரை அங்கேயே தங்கி விடுவார். திரு. பிள்ளையவர்கள் இவ்விதம் தமிழ் கற்று அதிலே அதிகத் தேர்ச்சியுமடைந்தார். நாட்டின் நிலைமை காரணமாக மலையாள மொழியையும், புதுமை மோகம் காரணமாக ஆங்கில மொழியையும் பள்ளிக்கூடத்திலும், கலாசாலையிலும் படித்து வந்தபோதிலும், அந்த மொழிகள் பிள்ளையவர்களின் தாய்மொழிப் பயிற்சிக்கு இடையூறு செய்யவேயில்லை. தேசத்தின் பொது வாழ்க்கையைக் கருதி ஒரு புது மொழியை மாணவர்கள் படிக்க ஆரம்பித்தால் அவர்களின் தாய்மொழி அழிந்து மறைந்துவிடும் என்று கருதுபவர்கள், நம் கவிமணியின் இளமைப் பிராயத்தைச் சிறிது உற்றுப் பார்க்க வேண்டும். உண்மையில் தாய் மொழிப் பற்று யாரிடமிருக்கிறதோ அவர் எத்தனை வேற்று மொழிகள் பயின்றாலும் அவரின் தாய்மொழி அதனால் தாழ்ந்து விடாது. அழிந்து விடாது.

உத்தியோகமும், ஓய்வும்.

பிறகு திரு. பிள்ளையவர்கள், எப். எ, (இப்பொழுது இன்டர் மீடியேட்) வகுப்புடன் ஆங்கிலப் படிப்புக்கு வந்தனம் கூறிவிட்டு, போதனைமுறைக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியர் வேலைக்குப் படித்துத் தேர்ந்தார்கள். 1901-ம் ஆண்டில் அவர் அரசாங்கத்தில் ஆசிரியராக வேலைபெற்று தம் இளம் பிராயத்தின் அபிலாஷையையும் நிறைவேற்றினார். கோட்டாறு, திருவனந்தபுரம் முதலிய இடங்களிலுள்ள கலாசாலைகளில் உதவி ஆசிரியராக வேலைபார்த்து, படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று, கடைசியில் திருவனந்தபுரம் மகளிர் கல்லூரியில் தமிழ்ப் போதகாசிரியரானார். கல்லூரியில் தமிழ் போதகாசிரியராக வேலை பார்ப்பதற்குவேண்டிய சர்வகலாசாலைப் பட்டங்கள் ஒன்றும் திரு. பிள்ளையவர்களுக்கு இல்லை. இந்த விஷயம் அப்பொழுதிருந்த கல்வி அதிகாரிகளை மிகவும் குழப்பிற்று. ஆனால் கல்லூரித் தலைமை ஆசிரியையாக இருந்த மிஸ். வாட்ஸ் அம்மையார் (திவான் மிர். வாட்ஸின் சகோதரி) திரு. பிள்ளையவர்களுக்குப் பட்டங்களொன்றும் தேவை இல்லை என்றும், அவரே அந்த வேலைக்குத் தகுதியுடையவரென்பது தனக்கு நன்றாகத் தெரியுமென்றும், அரசாங்கத்தாருக்கு எடுத்து விளக்கி, அவர்களைத்திருப்தி

செய்தார். திரு. பிள்ளையவர்கள் ஆசிரியராக இருந்த காரணத்தினால், மாணவ மாணவிகளின் உள்ளப் பாங்கை நன்றாக அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது. பக்கம் பக்கமாக புத்தகங்களில் எழுதியிருக்கும் கதைகளையும் கருத்துக்களையும், சின்னஞ்சிறு எளிய வார்த்தைகளினால் அமைந்த பாட்டுக்களினால், சிறுவர்களுக்கு எளிதில் புகுத்திவிடலாம் என்பதை அனுபவ பூர்வமாக அறிந்த, அதற்காக அவர் பல சிறு பாட்டுகளை அப்பொழுதே எழுதினார். சைக்கிள் பாட்டு முதலியன அந்த ரகத்தைச் சார்ந்தவை. அவரின் பாட்டுகளடங்கிய புத்தகம் (சிறுபாமாலை) அப்பொழுதே தமிழ் ஆரம்பப்பாடசாலைகளுக்குப் பாடபுத்தகமாக விளங்கியது. இன்று நாற்பது வயதிற்கு உட்பட்ட நாஞ்சில் நாட்டு ஆண்களும், பெண்களும், ஆரம்பப் பாடசாலைகளில் படித்துக்கொண்டிருக்கும்போது 'தங்கையே பார், தங்கையே பார்; சைக்கிள் வண்டி இதுவே பார்' என்று சதா பாடிக்கொண்டிருந்தவர்கள்தான். சுமார் இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்னாலேயே கவிமணியின் பாடல்களில் நாஞ்சில்நாட்டு சிறுவர்களும் சிறுமியர்களும் இன்பத்தைக் கண்டு ஆனந்தித்தார்கள். கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் படித்துக்கொண்டிருக்கும் வாலிபர்கள், 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதியிலிருந்து ஒரு பாட்டைத் தங்கள் வீட்டிலிருந்து படிக்க நேர்ந்தால் அவர்களின் தாய் அல்லது தந்தை ஓடிவந்து, "இது யார் பாடினது? சைக்கிள் பாட்டு பாடினவரா?" என்று கேட்பது நமது வாலிபர்களுக்கு ஒரு புதினமாகவே தோன்றும். தமது மேலதிகாரிகள், தோழர்கள், மாணவர்கள் முதலிய யாவரின் மனங்களையும் குதூகலப்படுத்திக்கொண்டு கருமமே கண்ணாயிருந்த ஆசிரியர் தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் கி. பி. 1931-ல் உதவி சம்பளம் பெற்று வேலையிலிருந்து ஓய்வுபெற்றார்கள்.

திரு. தே. வி. யவர்கள் இப்பொழுது புத்தேரியிலிருந்து தமிழ்ப் பணி செய்துவருகிறார். முப்பது வருடங்களுக்கு அதிகமாகவே நாஞ்சில் வாசிகளின் அன்புக்குப் பாத்திரமான அவரின் மேதாவிலாசம் இன்று தமிழ் நாடெங்கும் பூரணமாக ஒளியுடன் பிரகாசிக்கிறது. அவரை நேரில் காணவும், அவரிடம்

கவிமணி.

தமது அன்பைத் தெரிவிக்கவும் தமிழ்நாட்டுத் தலைவர்களும் அறிஞர்களும் போட்டியிட்டு முந்துகிறார்கள். 1940-ம் வருடம் நடந்த ஏழாவது சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு அவரின் கவிதாவிலாசத்தைத் தமிழ்நாடு அங்கீகரித்ததற்கு அறிகுறியாக அவருக்குத் 'தமிழ்க்கவிமணி' என்ற சிறப்புப்பெயரைச் சூட்டித் தனது அன்பைத் தெரிவித்தது. அதுமுதல் தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் கவிமணி என்றே பொதுவாக அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டின் முடியுடைவேந்தர்கள் விட்டுச்சென்ற தமிழ்ப்பணியைத் தொடர்ந்து நடத்திவரும் தமிழ்நாட்டரசர் ராஜா சர். அண்ணாமலைச்செட்டியாரின் தலைமையில், செட்டிநாட்டு மக்கள் கவிமணியை அழைத்து அவருக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சென்னைப் பிரதமராக இருக்கும்போது புத்தேரிக்கு வந்து கவிமணியைத் தரிசித்தார். அந்தச் சமயத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் ருசி நிறைந்ததாகும். புத்தேரிக்குப் போகுமுன் நாகர்கோவிலில் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருந்தார் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார். "கவிமணியைக் காணப்போக வேண்டும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று ராஜாஜி தம் நண்பரிடம் கூறினதும் "அவர், நாம்போகவேண்டுமா? ஒரு மோட்டாரை அனுப்பி அவரை இங்கே வரச் சொல்லுவோம்" என்று சாதாரணமாகச் சொல்லி விட்டார். அந்தச் சொல் காதில் விழுந்ததோ இல்லையோ ராஜாஜி திடுக்கிட்டவரைப்போல் திரும்பிப்பார்த்து "ஐயோ அது அடுக்காது- அவர் மகான்- அவர் கலைத்தெய்வம். அந்தத் தெய்வத்தை நாம்தான் போய்த் தரிசிக்க வேண்டும்" என்று மறுமொழி கூறினார். அவரின் நண்பரின் முகத்தில் ஈயாடவில்லை. அதன் பிறகு அவர்கள் இருவருமாகவே புத்தேரிக்குச் சென்றார்கள். கவிமணியின் மேதையையும் ராஜாஜியின் அடக்கமான பெருந்தன்மையையும் அப்பொழுது அங்கு கூடி நின்றவர்கள் கண்டு பிரமித்து நின்றனர்.

கவிமணியின் தமிழ்த் தொண்டில் கவிதை ஒரு சிறு அம்சம் மட்டுமேயாகும். கவிமணி தமிழ் நாட்டின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர். தமிழ் நாட்டின் பண்டைக்கால சிலாசாசனங்களில் பலவற்றை கவிமணி ஆராய்ந்து வெளியிட்டிருக்

கிறார். தமிழ் நாட்டின் சரித்திர சம்பந்தமான எவ்வளவோ பெரிய சிக்கல்கள் அவரின் ஆராய்ச்சிக் கூர்மையால் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தொண்டு

பண்டைக்கால ஓலைச்சுவடிகளை சேகரிப்பதிலும் அவைகளை ஆராய்ச்சி செய்வதிலும் அவருக்கு அலாதியான மோகம். திருவிதாங்கூர் சர்வகலாசாலைக்கு கவிமணி எவ்வளவோ சுவடிகளை சேகரித்துக் கொடுத்திருக்கிறார். அவர் எழுதி வெளியிட்டிருக்கும் 'காந்தளூர்ச்சாலை' என்ற ஆங்கில நூல் அவரின் ஆராய்ச்சித் திறமையை பறைசாற்றிக்கொண்டிருக்கிறது. (இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை புத்தகத்தின் கடைசியில் காண்க). "காந்தளூச்சாலை"யில் கவிமணி கையாண்டிருக்கும் ஆங்கில நடை தமிழ் நடையைப்போலவே எளிமையும் தெளிவும் உடையதாக இருக்கிறது. உதாரணமாக அதன் ஆரம்ப வாசகத்தைப் பாருங்கள் "The Field of research is neither a czardom nor a sultanate. It is a republic where even a humblest day labourer has a duty to perform and a right to express his views. Such or nearly such is the spirit that animates my pen to write the following lines:-"

கவிமணியின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சரித்திரக் கட்டுரைகளும் "கேரள சொசைட்டி பேப்பர்", வெஸ்ட்டேன் ஸ்டார், பீபிள்ஸ் வீக்லி, "ஜர்னல் ஆப் தி ஓரியண்டல் ரிசெர்ச்" போன்ற பிரபல பத்திரிகைகளில் வெளியாகியிருக்கின்றன. அவைகளெல்லாம் தமிழில் புத்தக வடிவமாக வெளிவரும் நாளை தமிழுலகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

II

கவிஞராகப் பிறந்தார்.

உண்மைக் கவிஞன் கவிஞனாகப் பிறக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். அதில் எவ்வளவோ உண்மைகள் உண்டு. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதைப்போல் எதை யாவது கவிதை என்று தப்பாக நினைத்துக்கொண்டு "கவிதை, வெறும் கைப்பழக்கம் தானே" என்று எண்ணுபவர்கள் இலக்கிய உலகில் இடறி விழ நேரும். நிகண்டுகளிலிருந்து சொற்களைத் தேடி எடுத்து இலக்கணக் கூண்டுக்குள் அடைத்து "இதோ கவிதை" என்று காட்டுவார்கள் சில விந்தை மனிதர்கள். வர்ணத்தாளைக் கத்தரித்து, தன் கைத் திறனையும் காட்டி 'இதோ ரோஜாமலர்' என்று கெட்டிக்காரன் கூறிவிட்டால் அது ரோஜாவாகிவிடுமா? ரோஜாமலர் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் செடியில் கருவாகவேண்டும்; இயற்கையின் பராமரிப்பு அதை மலரச்செய்யவேண்டும். கவிதையும் அவ்விதமே. கவிஞரின் மனதிலே கருவாகவேண்டும். இயற்கையாக அரும்பி மலரவேண்டும். அந்தக் கவிதையில்தான் உயிர்த்துடிப்பு இருக்கும்.

"சேயின் இளநகையைப்போலே-எழும்
செங்கதிரின் தங்கவொளி போலே
தாயின் முலைப்பாலைப்போலே-பொங்கித்
தானாய் வருவதுவே கவிதை" என்று ஸ்ரீ சுத்தானந்தபாரதி கவிதைக்கு இலக்கணம் வகுக்கிறார். ஒரு அன்புச்சொல் அல்லது ஒரு இன்பக்காட்சி பச்சிளங் குழந்தைகளின் கள்ளமற்ற உள்ளத்தைக் கவர்ந்துவிடும். அந்த கவர்ச்சி குழந்தையின் மனதிலே இன்ப உணர்ச்சியை ஊட்டுகிறது. பேசமுடியாத காரணத்தால் குழந்தையின் குறுகுறுத்த முகத்திலே இன்ப உணர்ச்சி புன்னகையாகப் பரிணமிக்கிறது. அந்தப்புன்சிரிப்பு குழந்தையின் கவிதை- எழுதாத கவிதை- அந்தக்கவிதையைக் காணும் தாயுள்ளம் இன்ப

வெறியடைகிறது. கவிஞன் வயதுவந்த குழந்தை. அவன் உள்ளத்திலே சிலசமயம் இன்ப உணர்ச்சி ஊற்றெடுத்துச் சுரக்கும். எழுதத்தெரிந்த காரணத்தால் அந்த உணர்ச்சியை கவிஞன் எழுத்து வடிவத்திலே சித்திரிக்கிறான். அது அவனின் கவிதை-எழுதிய கவிதை. இதைப்படிக்கும் நாமெல்லாம் இன்ப வெறியில் மனதைப் பறிகொடுக்கிறோம்.

"உள்ளத்துள்ளது கவிதை-இன்பம்
உருவெடுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில்-உண்மை
தெரிந்துரைப்பது கவிதை." என்று கவிமணியும் கூறுகிறார். எனவே கவிதை கடைச்சரக்கல்ல. சொற்களை வைத்துக்கொண்டு பண்டிதன்செய்யும் செப்படிவித்தையை கவிதையென்று கருதுவது தப்பு. கவிஞனின் உள்ளத்துள்ளது கவிதை. கவிதா உள்ளம் பிறவியிலே அமைவது. கவிஞன் கவிஞனகவே பிறக்கிறான். கவிமணி பிறவிக்கவிஞர். அவர் கவிஞராகப் பிறந்தார். அவரின் பிள்ளைப் பிராயத்தின் சில சம்பவங்கள் அதைத் தெளிவாக்குகின்றன.

கவிமணியின் கவிதா சக்தி மிகச்சிறு வயதிலேயே அவரிடம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அவர் விளையாட்டுப் பிள்ளையாக இருக்கும்போதே சின்னஞ்சிறு பாட்டுக்கள் எழுதுவது வழக்கம். ஆனல் அதை அவர் யாரிடமும் காட்டமாட்டார். அலெக்சாந்தர் போப் என்ற மேல்நாட்டுப் புலவர் இளம் வயதில் பாட்டுக்கள் எழுதி அந்தத் தாளைக் கிழித்து பட்டங்கள் செய்து விடுவாராம். அதைப்போலவே நம் கவியும் சிறுவயதில் நடந்து கொண்டார். விதம் விதமான எண்ணங்கள் அவர் உள்ளத்திலே உதயமாகும். அதை அவர் தன் கையில் கிடைக்கும் தாள்களில் எழுதிவிடுவார். பிறகு ஒளிந்த இடத்தில் போய் இருந்து அந்தப் பாடல்களைத் தமக்குத்தாமே பாடி மகிழ்வார். அந்தப் பாடல்களை யாராவது பார்த்துவிடக்கூடாது என்பதற்காக பிறகு அந்தத்தாளைக் கிழித்து விடுவார்; அல்லது சிறு சிறு கப்பல்களாகச் செய்து தேரூர்க் குளத்திலே மிதக்கவிட்டு வேடிக்கை பார்ப்பார். கவிமணியின் பிள்ளைப்பிராயத்துப் பாடல்களைத் தாங்கிச் சென்ற எத்தனையோ காகிதக் கப்பல்களைத் தேரூர்க்குளம் கண்டு மகிழ்ந்ததுண்டு.

கோடிப் பொன்னைக் கொடுத்தாலும் நெகிழாத புலவன் உள்ளம் சிலசமயம் தன் சொந்த சிருஷ்டிகளைக்கண்டு விம்மு தலடையும். கவிதாவிலாசம் பூரணவளர்ச்சியடைந்த பெரும் புலவனுக்கே உரியதான கம்பீர உள்ளத்துடன் திரு. பிள்ளைய வர்கள் தன் சிறுவயதில் ஒருநாள் இருந்தார். அன்று அவர் ஒரு பாடலை எழுதிக்கிழித்திருந்தார். வழக்கமான தனியிடத் தில் போய் அதைப் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்தார். அதன் பொருட்செறிவிலும், சொல்லாட்சியிலும், அவரே மயங்கி பாரெங்குமறியாத கர்வமடைந்தார். சில சிருஷ்டிப் பொருட்களின் அமைப்பின் ஒவியத்தைக் கண்டு அந்தச் சிருஷ்டிக்க கர்த்தாவே சிலசமயம் ஆனந்த வெறி கொள்வதுண்டாம். அந்த ஆனந்த வெறியை அடைந்தார் அன்று, இன்றையக் கவிமணி. ஆனால் தன்னையே பரவசப் படுத்திய இந்தப் பாடல் தன்னையொத்த மற்றப் பிள்ளை களையும், வேறு ரசிகர்களையும் கவர்ச்சி செய்கிறதா என் பதை அறிய அவர் மனம் ஆசைகொண்டது. தனது எழுத் துக்களைப் பிறர் எப்படி ரசிக்கிறார்கள் என்பதை அறிவதில் ஒரு எழுத்தாளனுக்கு உள்ள ஆர்வத்திற்கு இணையாக உல கத்தில் வேறு எந்த ஆர்வத்தைத்தான் கூறமுடியும்? அதி லும் ஒரு புலவனுக்கு அந்த ஆர்வம் கரைபுரண்டு சிலசம யம் போவதுண்டு. புலவனின் சிருஷ்டிகள் உலகத்துக்கு உரியன. உலகம், அதை எப்படி ஏற்றுக்கொள்கிறது என் பதை அறிய ஆசைப்பட்டுவிட்டால் பிறகு அதைத் தடை செய்யவே முடியாது. கவிக்கும் அந்த ஆசைதான் அப்பொ ழுது. ஆனால் அதை எப்படி அறிந்துகொள்வது? பிறரிடம் அதைக்காட்டி அபிப்பிராயம் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்களோ என்ற பயம் ஒருபக்கம்; அதைக் காட்டு வது எப்படி என்ற நாணம் ஒருபக்கம். கடைசியாக அவர் ஒரு தந்திரம் செய்தார். ஒருநாள் காலையில் வகுப்பு ஆரம் பிக்குமுன் தனியாகத் தான் படிக்கும் பாடசாலைக்குச்சென்று தன் பாடல் எழுதியிருந்த தாளை ஆசிரியரின் மேசைக்கடி யில் போட்டுவிட்டு யாருமறியாமல் வந்துவிட்டார். பிறகு பள்ளிக்கூடச் சமயம் வந்ததும், தனது நண்பர்களுடன் வகுப் புக்குச்சென்று ஒன்றுமறியாதவர் போல் இருந்துகொண்டார். வகுப்புக்குவந்த ஆசிரியர் கண்ணில் அந்தத் தாள் பட்டது. அதை அவர் எடுத்து பிரித்துப் பார்த்தார். கவி ஆசிரியரின்

கண்களையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். அவர் அந்தப் பாடலைப் பல்முறை தன் மனதுக்குள்ளேயே படித்துப் பார்த்தார். பிறகு தாளை மேலும் கீழும் புரட்டினார். எழுதியது யாரென்று தெரியவில்லை. ஆனால் அந்தப் பாடலின் சுவையிலே ஆசிரியர் லயித்துவிட்டார். பிறகு அவர் அந்தப் பாடலை தன் வகுப்பு மாணவர்களுக்குப் படித்துக் காட்டி அதன் அருமை பெருமைகளைத் தெளிவாக விளக்கி இது ஒரு அற்புதமான கவிதை என்று கூறி முடித்தார். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தார் நம் பால்ய புலவர். உள்ளத்தில் இன்பம் தாண்டவம் புரிந்தது. தனது சிருஷ்டி ஒப்பற்றது, தான் கவிஞர் என்பதை அவர் மனம் அறிய ஆரம்பித்தது.

தே. வி. ஆங்கிலம் இரண்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கையில் ஒரு சம்பவம். தேரூர்க் கிராமத்தில் 'நல்லமாடன் கோவில்' என்று ஒரு தேவாலயம் இருந்தது. இந்தக் கோவிலில் ஆண்டுக்கொருமுறை கொடை. (திருவிழா) நடைபெறும். இத்தகைய கோவிலில் கொடை என்றாலே பேயாட்டமும், உயிர்ப்பலிகளும் என்றுதான் பொருள். நாஞ்சில் நாட்டில் இத்தகைய உயிர்ப்பலிகளும், கொடைகளும் இப்பொழுது மிகக் குறைவு. ஆனால் அந்தக் காலத்தில் எங்கு பார்த்தாலும் இந்தக் கொடைகள் கும்மாளியிட்டுக்கொண்டே இருக்கும்.

"பல்லடிக்கப் பம்பை யடிக்கப் பறையடிக்க
வில்லடிக்கக் கைவீசி மெய்விதிர்த்துக்-தொல்விடிபோல்
வாய்விட்டுக் கூவி மறிக்குருதி கொள்வரே
பேயாட்டால் வந்த பெரும் பித்து"

என்று, காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் K. N. சிவராஜ பிள்ளை இந்தக் கொடைகளை வர்ணிக்கிறார். இத்தகைய பேயாட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும்தான் அன்று நல்லமாடன் கோவிலிலும் நடந்தது. பேயாட்டம் முடிந்ததும் சாமிக்கு ஆடுகளும் கோழிகளும் பலியிடப்பட்டன. கூடி நின்ற இளைஞர்களும் வயோதிகர்களும் பக்தியுடன் இதைப் பார்த்து நின்றனர். அந்தக் கூட்டத்திலே திரு. பிள்ளையவர்கள் தம் தந்தையாருடன் இருந்தார். ஆனால் அவர்கள்

கண்முன்னிலையில் நடந்த இந்த உயிர்ப்பலிகள் அவருக்கு பக்தியை ஊட்டவில்லை. வேடிக்கையாகவும் இருக்கவில்லை. அதற்கு மாருக அவர் உள்ளத்திலே அது ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. இறைவனின் படைப்புக்களை இறைவன் முன் வதைசெய்வது தகுமா? கருணையே உருவான கடவுள் இதைப் பொறுத்துக்கொண்டிருப்பாரா? உலகத்திலே அறம் மலிய வழி செய்யாமல் இவர்கள் இந்த அநீதியைச் செய்கிருர்களே! என்ற எண்ணங்களெல்லாம் அவர் மனத்தில் கடல் அலைகள்போல் எழுந்து கொந்தளிப்பை உண்டுபண்ணின. கவிக்கு அதற்குமேல் அங்கே இருக்க முடியவில்லை. தன் தந்தையைவிட்டுத் தனியாகப் பிரிந்து சிறிது தூரத்தில் போய் அமர்ந்து சிந்தனையில் மூழ்கினுர். கருணை என்பது மனிதனுக்கு மட்டும்தானு? தெய்வங்கள் அதைக் கடைப்பிடிக்கவேண்டாமா? என்று அவரின் குழந்தையுள்ளம் கேட்டது. அதற்கு அவரின் கவிதாமேதை பதில் கொடுத்தது.

> "நாடியறம் தேடி யிடும் நற்றேனூர் தன்னிலமர்
> நல்ல மாடனென்றும் மறவனென்றும்
> கோடி பழிசெய்த பெருங்கொலைஞர் வேதம்
> கூறியதெனவே தெளிந்து கண்டு
> ஆடினுர் ஆடறுத்தார் அள்ளி யுண்டார்
> ஐயையோ பாரில் இக்கொடுமை அறிந்திலனே"

என்று அவர் பாடினுர்.

இந்த சம்பவம் நடந்தபோது அவருக்கு வயது பன்னிரண்டுதான். வேடிக்கைகளிலும் விளையாட்டுகளிலுமே மனம் செல்லும் இந்த சின்னஞ்சிறு வயதில் எவ்வளவு தெளிந்த மனத்தையும் புத்தி நுட்பத்தையும் பெற்றிருந்தார் என்று நினைத்துப் பார்க்கவேண்டும். தனது மூதாதையர் காலத்திலிருந்தே நடந்துவரும் பலி முறைகள் வேதத்தின் அனுமதி பெற்றிருக்கவே முடியாது என்று அவர் செய்த தீர்ப்பும் அதை வெளியிட்ட முறையும் அவரை ஒரு பிறவிக் கவிஞர் என்பதைப் பறைசாற்றுகின்றன. பிறவியிலேயே தே. வி. கருணையுள்ளம் படைத்தவர் என்பதற்குச் இந்த சம்பவம் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கவிஞர் வெகுகாலத்திற்கப்புறம் செய்த "ஆசிய ஜோதி" யில் பொங்கியெழுந்தோடும் கருணை வெள்ளத்தின் சுனை அவர் உள்ளத்திலேயே இருந்தது. கருணை, வீரம், சோகம் முதலிய பண்புகள் கவிதையில் முக்கிய இடம் பெற வேண்டுமென்று இப்பொழுது கவிமணி அடிக்கடி கூறுவார். கவிதையிலே இந்தப் பண்புகள் படியவேண்டுமானால் கவிஞனிடம் அவைகள் இயற்கையாகவே அமைந்திருக்கவேண்டும். கவிமணிக்குப் பிறப்பிலேயே அவைகள் அமைந்திருந்தன.

கவிமணியின் கவிதைத் தொகுதியிலேயே "அழகம்மை ஆசிரிய விருத்தம்" என்ற பாடல்கள் அற்புதமான பக்திப் பாடல்களாகும். தாயுமானார், பட்டணத்தார், அப்பர் முதலிய பழுத்த ஞானிகளின் கனிந்த உள்ளத்தின் சாயலை அப் பாடல்களில் காணலாம். உலக ஆசாபாசங்களை எல்லாம் துறந்து, இறைவன் பாதை ஒன்றையே மனதில் கொண்டு, பார்க்குமிடமெல்லாம் இறைவன் திருமேனியைக் கண்டு மகிழும் முற்றும் துறந்த முழுமுதல் ஞானியாய்க் காட்சி தருவார் கவிமணி அப்பாடல்களில். ஆனாலும், அப்பாடல்களை அவர் எழுதியபோது, அவர் துறவியல்ல, முனிவருமல்ல. வாழ்க்கையின் முகையவிழாத பருவத்தில்-ஆங்கிலப் படிப்பும் அரச சேவையும் என்று கனவு கண்டு கொண்டிருந்த தனது பதினான்காம் பிராயத்தில் அவர் அதைப் பாடினார். வாணன்திட்டில் ஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ்ப்பாடம் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர் பாடு என்றார்; தே. வி. பாடினார். அதுதான் அழகம்மை ஆசிரிய விருத்தம். அதில் ஒரு பாட்டு கீழ் வருவது.

"கொண்டலைக் கண்டனைய கூந்தலுங் குவியாத
கோகனக மொத்த முகமும்
குண்டலந் திகழ்கின்ற காதுமொப் பின்றியருள்
குடிகொண்ட நீண்ட விழியும்
தொண்டையங் கனிவாயும் வெண்முறு வலும் ஞான
சுதை தங்கு கும்ப தனமும்
துடியொத்த இடையுமொரு பிடியொத்த நடையுமுச்
சூலஞ் சுமந்த கரமும்

பண்டைநாள் சிவனோடு வாதாடி நடமிட்ட
பாதார விந்த மலரும்
பாலனேன் கண்டுகளி கூரவே திருவுளம்
பாவிக்க வேண்டு மம்மா!
தெண்டிரை யுடுத்தபூ மண்டலத் தேவந்த
தேவபுரி யொத்த புரியாம்
தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே!
தேவியழகம்மை உமையே"!

சாதாரணமாக ஸ்தோத்திரப் பாடல்களில் இறைவனைப் பாதாதி கேசமாகவே பாடுவது வழக்கம். ஆனால் மேலே காட்டிய பாட்டில் தேவியை கேசாதி பாதமாகக் கவி பாடியுள்ளார். ஸ்ரீ சாந்தலிங்கத் தம்பிரான் இதன் தாத்பரியத்தை அறியவிரும்பியதும், தே. வி. கீழ்க்காணும் பதிலைத் தந்தார். "ஐயா! பாதாதி கேசமாகப் பாடுவது மரபாக இருக்கலாம். ஆனால் தேவியை நான் தரிசிக்கச் செல்லும்போது, அருள் நிறைந்த அவள் முகமே என் கண்ணில் முதலில் படும். நானும் அந்த முகத்தைப் பார்த்தே எனது வணக்கத்தைச் செலுத்துவேன். இப்பொழுது தேவியை நான் பாடல்கள் மூலம் அஞ்சலிக்க நினைத்ததும் முதலிலே என் மனக் கண்முன் தோன்றியது அவளின் முகமேதான். ஆகவே அதிலிருந்தே அஞ்சலித்தேன்' என்று கூறினார்கள். ஸ்ரீ தம்பிரான் தன் சீடரின் அறிவுத் திறனைக் கண்டு அகமகிழ்ந்தார்.

அழகம்மை ஆசிரியவிருத்தத்திலே கவிஞரின் தெளிந்த ஞானத்திறனைக்காட்டும் கருத்துக்கள் எவ்வளவோ காணப் படுகின்றன.

"பத்திக்கும் என்மடப் புத்திக்கு மோயாத
பகையலால் பட்சமில்லை"
"காற்றுப் பெயர்ந்திடிற் காயமோ சூத்திரக்
கயிறற்ற பாவை யதனால்"

என்றெல்லாம் அவர்பாடுகிறார். "அன்பின் வெற்றி" என்ற பக்திப்பாடல்களைப் பாடிய நம் கவிஞர் பிறப்பிலே பெரும் பக்

தராகவே விளங்கினர் என்பதற்கு அழகம்மை ஆசிரிய விருத்தம் சான்று கூறும். கவிஞரின் இளம்பிராயத்தை சரியாகப்புரிந்து கொள்ளவேண்டுமானல் இந்த விருத்தப்பாக்களிலே நாம் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். வெளித்தோற்றத்திற்கு அவர் அன்று இளைஞர். ஆங்கிலப்படிப்பிலே மூழ்கியிருந்தார். அரசாங்கத்தில் பெரும் பதவி பெறவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனல் உள்ளத்திலே அவர்பெரும் பக்தர், கவிஞர், அறிஞராகவே இருந்தார். அவரின் புறஆசைகள் ஒருபுறம் வளர்ந்தன; அதே சமயத்தில் அவரின் கவிதா சக்தியும், மேதாவிலாசமும் இன்னொருபுறம் வளர்ந்தே வந்தன. ஒன்றையொன்று தாக்கிவிடாமல் அவைகள் வளர்ந்து வந்ததினல் இன்றும் நாம் தேசிக விநாயகம்பிள்ளையை மனிதர்களுக்குள் மகானகவும், கவிகளுக்குள் ஒரு மகா கவியாகவும் காணும் பாக்கியம் பெற்றிருக்கிறேம்.

கவிஞர் பாடிய ஆசிரிய விருத்தத்தைக் கண்டு மகிழ்ந்தவருள் பண்டித கணேச பிள்ளை என்பவர் ஒருவர். நாகர்கோவில் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். அவரின் தமிழ்ப் புலமையைக் கண்டு அந்தக்காலத்து அறிஞர்களெல்லாரும் வியந்து பேசுவார்கள். ஆசிரிய விருத்தத்திற்கு பண்டித கணேசபிள்ளையவர்கள் ஒரு சாற்றுக்கவி எழுதிக்கொடுத்தார். அது வருமாறு:—

மாவாருந் தேரூர் வளரழகம் மைவிருத்தப்
பாவாரும் மாலையன்பில் பார்த்தளித்தான் —நாவார
ஆசிகவி நாயகரும் ஆற்றி அகமகிழத்
தேசிகவி நாயகனுஞ் சேய்''

இந்தப் பாட்டிலே ஈற்றடியின் கடைசியில் காணும் **சேய்** என்ற சொல் கவிமணிக்கு ரசிக்கவில்லை. 'சேய்' என்பது உச்சரிக்கும்போது "சே" என்று இழிவுஓசையைக் கொடுக்கும் என்று எண்ணினர். உடனே அவர் பண்டிதரிடம் தனது எண்ணத்தைத் தெரிவித்து அதை மாற்றுவதற்கு அனுமதி கேட்டார். பண்டிதரும் மகிழ்ந்து சரி என்று ஒப்புக்கொண்டார். உடனே அந்தக் கடைசி அடியை, "தேசிகவி நாயகனும் தே', என்று மாற்றிக் கொண்டார். பண்டிதருக்கும் இது பிடித்தது.

வாலிபராகிய தே. வி. யின் திறனைப் பண்டிதர் வெகுவாகப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

இதைப் போன்று கவி தனது சிறு பிராயத்திலேயே எவ்வளவோ பாடல்களைச் செய்திருக்கிறார். அவரின் பாடல்களையும், அவர்பாடும் தோரணையையும் கண்ட கவிஞரின் அத்தான் திரு. சங்கர நாராயணபிள்ளை என்பவர் கவியிடம் ஏதோ சித்து இருப்பதாகக் கூறினாராம். சித்து இருந்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் அவர் கவிஞராகப் பிறந்தார், கவிஞராகவே வளர்ந்தார், கவிஞராகவே வாழ்கின்றார் என்பதை மறுக்க இயலாது. நாஞ்சில் நாட்டார் கவிஞரை "பாட்டா" என்று உரிமை கொண்டு அழைப்பார்கள். வயது காரணமாக அவர் "பாட்டா" அல்லர். அவர் "பாட்டா" வாகவே பிறந்தார். பாட்டாவாகவே வாழ்கிறார். அவர் நமக்குப் பாட்டா, வருங்கால சந்ததிகளுக்கெல்லாம் பாட்டா. எங்கள்பாட்டா நிரந்தரம் வாழ்க!

———

III

கவிமணியின் குண நயங்கள்.

பிரஞ்சுப் புரட்சிக்கு விதைதூவிய பேரறிஞன் ரூசோ. அவன் தன் எழுத்து வன்மையைவிட குணத்தின் வன்மையால் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருந்தான். இது அன்று மேல் நாட்டில். இன்று தமிழ் நாட்டில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தன் பாட்டுத் திறமையைவிட தன் குணத்தின் சிறப்பால் தமிழ்நாடு அனைத்தையும் தன்பால் ஆகர்ஷித்துக்கொண்டிருக்கிறார். மலரும் மாலையும் படித்துவிட்டு கவியை ஒருமுறையேனும் காணவேண்டும் என்று புத்தேரிக்கு வருபவர்கள், அவரின் குண விசேஷத்தால் இழுக்கப்பட்டு தம்மை மறந்து திரும்புவார்கள். வரும்போது கவிதையை நினைத்துக்கொண்டு வருபவர்கள், திரும்பும்போது கவிஞரை எண்ணிக்கொண்டே திரும்புவார்கள். கவிமணியின் வாழ்க்கையே ஒரு அழகானகவிதையாகும். கவிகளுக்குள் அவர் ஒரு மணிஎன்றால், மனிதர்களுக்குள் அவர் ஒருமகான். கவியின் பாடல்களில் எளிமையும் இனிமையும் கலந்து உறவாடுகின்றன என்றால், அவரின் வாழ்க்கையிலே அவைகள் படர்ந்திருக்கின்றன என்பதுதான் பொருள். கவிமணியின் வாழ்க்கைக்கும் அவரின் கவிதைகளுக்கும் பிரிக்கமுடியாத தொடர்புண்டு. கவிமணியைப் பொறுத்தவரையிலும் 'கவிதையைப் பார்' கர்த்தாவைப் பார்க்காதே என்ற பேச்சுக்கு இடமேயில்லை. மலரும் மாலையும் என்ற நூலிலே திரு. தேசிகவிநாயகம் பிள்ளையைக் காணலாம். திரு. தேசிகவிநாயகம் பிள்ளையின் வாழ்க்கையிலே மலரும் மாலையும் காணலாம். கவிமணியிடம் நேரில் பழகியிருப்பவர்கள் இந்த உண்மையை நன்கறிவார்கள்.

நோயினால் இளைத்துவிட்ட ஒற்றைத் தேகம், சற்று மங்கலான நிறம், இடுப்பிலே ஒரு மெல்லிய வேஷ்டி, கையிலே ஒரு புத்தகம், அறிவு தாண்டவமாடும் அகன்ற நெற்றி,

அன்பு கனிந்துருகும் அழகிய கண்கள். இப்படிப் பார்க்கலாம் கவிமணியைப் புத்தேரியில் எப்பொழுதும். மங்கிய மாலைப் பொழுதிலே கவிமணியை இப்படி நாம் பார்க்கும் போது, தனிமையில் திருவை நோக்கித் தவமிருக்கும் முனிவரேபோல் அவர் காணப்படுவார்.

தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமானவர் கவிமணியைக் காணவருகிறார்கள். வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் இருப்பவர்களையும் அங்குக் காணலாம். அமைச்சர் வருவார், ஆசிரியர் வருவார், ரசிகர்கள் வருவார்கள்; நண்பர்கள் வருவார்கள், பக்தர்களும் வருவார்கள், பஞ்சைகளும் வருவார்கள். அறிவுத் தெளிவை நாடி வருபவர்கள் கூட்டத்துடன் கவியின் பொருளுதவியை நாடி வருபவர்களும் இருப்பார்கள். யார் வந்தாலும் எப்பொழுது வந்தாலும் சரிதான். யார்? ஏன்? என்ற கேள்வி, கவிமணியின் வீட்டில் யாரிடமிருந்தும் வராது. கவிமணி தமிழ் நாட்டின் பொதுச் சொத்து என்பது அவர்களுக்குத் தெரியும்.

தம்மிடம் வரும் எல்லோரையும் கவிமணி இன்முகம் காட்டி வரவேற்பார்கள். அறிமுகமானவர்களானாலும் சரி, இல்லாதவர்களானாலும் சரி, முதலில் அவர்களைச் சந்தித்தும், "வாருங்கள்" "இருங்கள்" என்று கூறிவிட்டுத்தான் பேச்சை ஆரம்பிப்பார்கள். யார் எதை வேண்டுமானாலும் கேட்கலாம்; அவர்கள் கேட்கும் விஷயங்களைக் குறித்து, அன்பாக அழகாக பேசிக்கொண்டேயிருப்பார். அவர்கள் திரும்பவேண்டுமென்றால் கவிமணி எழுந்து நின்று அவர்களை வழியனுப்புவார். இருட்டுவேளையானால் விளக்கை எடுத்து அவர்களுக்கு வழிகாட்டுவார். வாருங்கள், அடிக்கடி வாருங்கள், நீங்கள் வந்தது ரொம்ப சந்தோஷம்" என்று அவர்களிடம் கூறி விடைபெற்றுக்கொள்வார்.

கவிமணியிடம் உரையாடிக்கொண்டிருப்பதே ஒரு தனி இன்பம். அன்பும் அடக்கமும் கலந்து கவிமணி அறிவுரை செய்வார்கள். அவர் வழக்கமாக இருக்கும் மேல்மாடியில் ஐந்து நிமிஷங்களுக்குள் ஆயிரம் பிரச்னைகளுக்கு விடையைக் கண்டுவிடலாம். எவ்வளவு சிக்கலான விஷயமானாலும் கவி

மணி, நிமிஷத்தில் பதிலளிப்பார். அந்தப் பதிலில் அவரின் அறிவின் தீட்சண்யம் சட்டென்று புலனாகும். பேச்சின் இடையிடையே அவர் நகைச்சுவையைக் கலந்துவிடுவார். கேட்பவர்கள் குலுங்கக் குலுங்க நகைப்பார்கள்.

ஒருநாள் ஒரு நண்பர் கவிமணியைக் காணச்சென்றார். விஞ்ஞான வளர்ச்சியினால் புத்தம்புதிய போர்க்கருவிகள் தோன்றி, மனித இனத்தை அழித்துவருகிறதே. விஞ்ஞான அறிவு மறைந்துவிட்டால் மனித சமூகம் அச்சமற்று வாழலாமே என்று அங்கலாய்த்துக்கொண்டார். விஞ்ஞானம் மனிதனின் சத்துரு என்று நண்பர் நினைக்கிறார் என்பதை கவிமணி அறிந்தார். அவர் முகத்திலே அமைதியான புன்முறுவல் தோன்றியது. சிரித்துக்கொண்டே கவி கூறினார். "அப்படி முடிவு கட்டக்கூடாது. இரவுவேளையில் புத்தேரியிலிருந்து நாகர்கோவிலுக்கு நீங்கள் நடந்துபோகவேண்டும். வழி கரடுமுரடாயிற்றே என்று கருதி நான் ஒரு தீப்பந்தத்தை உங்களுக்குத் தந்தால் நீங்கள் என்ன செய்யவேண்டும்? பந்தத்தின் வெளிச்சத்தை உங்கள் வழியைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகப்படுத்தி நாகர்கோவிலுக்குச் செல்ல வேண்டும். அதை விட்டு வழி நெடுக குச்சியிலும் கூரையிலும் தீயைப் பொருத்திவிட்டுப் போனால் குற்றம் நான் தந்த தீப்பந்தத்தினுடையதா, தங்களுடையதா? விஞ்ஞானம் மனிதனின் தோழன், மனிதன் அதை அலைக்கழிக்கிறான்." இந்தப் பதிலைக் கேட்டதும் நண்பர் சிரித்தார். மறு பேச்சு பேசவில்லை. விஞ்ஞானம் வேண்டியதுதான். ஆனால் மனிதனின் மனம் சரியான பக்குவமடையவேண்டும் என்று அவர் தெரிந்துகொண்டார். எய்தவன் இருக்க அம்பை நோவதேபோல், விஞ்ஞானத்தை சிலர் நொந்துகொள்வதை கவி விரும்பவில்லை. "ஆகாயக் கப்பல்" முதலிய பாடல்களில் கவி தன் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

கவிதை என்றால் என்ன? என்று சில ரசிகர்கள் கேட்பார்கள். கடவுள் என்றால் என்ன? என்று கவிமணி திரும்பக் கேட்பார். கேள்வி கேட்டவருக்கு விஷயம் விளங்கிவிடும். கவிதையும் கடவுளும் திருவிதாங்கூர் முழு ரூபாயும் ஒன்று. அவைகளை "இது" என்று சுட்டிக்காட்ட முடியாது. ஆனா

லும் அவைகள் இருப்பதை நாம் உணருகிறோம் என்று கவி ஞர் அடிக்கடிக் கூறுவார்.

எத்தனையோ இளைஞர்கள் கவிமணியைத் தரிசிக்கச் செல்வார்கள். அவர்கள் கவிமணியிடம் சிறிதுநேரம் உரையாடிவிட்டுத் திரும்பும்போது, அவர்கள் மனதிலே புரட்சிகரமான சில மாற்றங்கள் நிச்சயமாகத் தோன்றும். நெப்போலியன் பெரிய வீரன். அந்த வீரனைக் காணச் செல்லும் ஒவ்வொருவனும், அவன் கோழையாயினும் சரி, நெப்போலியனிடம் வார்த்தையாடிவிட்டுத் திரும்பும்போது, வீரனாகவே திரும்புவானாம். அவ்விதமே கவிமணியைக் காணச் செல்பவர்களின் நிலையும். இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, அவற்றைத் தான் நினைத்தபடி திருத்தியமைக்கும் இணையில்லாத சக்தி கவிமணியின் வார்த்தைகளுக்கிருக்கின்றது. இலக்கியத்தின் வாடையே அனுபவித்தறியாதவர்களும், எழுதும் முறையே தெரியாதவர்களும்கூட கவிமணியிடம் ஒரு சில நேரம் பேசிக்கொண்டிருந்தால் நிச்சயமாக, அவர்கள் இலக்கிய ரசிகர்களாகவும், சிறந்த எழுத்தாளர்களாகவும் ஆகிவிடுவார்கள் என்பதில் யாருக்குமே சந்தேகம் வேண்டாம். ஏதாவது ஒரு துறையில் தன்னிடம் வரும் இளைஞனுக்கு சிரத்தை இருக்கிறதென்பதைக் கண்டுவிட்டால் கவிமணி அவனை அந்தத் துறையிலே நிபுணனாக்கி விடுவதற்கு எவ்வளவு ஊக்கம் அளிக்கவேண்டுமோ அவ்வளவு ஊக்கம் அளிப்பார். நாஞ்சில் நாட்டு இளைஞர்கள் பாட்டா! பாட்டா! என்று அழைத்து கவிஞரை வளைந்துகொண்டிருப்பதற்கு இதுதான் முதல் காரணம். தமிழ் நாட்டிலிருக்கும் ஒவ்வொரு இளைஞனும் தமிழ்த்தாயின் தளகர்த்தனாகவேண்டும் என்பது கவிஞரின் மனப்பூர்வமான ஆசை. "என் ஜீவித காலத்திலே உங்கள் ஒவ்வொருவரையும் தமிழுக்குத் தொண்டுபுரியும் சிப்பாய்களாக்கிவிடுகிறேன். அது என் ஆசை" என்று அவர் அடிக்கடி என்னைப்போன்றவர்களிடம் கூறுவார். இந்த உபதேசத்தினால் ஊக்கம் அடைந்து உணர்ச்சி பெற்றிருக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை நாஞ்சில் நாட்டில் காணலாம். தமிழ் நாட்டிலே எவ்வளவோ தமிழறிஞர்கள் இருக்கலாம். ஆனால் கவிமணியின் மனோநிலைமையைப் பெற்றிருக்கும் அறிஞர்கள் எத்தனை

பேர் இருக்க முடியும்? ஒரு சிலருக்குத்தான் ரசிக்கும் உரிமையுண்டு. ஒரு சிலருக்குத்தான் எழுதும் திறன் உண்டு என்று இறுமாப்புடன் எண்ணும் இதர தமிழ்ப் பெரியார்களுக்கும் கவிமணிக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

ஒருநாள் நானும் எனது சகோதரரும் கவிஞரைக் காணச்சென்றோம். இரவு வெகுநேரம் பேசிக்கொண்டே இருந்தோம். வீட்டிற்குத் திரும்பும்போது என் சகோதரர் "பாட்டா எங்களை ஆசிர்வதியுங்கள்" என்று குறையிரந்தார். கவிஞர் பெருமான் என்ன செய்யப்போகிறாரோ என்று நான் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றேன். கவிஞர், "நீங்கள் பிறப்பதற்கு முன்பே உங்களை ஆசிர்வதித்துவிட்டேனே" என்று அமைதியாகப் பதில் இறுத்தார். கவிமணியின் ஆசிர்வாதத்துடன் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் அப்பொழுது என்னை எங்கேயோ இழுத்துச் சென்றது. நான் மட்டுமென்ன? தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவருமே அந்த எண்ணத்தால் தன்னம்பிக்கை பெறலாம். இந்த சம்பவத்தை ஒரு கட்டுரையில் எழுதும்போது என் சகோதரர்,"பிறந்திருப்பவர்களுக்கும் இனிப் பிறக்க இருப்பவர்களுக்கும் ஒருங்கே ஆசிர்வாதம் செய்யப் பிறந்த புண்ணிய மூர்த்தியிடம், என்னை ஆசீர்வதியுங்கள் என்று கேட்டேனே. அது என் சுய நலம் தானே" என்று எழுதினர். அது உண்மை. தமிழராகப் பிறந்த எல்லாரையும் கவிஞர் ஆசிர்வதித்துவிட்டார். இனி பிறக்க இருப்பவர்களுக்கெல்லாம் அவர் ஆசிர்வாதம் செய்துகொண்டே இருக்கிறார். கவிமணியின் உள்ளப் பண்பே அதுதான். அதனால்தான் அவரை மகான் என்று நாம் நம்புகிறோம்.

வீண் ஆடம்பரங்களிலும் வெற்றுத்தம்பட்டங்களிலும் கவிமணிக்கு சிறிதேனும் விருப்பமில்லை. புதிதாக மணம் செய்துகொண்ட நண்பர் ஒருவரைப் பாராட்டுவதற்காக ஒரு கூட்டம் எங்களூரில் நடந்தது. பாராட்டுவிழாவிற்கு எனது வாலிபத்தோழர் ஒருவர் தலைமை வகித்திருந்தார். நாங்களெல்லாம் தரையிலே விரிப்புகளில் இருந்தோம். சிறிதுநேரம் சென்றதும் திடீரென கவிமணி எங்கிருந்தோ வந்தார். தமிழ்நாட்டின் தவப்பயனைக்கண்டதும் தலைமைதாங்கி

யிருந்த எனது நண்பர் எழுந்து, தலைமை ஆசனத்தில் அம ரும்படி கவிஞரை வேண்டினர். நாங்களெல்லோரும் வேண்டி னோம். ஆனல் அவர் ஒரேயடியாக மறுத்துவிட்டார். "நீங் கள்தான் அதில் அமரவேண்டும். உங்களுக்கே அந்த ஆசனம் உரியது" என்று கூறிவிட்டு எங்களுடன் தரையில் அமர்ந் தார். கவிமணியின் அடக்கத்தையும் பெருந்தன்மையையும் எண்ணி, எண்ணி நாங்கள் வியந்தோம்.

பொதுக்கூட்டங்களுக்கும் சங்கங்களின் ஆண்டுவிழாக் களுக்கும் தலைமை வகிக்கவேண்டுமென்று தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அழைப்புவரும். அந்த அழைப்புக்களை எல்லாம் கவிஞர் அன்புடன் ஏற்றுக்கொள்வார். ஆனல் ஒரு நிபந்தனை. அவரின் உடல்நிலை அதற்கு ஒத்தாசை செய்ய வேண்டும். "அவர்கள் என்மீது அன்புகொண்டுதானே அழைக்கிறார்கள்; அந்த அன்பை என்னல் எப்படி மறுக்க முடியும் என்று இந்த சமயங்களில் அவர் கூறுவார். தனது உடல் நிலை சரியாக இல்லாத சந்தர்ப்பங்களில் கூட சில அழைப் புக்களை கவிஞர் ஏற்றதுண்டு. புத்தேரிக்குச் சிலமைல் தூரத் தில் ஒரு கிராமத்தில் ஆதித்திராவிட சகோதரர்கள் ஒரு வாசிப்புச்சாலை நடத்திவருகிறார்கள். அந்த வாசிப்புச்சாலையின் ஆண்டுவிழாவை கவிமணியின் தலைமையில் நடத்தி விடவேண் டுமென்பது அவர்களின் ஆசை. அவர்கள் கவிமணியை சந் தித்து தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். மறுபேச்சின்றி கவிமணி அதை ஒத்துக்கொண்டார். அனல் அந்த சமயத்தில் கவிமணியின் உடல் நிலை சரியாக இல்லை. இரவு வேளைகளில் குளிர்ந்தகாற்றில் வெகுநேரம் திறந்த வெளியில் இருப்பது அவர்களின் உடலை வெகுவாகப் பாதித்துவிடும். அப்படி இருந் தும் கவிமணி அதை ஏற்றுக்கொண்டார்கள். உடல் நிலை சரியாக இல்லையே' என்று கேட்டேன். "இல்லைதான். சிரமமாகத்தான் இருக்கும். வேறு யாராயிருந்தாலும் மறுத்திருக்கலாம்; ஆனல் இந்த ஏழைச்சகோதரர்களின் ஆசையை நிராசையாக்க எனக்கு மனம் வரவில்லை" என்று அவர் கூறினர். பிறகு கூட்டத்திற் குச் சென்று ஆண்டுவிழாவை நடத்தியும் கொடுத்தார்கள்.

பொதுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பவர்கள் கவி ஞரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் ஏராள

முண்டு. சில தலைவர்கள் முன்னுரை பேச ஆரம்பித்து, பேச்சாளர்கள் பேசவேண்டியதையும், தங்கள் பின்னுரையையும் சேர்த்துப் பேசி கூட்டத்தின் பொறுமையைச் சோதிப்பார்களல்லவா? அந்த வழக்கம் கவிமணியிடம் காணவே முடியாது. அவர் தலைமை வகிக்கும் கூட்டங்களில் நிகழ்ச்சிகள் மிகவும் மிடுக்காகவும் ஜரூராகவும் நடைபெறும். கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றி இரண்டு வார்த்தைகள். அடுத்த பேச்சாளரைப்பற்றி சில வார்த்தைகள் பேசி தனது முன்னுரையை முடித்துவிடுவார். நான் கிராமபோனுக்கு ஊசி மாற்றுபவன்; பேச்சாளர்கள் இசைத் தட்டுக்கள். ஒரு இசைத் தட்டு முடிந்ததும், அடுத்த இசைத் தட்டைப் பாடச்செய்வேன்; தலைவர் என்ற ஹோதாவில் அதுதான் என் வேலை'' என்று சில சந்தர்ப்பங்களில் அவர் கூறுவதுண்டு. கவிமணி தலைமை வகிக்கும் கூட்டங்களில் பின்னுரைக்காக யாருங் காத்திருக்க வேண்டாம். ஒரு பேச்சாளர் பேசி முடிந்ததும் அதைப் பற்றித் தனது அபிப்பிராயங்களை உடன்தானே கவிமணி கூறிவிடுவார். பின்னுரைகளுக்கென்று அவைகளைச் சேர்த்து வைக்கும் வழக்கமே கவிமணியிடம் கிடையாது. எனவே கடைசிப் பேச்சாளர் பேசி முடித்து, அதைப்பற்றி ஏதேனும் கூறவேண்டியதிருந்தால் அதைத் தலைவர் கூறுவதுடன் கூட்டம் முடிவடைந்துவிடும். கவிமணி தலைமை வகிக்கும் கூட்டத்தில் பேச வருபவர்களும் சிறிது எச்சரிக்கையுடன்தானிருக்கவேண்டும்.'' பேச்சாளர்கள் தமது விஷயத்தை அனுவதிக்கப்பட்ட கால எல்லைக்குள் முடித்துவிட வேண்டுமென்பதில் கவிமணி பிடிவாதமாக இருப்பார். தாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்குப் புறம்பாகச் செல்வதோ அல்லது பேச்சின் நடுவிலே தனிப்பட்டவர்களைத் தாக்குவதோ கவிமணிக்குப் பிடிக்காது. விவாதத்திற்குரிய விஷயங்களில் பேச்சாளர்கள் தம் அபிப்பிராயங்களைத் தெளிவாகச் சொல்லித் தீரவேண்டும் என்று வற்புறுத்துவார். பொதிந்துபேசி மழுப்பி வேலை செய்பவர்களின் பாடு கவிமணி தலைமை வகிக்கும் கூட்டங்களில் மிகவும் திண்டாட்டமாகிவிடும். இந்த நிபந்தனைகளை யாராவது மீறிப்போனால் கவிமணி அவர்களை முதலில் எச்சரிக்கை செய்வார். அதற்கும் அவர்கள் சரிப்படாவிட்டால் அவர் எழுந்திருந்து பேச்சாளரை இடைமறிப்பார். இந்த மாதிரியான சில சந்தர்ப்பங்க-

ளில் கவிமணிக்கு ஆத்திரம் வந்துவிட்டது போல் தோன்றும். மேலே கூறிய ஆதித்திராவிட அன்பர்களின் கூட்டத்தில் கவிமணியின் தலைமையில் நான் பேசிக்கொண்டிருந்தேன். எனது பேச்சிலே நான் தெரிவித்த சில அபிப்பிராயங்களை பிறகு கவிமணியும் ஆமோதித்துப்பேசினார்கள். ஆனால் எனக்குப் பின் பேச எழுந்த ஒரு அன்பர் எனது கூற்றை மறுப்பவர் போல் பேசி மழுப்ப ஆரம்பித்தார். கவிமணி திடீரென்று எழுந்திருந்து உங்கள் அபிப்பிராயத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள், என்று வற்புறுத்தினர். பேச்சாளர் மீண்டும் பழையபடியே ஆரம்பித்தது? கவிமணிக்கு ஆத்திரம் வந்து விட்டது. அப்பொழுது அவர் தேகம் படபடத்துத்துடித்தது. இந்த நிலைமையில் அவரைப் பார்ப்பவர்கள் கவிமணிக்குக் கோபம் வருகிறது என்றுதான் கருதக்கூடும். ஆனால் உண்மை அதுவன்று. எந்தப் பேச்சும் தெளிவாக இருக்க வேண்டும். எந்தக் கருத்தும் உண்மையானதாகவும் நீதியுடையதாகவும் இருக்கவேண்டும் என்று கவிமணி அபிப்பிராயம் கொண்டிருப்பதால் அதற்குப் புறம்பான பேச்சுக்களை அவர் விரும்புவதில்லை. அவ்வளவுதான்.

கவிமணிக்கு இப்பொழுது வயது எழுபது. ஆனல் இன்றும் என்றும் அவர் குழந்தையுள்ளம் படைத்தவர். கவிஞர் குழந்தையுள்ளம் படைத்திருக்கிறார். குழந்தைகளை அவர் தெய்வமாகக் கருதுகிறார். குழந்தைகள் ஆழ்ந்த துயிலில் இருக்கும்போது அவர்கள் முகத்திலே தெய்வத்தின் சாயல் அப்படியே பதிந்து விளங்குகிறது என்று கவிஞர் கருதுகிறார். எனவே அந்தக் குழந்தைகளைச்சுற்றியே அவர் மனம் சஞ்சரிக்கின்றது. கவிஞர் மாடியிலே நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது, பேச்சு ஸ்வாரஸ்யத்திலே அனைவரும் மூழ்கி இருக்கும்போது, மகான் தேசிகவினாயகத்தின் குழந்தைமனம் அவரின் பேர்த்தி— 'அப்பாவு' என்ற அவரது மருமகனின் ஐந்து வயது மகள் வள்ளியம்மையுடன் குலாவிக்கொண்டேதானிருக்கும். கீழே வீட்டிலிருந்து "பாட்டா" என்றழைக்கும் வள்ளியம்மையின் மழலை மொழி எப்படித்தான் கவிமணியின் செவியில் விழுந்து விடுமோ தெரியாது. அந்தக்குரலைக் கேட்டு அவர் மனம் அடையும் பரவசத்தை அவர் நம்முடன் பேசிக்கொண்டிருக்கும்போதே

அவர் முகம் தெரிவிக்கும். கவிமணியிடம் அடிக்கடி சென்று வருபவர்கள் இதை நன்கு உணர்ந்திருப்பார்கள்.

கவிமணியின் கவிதா சக்தியைத் தூண்டிவிட்டது இந்தப் பிள்ளைப்பாசந்தான். தனது கற்பனு உலகத்திலே குழந்தைகள் ஆட்டத்தின் கனவுகளை எல்லாம் கண்ணுரைக்கண்டு, அவர்களுடன் அவர் கொஞ்சி விளையாடுவதைத்தான் "மழலை மொழி' என்ற தலைப்பிலே அவர் வெளியிட்டிருக்கும் பாடல்கள் தெரிவிக்கின்றன.

"காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்
கண்ணே நீ எழுந்தோடி வாராய்'

என்று அவர் அன்பு கனிய எழுப்புகிருர்; குழந்தையை

"பச்சைக் கிளியே வாவா
பாலுஞ் சோறு முண்ணவா
கொச்சி மஞ்சள் பூசவா
கொஞ்சி விளை யாடவா"

என்று விளையாட்டுக்காட்டுகிருர் அந்தக் குழந்தைக்கு. 'பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியாணம் செய்து' அந்தக் குழந்தையுடன் குழந்தையாக விளையாடுகிருர் கவிஞர். பாட்டிவீட்டுப் பழம்பானையையும், அப்பானைக்குள்ளே சென்ற எலியையும் கதையாகக்கூறி குழந்தையைக் களிப்பிக்கிருர். இத்தகைய பாடல்களில் கவிமணியின் பிள்ளைப்பாசத்தையும், குழந்தையுள்ளத்தையும் தான் காண்கிருேம். இது மட்டுமா? இந்தப்பாடல்களிஞல் அவர் ஆசை தீரவில்லை. அவர் செய்த எல்லாப் பாடல்களையுமே "செந்தமிழ் நாட்டுச்சிறுவர் சிறுமியர்க்கிந்த நூலினியதாய் என்றும் வாழ்கவே" என்றுகூறி அவர்களுக்கே அர்ப்பணம் செய்திருக்கிருர்.

*

கவிமணிக்கு உலகமே குழந்தைகள் தான். தனது கவிதையை மாற்றுப்பார்க்கும் திறமைகூட அந்தக் குழந்தைகளிடமே இருப்பதாக அவர் நம்புகிருர். குழந்தைகளே கவிதைகளின் தன்மைகளை நிர்ணயிப்பதற்குரிய சரியான உரை கல் என்பது அவர் துணிபு. ஒரு சம்பவம் கூறுகிறேன். "செண்

பகராமன் பள்ளு" என்ற ஒரு நூலின் ஏட்டுச்சுவடி நாஞ்சில் நாட்டில் சமீபத்தில் அகப்பட்டது. அதை அச்சேற்றுவ தற்கு முன்னால் அதன் பதிப்பாசிரியர் அதை கவிமணியிடம் எடுத்துச்சென்றார். படியுங்கள் கேட்போம்'' என்றார் கவி மணி; நண்பர் இசையுடன் பாடினார். கவிஞர் அருகிலே குழந்தை வள்ளியம்மை இருந்தாள். கவிஞரின் காதுகள் பாட லைக்கேட்டன. கண்கள் வள்ளியம்மையை நோக்கின. சிறிது நேரம் சென்றதும் வள்ளியம்மை சாய்ந்தாடத்தொடங்கினாள். செண்பகராமன் பள்ளின் இனிமை வள்ளியம்மையின் உள் ளத்தைக் கவர்ந்துவிட்டது. இனி அதை உரைசிப்பார்க்க வேண்டிய அவசியமே இல்லை என்று கூறி, இந்தச்சம்பவத் தைக்கொண்டே ஒரு வாழ்த்துப்பா எழுதிக்கொடுத்தார்கள். அந்தப்பாடல் பின்வருமாறு:—

"வள்ளலுயர் தென்கோவை மன்செண் பகராமன்
பள்ளினிமை யானும் பகருவதேன்—தெள்ளமுதப்
பாட்டிசைக்கோர் பச்சைப் பசலையுமே சாய்ந்தாடிக்
காட்டியதா லுள்ளக் களிப்பு"

குழந்தைகளைக் காணும்போதும், குழந்தைகளைப் பற்றிப் பேசும்போதும் கவிமணியின் இருதயம் இளகியோடும். அதன் சாயலை அவர் முகம் பளிங்குபோல் எடுத்துக்காட்டும். ஒரு நாள் ஒரு வாலிப நண்பர் கவிஞருடன் பேசிக்கொண்டே யிருந்தார். "பாட்டா! உங்கள் பேரை வைத்துத்தான் நாங் களெல்லாம் முன்னேறவேண்டும்'' என்று பேச்சின் நடுவிலே கூறினார். உடனே கவிஞர் "ஆம், நீங்களெல்லாம் முன்னேற வேண்டும்; நீங்கள் எல்லாம் என் பிள்ளைகள்'' என்றுகூறினார். அப்பொழுது அவர் விழிகளிலே கண்ணீர் துளித்து நின்றது.

ஒருநாள் கவிஞரின் எழுபதாவது பிறந்த தினத்தை யொட்டி புத்தேரியிலே ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தி னோம். கவிஞரும் மேடையிலே நாற்காலியில் அமர்ந்திருந் தார். நாங்களெல்லாம் சுற்றியிருந்தோம். மூன்று சிறுமிகள் கவிஞரின் புகழைப்பாடிக்கொண்டே தம் கைகளிலிருந்த மலர் களை ஒவ்வொன்றாக கவிஞரின் மேலே தூவிக்கொண்டேயிருந் தார்கள். தமிழ் நாட்டில் உயிருடன் இருக்கும் கலைத்தெய்வத்

திற்கு நடக்கும் அந்த வழிபாட்டிலும் அதன் புனிதத்தன்மையிலும் மனம் லயித்த கூட்டம் அசைவற்றிருந்தது. ஆனால் அந்தச் சமயத்திலே தே. வி. யின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப்பெருகிக் கன்னங்கள் வழியாகப் பாய்ந்துகொண்டிருந்தது. ஏன்? கவிஞர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகக்காரணமென்ன? கவிஞர்க்குப் பிள்ளைகள் இல்லை. அவர் பெற்ற குழந்தைகள் இல்லை. ஆனால் அந்தக் குழந்தையில்லாக்குறையை நிவிர்த்திசெய்ய ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. "பாட்டா பாட்டா" என்று எத்தனை எத்தனை குழந்தைகள், எத்தனை எத்தனை எத்தனை இளைஞர்கள் கவிஞரை மொய்த்துக்கொள்கின்றனர். அந்த மகிழ்ச்சியிலே தான் கவிஞர் ஆனந்தக்கண்ணீர் விடுகிறார் என்று எண்ணலாம்.

கவிமணிக்கு இப்பொழுது வயது எழுபது. ஆயினும் அவர் இன்னும் தன்னை மாணவக்காரகவே கருதுகிறார். எப்பொழுதும் படிப்பதிலும் சிந்திப்பதிலும், நண்பர்களுடன் உரையாடுவதிலுமாகவேயிருக்கிறார். அவர் அலமாரியில் ஆங்கிலம், தமிழ், மலையாளம், பாரசிகம் முதலிய பல பாஷைகளிலுள்ள புத்தகங்களும், ஆங்கில தமிழ் தினசரிகளும், வாரப்பதிப்புகளும் ஏராளம் குவிந்திருக்கும். தினமும் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான கடிதங்கள் வந்த வண்ணமாகவேயிருக்கும். அவைகளைப் படித்து உடனுக்குடன் பதில் எழுதுவார். இதற்கு கவிஞருக்கு ஒத்தாசையாக இருப்பது அவரின் மருமகன் "அய்யாவு".

கவிஞர் இரவு வெகு நேரத்திற்குப் பிறகு படுக்கச்செல்வார். படுக்கையில் கிடக்கும் போதும் சிந்தனை அவரை விட்டகலாது. திடீரென ஏதாவது கருத்துக்கள் மனதில் தோன்றினால், தன்பக்கத்திலிருக்கும் "டார்ச்" லைட்டைப் பொருத்தி அந்த வெளிச்சத்தின் உதவியால் அந்தக் கருத்துக்களை ஏதாவது ஒருதாளில் எழுதிவிட்டு மீண்டும் படுக்கச் செல்வார். கவிதைகளையும், இதர கருத்துக்களையும் தனது கையில் கிடைக்கும் எந்தத் தாளிலும் எழுதுவார். "உமர்க்கய்யாம்" பாடல்களில் பெரும்பான்மையும் இரண்டு புறமும் டைப் அடிக்கப்பட்ட தாளின் ஓரங்களிலேயே கவிமணி எழுதியிருக்கிறார்.

கடைசியாக ஒரு விஷயம் கவிமணி தன்னை எப்பொழுதுமே மிகைபடுத்தி எண்ணிக்கொள்வது கிடையாது. பிறர் முகஸ்துதிசெய்வது கட்டோடு பிடிக்காது. "ஒரு காசானுலும் எனக்கு உரிமையுடையதாக இருக்க வேண்டும், சிறு புகழானுலும் எனக்கு அவகாசப்பட்டதாக இருக்கவேண்டும்" என்று அவர் ஒரு கூட்டத்தில் பேசியது இன்னும் என் நினைவிலிருக்கிறது. தான் எழுதிய கவிதைகள் எல்லாமே உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவைகள் என்றும், அவைகளை யாருமே அலசிப்பார்க்கக்கூடாது என்றும் கவிமணி நினைப்பதில்லை. "எனது பாடல்களில் சில எனக்கே பிடித்தமில்லாதவைகள்—நானே அவைகளை அழித்துவிடவும் தயார். ஆனுல் எந்தக்காலத்திலும் யாராலும், அழிக்கவோ ஆக்ஷேபிக்கவோ முடியாத கவிதைகள் பல நான் எழுதியிருக்கிறேன். அதற்கென்ன சொல்கிறீர்கள் என்று ஒரு சமயம் நடுநிலைமை பிறழாத ஒரு பிறவிக்கவிஞனின் கம்பீரத்துடன் அவர் கூறினுர். அந்தப்பேச்சிலே தான் ஒரு கவிஞர் மட்டுமல்லர்; ஒரு ரசிகரும் கூட என்ற கருத்து எதிரொலித்தது.

எனவே கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தமிழ் நாட்டின்—தனிப்பெரும்ரசிகர்—கவிஞர் மகான்—என்று கூறினுல் அதுமிகையன்று.

IV

கவிமணியின் கவிதைகள்.

கவிமணியின் கவிதைகளைப்பற்றிப் பேச ஆரம்பிக்கு முன், தமிழ் நாட்டில் நடைபெறும் கவிதை விமர்சனங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லவேண்டும். கவிதைகளையும், அவற்றின் இயல்புகளையுங் குறித்து பற்பல விதமான எண்ணங்கள் நமது நாட்டிலே உலாவுகின்றன. 'அடி, உதை, குத்து, வெட்டு' என்று புலவன் ஆவேசக் கூச்சல் போட்டால் தான் கவிதை நயம் இருக்குமென்று சிலர் நினைக்கிறார்கள்; சாதாரண மனிதனின் தினசரி வாழ்க்கைக்கு வெகு தூரத்தில் போய் நின்றுகொண்டு கவிஞன் தனக்குள்தானே எதையோ பேசிக் களிப்பது தான் கவிதை என்று பலர் கருதுகிறார்கள்; இன்னுஞ்சிலர் யாப்பிலக்கண விதிகளுக்கு அடைபட்டு மூச்சுத்திணறும் சொற்களின் சேர்க்கையே கவிதை என்று சாதிக்கிறார்கள். கவிதைக்காகவே கவிதை என்பவர் பலர்; வாழ்க்கைக்காகவே கவிதை என்பவர் பலர். இப்படியாய் பல பிரிவினர் பலவிதமான அபிப்பிராயங்களை வெளியிட்டு, தமிழ் இலக்கிய மாணவர்களுக்குத் திகைப்பை உண்டுபண்ணுகின்றனர். தமிழ் நாட்டில் இலக்கிய மறுமலர்ச்சி மிக வேகமாக வளர்ந்துவருகிறது. புத்தம்புதிய கவிதை மலர்கள் பல நமது இலக்கியச் சோலையிலே மலர்ந்து மணம் கமழ்கின்றன. இந்தக் கவிதை மலர்களின் உண்மையான மாற்றை உரைசிப்பார்ப்பதற்கு மாணவர் பலர் துடிக்கின்றனர். "எது கவிதை? என்று அவர்களின் ஆராய்ச்சி மனம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. அதற்குச் சரியான விடை இன்னும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்கு மாறாகச் சில பல பெரிய மனிதர்களின் ஒரு தலைப் பட்சமான கூப்பாடுதான் கேட்கிறது. மேல் நாடுகளில் இலக்கியங்களுடன் இலக்கிய விமர்சனமும் தனிக்கலையாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அறிவுத்திறனும், அனுபவ முதிர்ச்சியுமுடைய நடுநிலைமையாளர் பலர் கவிதைகளைப்

படித்து ரசித்து அதன் நுட்பங்களை வருங்கால சந்ததிகள் அறிந்துகொள்ளும் வண்ணம் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சி நூல்கள் இலக்கிய மாணவர்களுக்குச் சிறந்த துணையாக அமைந்து, இலக்கியக்காட்டிலே துணிவுடன் பிரவேசிப்பதற்கு ஊக்கம் அளிக்கின்றன. ஆனால், தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு, இலக்கிய ஆராய்ச்சிக்கு வேண்டிய துணைக் கருவிகள் இல்லவே இல்லை. மேல்நாட்டு விமர்சன நூல்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு தமிழ் எழுத்தாளர் பலர் நமது இலக்கியங்களைச் சீர்தூக்கிப்பார்க்க முன்வருகிறார்கள். இந்த முறை எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒத்து வருமா என்பது சந்தேகம். மேல் நாட்டுக் கலாசாரத்துக்கும் நமது கலா சாரத்துக்கும் தம்மில் அடிப்படையான வேற்றுமைகள் பல மலிந்து காணப்படுகின்றன. இந்தவேற்றுமைகள் அந்த அந்த நாட்டு இலக்கியங்களில் படிந்து, இலக்கியப் பண்புகளிலும் வேற்றுமையை விளைவிக்கும். எனவே, ஒருதேசத்து இலக்கியத்தின் அளவுகோல் இன்னொரு தேச இலக்கியத்தை அளந்து நிர்ணயிப்பதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் உதவிபுரியும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்க்கக் கூடாது. ஆதலின் நமது நாட்டு இலக்கியங்களின் பண்புகளை நிர்ணயித்துக்கூறும் நூல்கள் நமக்கு ஏராளமாகவேண்டும். இத்தகைய நூல்கள் மலியவேண்டுமானால் தமிழ் இலக்கிய ரசிகர்கள் ஏராளம் வேண்டும். காய்தல் உவத்தலின்றி இலக்கியங்களை ரசிப்பவர்கள், நடுநிலைமை பிறழாமல் இலக்கியங்களை மதிப்பிடும் விமர்சகர்கள் பெருகவேண்டும். தமிழ் நாட்டில் பல இடங்களில் விமர்சனங்கள் நடைபெறாமலில்லை; ஆனால் அவற்றைப்படிக்கும் போது, கோரிய பலன் கைகூடுமா என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. இலக்கியத்தின் தன்மைகளையும் பண்புகளையும் நிதானிக்கும் நோக்கத்தை மறந்து, அதன் வளர்ச்சியை முளையிலே கிள்ளி எறியும் நோக்கத்துடன் செய்யப்படும் விமர்சனங்களால் தமிழ் நாட்டுக்கு கெடுதியே தவிர நன்மை ஒருநாளும் விளையாது. விமர்சனம் ஒரு கூர்மையான ஆயுதம். நேர்மையாக உபயோகிக்காவிட்டால் அது பிரதிகூலமான பலனைக் கொண்டு சேர்க்கும். இந்த ஆயுதத்தை உபயோகிப்பவர்கள் பக்ஷபாதமற்ற மனோநிலைமையும், ஆசிரியரின் இருதயத்தைத் தொடும் திராணியும் பெற்றிருக்கவேண்டும். கவிதை சொட்டும் அமுதத்தை உலகிற்கு அள்ளியூட்டுபவர்கள் விமர்

சகர்கள். கவிதையின் நுணுக்கங்களைத் தேடி யனுபவித்து, பிறருக்கும் ஊட்டி, இலக்கியப் பயிருக்கு வேலிகட்டும் மகத்தான பொறுப்பு அவர்களுக்குண்டு. நமது கவிதை விமர்சகர்களில் சிலர் குறைகளை தேடிப்பார்ப்பதிலே முழுக்கவனத்தையும் செலவிடுகின்றனர். கவிதைக் காட்டிலே கனிகளுடன் சருகுகளும் காணப்படலாம், ஆழ்ந்த கவிதையின் அடித்தளத்திலே முத்துக்களோடு சில கற்களும் காணலாம். வாய்த்த ஒரு விமர்சகன் இந்தக் கனிகளிலும் முத்துக்களிலும் ஈடுபட்டு ஆவன செய்யவேண்டும். குப்பை கூளங்களை அரித்துக் கொண்டிருப்பது விமர்சகனின் புனிதத் தன்மையைக் கறைப்படுத்திவிடும்

தமிழகத்தில் நாம் விரும்பும் விமர்சன நூல்கள் வெளியாகும் வரை இலக்கிய மாணவர்கள் காத்திருக்க வேண்டாம். நமது மறுமலர்ச்சிக்கவிதைகளை முகந்து பார்ப்பதற்கு கவிமணி நமக்கு உதவி செய்திருக்கிறார். எது கவிதை? என்ற தலைப்பில் அவர் வெளியிட்டிருக்கும் பாடல்கள், கவிதைக் காட்டிலே சஞ்சரிக்கும் இளம் ரசிகர்களுக்கு உற்ற துணை என்பது உண்மை.

"உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை.
தெள்ளத்தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை".

என்பன போன்ற பாடல்கள் அந்தப் பணியைத்தான் செய்கின்றன. இந்தப்பாடல்கள் காட்டும் வழிநின்று கவிஞரின் இதர பாடல்களை ரசித்துப் பார்க்க முயற்சி செய்கிறேன். ரசிக்கத்தான்— அளவிடவன்று. தமிழ் நாட்டின் ஜீவிதக் கலைத் தெய்வத்தின் கவிதைகளை ரசிக்கத்தான் நான் துணிய முடியும்.

கவிமணியின் பாடல்தொகுதிக்கு**"மலரும் மாலையும்"** என்பது பேர். தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும், சிறுவர்களுக்கும் வயோதிகர்களுக்கும் இன்பச்சுனையாக இருப்பது 'மலரும் மாலையும்'. வாழ்க்கையின் பலவித நிலைகளில் வசிப்பவர்களும் படித்து ஆனந்தமடையும் வகையில் அதன் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இந்தப் பாடல்களைப் படிக்க ஆரம்பித்ததும் நமது மனதை முதலில்

கவர்வது பாடல்களின் சொல்லாட்சி. எளிமையான சொற்கள், கவிஞரின் இருதயத் தளத்திலிருந்து லாவகமாக வெளியேறிப் படிப்பவர்களின் இருதயத்திலே மோதி அலை எழுப்பும் அற்புதத்தை 'மலரும் மாலையும்' பாடல்களில் காணலாம். அந்தப் பாடல்களிலே, கவிஞர் சொற்களின் அடிமையாகிவிடாமல் அவற்றின் அதி அதிபராகி ஆனந்தக் காட்சி தருகிறார். புணரியல் பாண்டித்தியமும் அகராதியின் துணையுமின்றி சாதாரண ஒரு பாமரன் கூட கவிமணியின் கவிதைகளிலே மனம் லயிக்க முடியும்.

"குடிக்கக் கூழுமில்லை—அடுப்பைக்
கோழி கிண்டுதையா"
"மங்கை பெரிய மங்கை—உணவின்றி
வாடிமெலியு மங்கை
சிந்தை தளருமங்கை— நடக்கவும்
சீவனிலாத மங்கை"

என்பன போன்ற சொற்கள் வெறும் வெள்ளைச் சொற்களே தான். நாமும் நமது பெண்டு பிள்ளைகளும் சர்வ சாதாரணமாக உபயோகிக்கும் எளிய சொற்களே தான்; ஆயினும் கவிஞரின் உள்ளத்தடத்திலிருந்து அவை உதிக்கும்போது தெள்ளத் தெளிந்த தமிழாக அவை உருப்பெறுகின்றன. இந்தச் சொற்களின் செழுமையும் இனிமையும் நம்மைக் கவியின் இருதயத்திற்கு வெகு சமீபத்தில் அழைத்துச் செல்கின்றன. ஒரு பிறவிக் கவிஞனின் சிருஷ்டி மகத்துவத்தை இந்த எளிய சொல்லாட்சியைக் கொண்டுதான் சாதாரண மனிதன் அறிந்து கொள்ள முடியும். கரடு முரடான சொற்களே கவிதைக்கு ஏற்றவை என்று சிலர் தப்பாக எண்ணுகின்றனர். வார்த்தைகளுடன் மல்யுத்தம் புரிந்து பொருளையுணர்ந்தால் தான் கவிதையைக் காணலாம் என்று பேசுவதும் அதற்கு எடுத்துக் காட்டாக 'அந்தக்காலத்தைப்பார்' என்று கூறுவதும் பொருந்தாக் கூற்றாகும். கவிதையின் சொற்கள் அதைப் படிப்பவர்களுக்கு சொந்தமாக இருக்கவேண்டும்—சொந்தமாக ஆக்கிக்கொள்ளும் தன்மை பெற்றிருக்க வேண்டும். எவ்வளவு எளிதில் கவிதையைப் புரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு எளிதிலே கவிஞனைப் புரிந்துகொள்ள முடியும். இதை யாராலும் எக்காலத்திலும் மறுக்க முடி-

யாது. "அந்தக்காலம்" சரியான எடுத்துக் காட்டன்று. வள்ளல்கள் இல்லை, வாங்குபவர் இன்மையால் என்ற வாழ்க்கை வளப்பத்தைப் பெற்றிருந்த அந்தக்கால மனிதன் அந்தக் கால இலக்கியங்களைப் புரிந்து கொண்டான்—புரியாவிட்டால் புரிந்துகொள்வதற்கு வாழ்க்கையில் ஒய்வு இருந்தது. இன்றையத்தமிழன் அன்றையத் தமிழனல்லன். இவனுக்கு ஒய்வு கிடையாது. அன்றாட வாழ்வைத்தேடி தலைதெறிக்கும் வேகத்தில் ஓடும் இன்றயத் தமிழனிடம் "இதோ கவிதை, சந்தியைப் பிரித்து, நிகண்டைப் புரட்டி, இன்பத்தைச்சொல்" என்றால், அவன் சொன்னவர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் தவிப்பான். கவிதையின் மொழியும் போக்கும் அது தோன்றும் காலத்தின் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகின்றன. மேல் நாட்டு இலக்கியங்களைப் படித்தவர்கள் இந்த உண்மையை அறிவார்கள். தமிழ் இலக்கியங்களின் காலங்களைச் சரியாக வரையறுத்து, அவற்றின் சொல்லாட்சியை நிர்ணயித்துப் பார்ப்பவர்களுக்கும், காலத்தின் சூழ்நிலையால் கவிதையடைந்திருக்கும் மாற்றங்கள் புலப்படும். அது வேறு விஷயம். இங்கே நாம் அறியவேண்டியது என்னவென்றால் "மலரும் மாலையும்" என்ற நூலிலே கவிமணி கையாடியிருக்கும்சொல்லாட்சி காலநிலைக்கு இயைந்து மெருகு ஏறியவை என்பதுதான். கவிமணி தமது இளம்பிராயத்தில் செய்த பாடல்களில் "அந்தக்காலத்தின்—" வாசனையைக் காணலாம். 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' போன்றவை அந்த ரகத்தைச் சேர்ந்தவை. கவிமணி கல்லூரி ஆசிரியராக இருந்த சமயம் பாரதியாரின் கண்ணன் பாட்டுகள் அவர் மனதைக் கவர்ந்தன. அந்தப் பாடல்களின் சொற்கள் ஒரு பெரும்புலவனின் இருதயத்தைத் திறந்து காட்டுவதை அவர் உணர்ந்தார். அதுமுதல் கவிமணி தமது பாடல்களின் போக்கையும் மாற்றிக்கொண்டார். காலத்துக்கு ஒத்து தம் கவிதா ரீதியை மாற்றியமைத்ததால் பண்டிதருக்கும், பாமரருக்கும், சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும், அவரின் பாடல்கள் இன்றும் மனப்பாடமாக இருக்கின்றன. அவரின் பாடல்களுக்கு இது முதல்தரமான வெற்றி.

பாரதியார்—தே. வி. ஆகியவர்கள் மறுமலர்ச்சி பெற்ற தமிழ் நாட்டின் மகா கவிகள். நல்ல வாக்குநலம் பெற்ற,

கலை வாணியின் வாரிசுகள் அவர்கள். "என் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடவேண்டும்'' என்று பாரதியாரும்,

"பண்ணெழுகு பாடலைப் பாடென் றெனக்கருள்
பாலிக்கும் வேளை இந்தப்
பாரெங்கு மறியாத கர்வமது பொங்கிப்
பரந்துளம் விம்ம நிற்பேன்''

என்று கவிமணியும் கவிஞர்களுக்கு உரியதான கம்பீரத்துடன் தம்மை உலகத்துக்குக் காட்டுகிறார்கள். இத்தகைய கவிஞர்கள் எந்தக் காலத்திற்கு எதுவேண்டுமோ அதை அவர்களின் சொந்த பாணியிலே பாடி வைப்பார்கள். அவர்கள் பாதையிலே "இலக்கணப் புலிகள்'' புகுந்து வேலைசெய்வது, இலக்கிய உலகில் இடர் செய்யும் வேலையாக முடியும். இயற்கையைத் தமது சர்வ கலாசாலையாகக்கொண்டு, இயற்கையுடன் வாழ்க்கை நடத்தும் பிறவிக்கவிஞன், அந்த இயற்கையின் ஆழத்திலே மூழ்கி இன்பவெறி அடையும்போது, அந்த இன்பம் சொல்லுருவம் எடுத்துவிட்டால் அதைக் கவிதையாக நாம் பேரிட்டழைக்கக் காத்திருக்கிறோம்.

வெள்ளித் திரை வீசி—நதி
விம்மிக் குதிக்கையிலே—என்னை
அள்ளும் கவியமுதம்—உள்ளே
ஆறாய்ப் பெருகுதம்மா'' என்று புதுவையிலே

மோனத் தவம் செய்யும் யோகி பாரதியார் அழகாகச் சொல்லுகிறார். இந்த இன்ப உணர்ச்சி புலவன் மனதிலே துள்ளு மறியைப்போல் துள்ளி எட்டிலே தாவும்போது, அதைப் பாடாதே இதைப்பாடாதே—அப்படிப்பாடு, இப்படி எழுது என்றெல்லாம் வரம்பு கட்ட எத்தனிப்பது வீண் முயற்சியாகும்.

•

கவிமணி தே. வி. நாய், பூனை, எலி, புலி, கிளி, கோழி, சைக்கிள், பொம்மை, மலர், ஆறு, மலை முதலிய எவ்வளவோ விஷயங்களைக் குறித்து விதம் விதமான பாடல்கள் எழுதி இருக்கிறார். கடவுளின் சிருஷ்டிப் பொருளிலே எந்தப் பொருளும் கவிஞனுக்கு உகந்தது தான்.

"அலகில் ஜோதியான ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும்—கவிக்கு
உரிய பொருளாமையா" என்று கவிஞர் உற்சாகமாகப் பாடுகிறார். கவிஞரின் பட்டறையிலே எந்தப் பொருள்கள் எத்தனை வேண்டுமானாலும் காணப்படலாம். அதைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டாம். அந்த அந்தப் பொருட்களை எல்லாம் வைத்துக்கொண்டு கவிஞன் வார்த்தெடுக்கும் கவிதையின் இனிமையும், அது தரும் கருத்தின் சோபையும் தான் நமக்கு வேண்டும்— காக்கையையும் குருவியையும் காட்டி, அன்னையின் தெய்வ மணிக்கைகள் தம் மக்களுக்கு அன்னத்தை ஊட்டி விடுவதன்றல்லவா? அதுபோலவேதான் கிளியையும் குதிரையையும் காட்டி நமக்கு இன்பம் கலந்த அறிவை ஊட்டுகிறார் கவி. அவரின் கவிதைகளை நாம் படிக்க ஆரம்பித்ததும் கிளியும், குயிலும், குதிரையும், புலியும் நம் முன்னே வந்து நிற்கின்றன. ஆனால் படித்து முடிக்கும் சமயத்திலே அவைகள் எங்கேயோ மறைந்து, நம்மனதிலே கவிதைப் போதை ஏறுகிறது. காக்கையும் குருவியும் இருந்த இடத்திலே அறிவின் ஜ்வாலை சுடர் விடுகின்றது. கவிமணியின் எல்லாப் பாடல்களிலும் இந்த அற்புதத்தை நாம் பார்க்கிறோம்—கவிமணி குதிரையின் புலம்பல் எழுதியிருக்கிறார்—அதிலே ஒரு பாட்டு—

"பக்கம் திரும்பியே பார்த்திடாமல்—எங்கள்
பார்வையைக் கட்டி மறைப்பது மேன்?
திக்கெல்லாம் தந்த பிரமனிலும்—நீவிர்
தீவிரப் புத்தி யுடையவரோ?"

மனிதனைப் பார்த்துக் குதிரை புலம்புவதாகப் பாவனை—அப்படி நினைத்துக் கொண்டுதான் நாம் அதைப் படிக்கிறோம்—ஆனால் படித்து முடிந்ததும் அந்தக் குதிரையா நம்மனதிலே நிற்கிறது?— தனது அடுத்த வீடு, பக்கத்து வீடுகளில் கேட்கும் அழுகுரலை, ஏன் என்று கேட்காமல், தன்னை மட்டுமே நினைத்துக் கொண்டு சூரத்தனம் செய்யும் சுய நலக் கும்பலும், அவர்களின், மனித தர்மத்துக்கு விரோதமான மனோநிலையும் தானே நம் கருத்திலே பதிகின்றன. "புலிக்கூடு" என்ற பாடல்களில் கவிமணி ஒரு புலியின் கோரமான பார்

வையையும், அதன் தோற்றத்தையும் படம் பிடிக்கிறார். வாயைப் பிளந்துகொண்டு, தனது நகங்களை ஈட்டியும் குந்தமும் போல் நீட்டிக்கொண்டு பாய்ந்துவரும் புலி அப்பாடலைப்படிக்கும் நம் கண் முன்னே சாடி வருகிறது—ஆனால்,

"மானைப் படைத்த தெய்வம்—புலியையும்
வளர்த்து விடலாமோடி?
தேனைப் பழித்த சொல்லாய்!—எனக்கு நீ
தெரிந்துரை செய்வாயோடி"?

என்ற கடைசிப் பாடலுக்கு வரும்போது அந்தப் புலி மறைந்து போகிறது. இறைவனின் சிருஷ்டியைப் பற்றின மகத்தான ரகசியம் நம் சிந்தனையைக் கவர்ந்து விடுகிறது.

கவிமணியின் கிளிப்பாட்டில் அவரின் கற்பனை சிறகு விரித்துப் பறக்கின்றது. கிளியின் குரலைப்பற்றிக் கவி கூறும் அழகைப் பாருங்கள்.

"உண்ணும் கனியிலெழும்—சுவையினை
உள்ளம் களி கொள்ளவே
பண்ணிற் கலந்திட நீ—தெரிந்து செய்
பக்குவ மேதடியோ?"

ஆம்! அரச மரத்தில் சாதாரணமாகக் காணும் அந்தக் கிளியின் குரலைத் தான் கவி குறிப்பிடுகிறார். ஆனால் கவியின் இந்தக் குரல் நம்மை அரச மரத்தடியிலிருந்து வேறெங்கேயோ அழைக்கிறது. நமது சிந்தனை கிளியை விட்டுப்பிரிந்து கவியின் கற்பனையில் லயிக்கிறது. கிளி, தான் அருந்தும் கனிகளின் மதுரத்தை வடித்தெடுத்து, அதைப்பண்ணில் குழைத்து வாயினால் ஊதுகிறதாம். அதுதான் கிளியின் குரலாகி நம்மை மகிழ்விக்கிறதாம். கனியின் ரசத்தைப் பண்ணிலே கலக்கும் பக்குவம் கிளிக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்று கவியின் கற்பனை கூறுகிறது. கிளியின் உணவுக்கும் அதன் குரலின் இனிமைக்கும் முடிச்சுப் போட்டு கவி நம் கருத்தைக் கவர்வது அவரின் கற்பனைத் திறமையின் மகிமையைக் காட்டுகிறது.

"பறக்கும் குருவியோடென்—உள்ளம்
பறந்து பறந்து திரியும்

கறக்கும் பசுவைச்—சுற்றி—அதன்
கன்றுபோலத் துள்ளும்"

என்று கவிஞர் தன் கற்பனைசக்தியைப் பறைசாற்றினால் அதற்குக் காரணம் இல்லாமலா இருக்கும்?

கவிமணி இயற்கைக் காட்சிகளைப்பற்றியும் பல சிறு பாடல்கள் பாடியிருக்கிறார். இயற்கையை அவர் அணுகிப் பார்க்கும் முறை அலாதியானது. இயற்கையின் தோற்றமும், அதன் எழிலும் கவி இருதயத்தில் விசாலமான எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. ஆகவே அந்த இயற்கையைப் பாடி அதன் எழிலை வியாக்கியானம் செய்து காட்டுகிறார். மாலைநேரத்திலே, கடவுள் வழிபாட்டுக்கு மலரெடுக்கச்சென்ற "தாயுமானவருக்கு" அந்த மலர் கடவுளின் எங்கும் நிறைந்த தன்மையையும், அவன் தோற்றத்தின் ஞானத்தையும் அறிவுறுத்திற்று. எனவே, அவர்,

"பண்ணே னுனக்கான பூஜைஒரு வடிவிலே
பாவித்திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரொடு நீயே இருத்தியப்
பனிமல ரெடுக்க மனமும்
நண்ணேன்"..

என்று பாடி வைத்தார். கவிமணிக்கும் அந்த இயற்கை, கடவுளின் திருமேனியைக் காட்டும் கண்ணாடியாகவே காட்சி தருகிறது. "கதிர் விழுங்கி மதியுமிழ்ந் தவரும் அருண்மாலை" யென்று இளங்கோவடிகள் சித்திரிக்கும் அதே மாலைப் பொழுது கவிமணிக்கு இறைவனின் தோற்றத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அந்தப் பாடலைப் படியுங்கள்.

"வான வெளிதனிலே—க்விந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப் பிறைவரவே—சிவன் திருக்
கோலம் தெளிவேனடி"

ஆகவே கவிஞர்கள் எந்தப் பொருளைப் பற்றிப் பாடுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டாம். அதை எப்படிப் பாடுகிறார், அதிலே அவர் செய்யும் கலை வேலைப்பாடுகள் என்ன? அவர் காணும் உண்மைகள் என்ன? என்பவைகளைத்

தான் நாம் கவனிக்கவேண்டும். புலவர்களுக்கு கல்லிலும் காவியமிருக்கும்; புல்லிலும் புராணமிருக்கும். கவிமணிக்கு எல்லாப் பொருள்களிலும் உண்மை இருந்தது. அந்த உண்மைகளைக் கவிதை ரசத்திலே தோய்த்து அவர் வெளியிட்டிருக்கிறார். ஆகவேதான் கிளியையும், கோழியையும் பற்றிப் பாடுவது கவிதையாகுமா என்று சந்தேகிப்பவர்களைப் பார்த்து

ஈயும் எனக்குத் தோழன்—ஊரும்
எறும்பும் எனக்கு நேசன்
நாயும் எனக்குத் தோழன்—குள்ள
நரியும் எனக்கு நண்பன்,
"கல்லின் கதைகளெல்லாம்—இரு
காதுகுளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சு மறிவேன்—அதைப்
புராணமாக விரிப்பேன்"

என்று உரத்த குரலில் பாடுகிறார்.

இப்பாடல்களைத் தவிர கவிமணி ஆசியஜோதி போன்ற காவியங்களும் செய்திருக்கிறார். அளவில் சிறிதாயினும் தன்மையில் மிகப்பெரிய பாடல்களால் ஆக்கப்பட்டது ஆசிய ஜோதி. கவிமணியின் பால்யப் பருவத்திலே அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த கருணை வெள்ளம் ஆசிய ஜோதியில் பெருக்கெடுத்து ஓடுகிறது. எளிய வார்த்தைகளில் கருணைப் பண்பை அற்புதமாக ஏற்றி, தனது கலைத்திறனை நிரூபித்துக் காட்டுகிறார் கவிமணி. வார்த்தைக்கு வார்த்தை, பாட்டுக்குப் பாட்டு கருணை பெருகிப் பெருகிப் பாய்கிறது ஆசியஜோதியில். பிம்பிசாரனின் யாகசாலையும், மகனை இழந்த தாயின் பிரலாபமும் அதில் அற்புதமான சித்திரங்கள்.

"நீட்டிக் கழுத்தை யறுப்பதற்கோ—அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ
தீட்டிய கத்தியும் கையுமாக—ஒரு
தீக்ஷிதர் முன் வந்து நின்றாரம்மா"

யாகசாலையில் பலி நடப்பதை நாம் கண்டதில்லை. அந்தக் காட்சியை எவ்வளவு தெளிவாக நமக்குச் சித்திரித்துக்

காட்டுகிறார். அந்த ஆடு கிடக்கும் கிடையும், தீக்ஷிதரின் கைவாளும் நமது கண்களுக்கெதிரே வந்து, நமது இரக்கச் சிந்தனையைச் சோதித்துப் பார்க்கின்றன. மேல் என்ன? என்று மனம் துடித்துக்கேட்கிறது. "ஐயோ புத்தர் வர வேண்டுமே! அதுவரையும் தீக்ஷிதரின் கை செயலற்று விடாதா" என்று நம்மையறியாமலேயே நாம் கேட்கத் தோன்றுகிறது. நமது உணர்ச்சியைப் பற்றிக்கொண்டு பாடல்களிலே நம்மை மனம் பறிகொடுத்திடச் செய்யும் இந்தத் தன்மை உண்மையான ஒரு கவிதைக்குத்தான் இருக்கமுடியும்.

யாகசாலைக்குப் போகும் ஆட்டுமந்தையைத்தான் பாருங்கள்.

"தன்னந்தனியாகி—ஒருமறி
தாவி முன்னோடுதையோ
பின்னே ரிளமறியும்—கிந்தியிங்கு
பீடைப்படுதே ஐயோ?"
"ஓடுமறி தேடித்—தாயுமுன்னில்
ஓரடி வைத்தவுடன்
வாடுமறியை எண்ணி—விரைந்து பின்
வந்து தயங்குதையோ"

ஐயோ! அந்த ஆட்டின் சோகம் நமது சோகமாகவே தோன்றுகிறதே! ஒரு கவியின்சொற்களுக்கு இவ்வளவு சக்தியா? கவிமணியின் பாடல்களைப் படிக்கும்போதே அந்த மந்தைகளை நினைத்து நம் மனம் குழைகிறதல்லவா? இதை விடக் கவிதையில் வேறென்ன இன்பத்தைத்தான் நம்மால் கண்டுவிட முடியும்?

"அன்பின் வெற்றி" என்ற தலைப்பிலே கவிமணி பாடியிருக்கும் மீராவின் கதை கருத்துக்கள் நிரம்பிய அழகிய பக்திப் பாடல்களாகும். கவிமணி தனது பதினான்காம் வயதில் பாடிய அழகம்மை ஆசிரிய விருத்தத்தில்,

"பத்திக்கு மென்மடப் புத்திக்கு மோயாத
பகையலால் பட்சமில்லை"

என்று பாடித் துக்கித்தார். பக்திக்கும் புத்திக்குமிடையில் இருக்கும் இந்தப்பகையைப் போர்செய்ய விடுத்து, பக்திக்கு

வெற்றி தேடிக்கொடுக்கிறுர் அன்பின் வெற்றியிலே. கவி மணியின் உமர்க்கய்யாம் பாடல்கள் தமிழனுக்குக் கிடைத்த அருந்தனம். பிறநாட்டு அறிஞர் சாத்திரமெல்லாம் தமிழ் மொழியில் வரவேண்டும் என்று பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு கவிமணியால் நனவாகி வருகிறது. உமர்க்கய்யாம் பாடல்கள் அதற்கு எடுத்துக்காட்டு. உமர்க் கய்யாம் பாடல்கள் மொழிபெயர்ப்பல்ல. தழுவலுமல்ல. தமிழிலே புதிதாகத் தோன்றிய உமர்க்கய்யாம் அது. மொழிபெயர்ப்பு என்றால் என்ன என்பதை உமர்க்கய்யாம் பாடல்களை, பிட்ஜிரால்டின் ஆங்கிலப் பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ளவேண்டும்.

"நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்" கவி மணியின் ஹாஸ்யங்கள் நிறைந்த நூலாகும். தமிழிலே 'மான்மியம்' ஒரு புதுமை. வேளாளர் சமூகத்திலே இருந்த சில அநீதிகளைக் கிண்டல் செய்யும் கேலிச் சித்திரம் அது. தமிழ் நாட்டில் இத்தகைய இலக்கியங்கள் எவ்வளவோ வர வேண்டும். தமிழில் நகைச்சுவை நூல்கள் மிகக் குறைவு என்று சில இடங்களில் பேசப்படுகிறது. அந்தக் கூற்றை நிமிர்ந்துநின்று மறுப்பதற்கு மான்மியம் தக்க துணை செய்யும்.

V

கதரின் கவிதை.

"இனிய பொழில்கள், நெடிய வயல்கள் எண்ணரும் பெரு நாடு; கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றித் தரு நாடு; இது கணக்கின்றித் தருநாடு" என்று, நம் நாட்டின் வளப் பத்தைப் பெருமிதத்துடன் பாடுகிறார் பாரதியார். ஆம்! அன்றும் இன்றும் இயற்கைச் செல்வங்கள் மலிந்து, திரு மேனி செழித்தது தான் நம்நாடு. ஆயினும் என்ன? இந்த நாட்டிலே இன்று பஞ்சமும் நோயும் தானே கண்ட பலன். வீடுகள்தோறும் கலையின் முழக்கமும், வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளிகளும் இருக்கவேண்டிய இந்த நாட்டில் வீடுகள்தோறும் அழுகைக் குரலும், வீதிகள்தோறும் பிச் சைக்காரர்களின் புலம்பலும்தானே கேட்கிறது. வளமிகுந்த நாட்டிலே வறுமையின் கோரத் தாண்டவத்தைக் காணும் துர்ப்பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. வாழ்க்கையின் விசித்திரமான இந்தச் சுழியிலிருந்து மீளும் மார்க்கம் இல்லையா? என்று நாம் திகைக்கும்போது, கவிமணியின் 'கதர்ப் பாட்டு' நம்மனதிலே இன்பச் சிந்தனைகளைச் சிதறி ஆறுதல் தருகிறது. அந்தப் பாடல்களைச் சிறிது பார்ப்போம்.

ஒரு சாதாரண பிச்சைக்காரி,

"நல்ல பண்டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிறுற உண்டறியோம்,
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆறவழியின்றி வாடிடுவோம்"

என்று புலம்பியழும் லட்சக்கணக்கான பிச்சைக்காரர்களின் பிரதிநிதி. பொதுஜன உபத்திரவம் என்று கருதி நாகரிக உலகம் அவளை ஒதுக்கித் தள்ளிவிட்டது. ஆயினும், கவி மணிக்கு அவளும் ஒரு அற்புதப் பொருளாகவே காட்சி யளித்தாள். இன்பத்தின் உச்சியிலே கொஞ்சி மகிழும் நாகரிக வாழ்க்கையைவிட, துன்பத்தின் அடித்தளத்திலே

பதுங்கிக் கிடக்கும் வாழ்க்கையில்தான், கவிகள் தமது கவிதைக்குரிய சாதனங்களை அதிகமாகத் தேடுகிறார்கள்.

"வண்டலடிக்கின்ற உழுவேன்—கையில்
வரிவில் ஏந்திநின்ற
பண்டை விஜயன்போல—இந்தப்
பாரில் அற்புதப் பொருளாம்"

என்று நினைப்பவர்களல்லவா கவிகள்!

தே. வி. கல்லூரி ஆசிரியராக இருந்த காலம் அது. அவர் காலையில் வழக்கமாகப் போகும் பாதையில் நின்று கொண்டிருப்பாள் அவள். எண்ணெய் என்பதையே கண்டறியாத பறட்டைத் தலையும், ஆயிரம் பீற்றலுள்ள ஒரு முழக் கந்தையைச் சுற்றித் தள்ளாடும் உடலும், ஒக்கலில் ஒன்று, பக்கத்தில் ஒன்று, என இரண்டு பிள்ளைகளும் கொண்ட கோர சொரூபமாக அவள் கவியின் கண்ணிலே படுவாள். "ஐயா கும்பி காய்கிறது. பச்சைக் குழந்தைகள் பசியால் தவிக்கின்றனர் மனம் இரங்குங்கள்" என்று அவள் வாய், இயந்திரத்தைப்போல இயங்கிப் புலம்பிக்கொண்டேயிருக்கும். இந்தப் புலப்பல் ஒலி திருவனந்தையின் வாழ்க்கை இரைச்சல் எல்லாவற்றையும் தாண்டி, புலவரின் உள்ளத்திலே சென்றுபாயும். பாயவே, அன்று நோயினால் வருந்திய துன்ப வடிவத்தைக் கண்ட சித்தார்த்தனின் மனதிலே பதிந்த கேள்விக் குறி கவியின் மனதிலும் பதிய ஆரம்பித்தது.

கால நதி பிரவாகமெடுத்து ஓடிக்கொண்டேயிருந்தது. அந்தப் பிரவாகத்தில் அந்தத் துன்பச் சருகு எங்கேயோ மறைந்துவிட்டது. ஆனால் கவியின் மனதிலே பதிந்திருந்த கேள்விக்குறி மங்கவில்லை. கவி, காலத்தைக் கடந்தவர்.

சில வருடங்கள் கழிந்தன. நாட்டிலே சுதந்திரக் கிளர்ச்சி எழுந்தது. தொண்டர்களெல்லாம் "சுதேசி" மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தனர். இந்தச் சுதேசி மந்திரத்தில், தனது மனதிலே இருந்த கேள்விக்கு விடையைக் கண்டார் கவி. அப்பொழுது 'தாமஸ் ஹூட்' (Thomas Hood) என்ற அறிஞர் எழுதிய

'உடுப்பின் கீதம்' (The Song of the Shirt) என்ற ஆங்கிலக் கவிதையைப் படித்துக்கொண்டிருந்த கவிமணி, அந்தப் பாணியிலே, தனது மனதிலிருந்த கேள்வியையும், அதற்குக் கிடைத்த விடையையும் இணைத்துப் பார்த்தார். அதன் காரணமாக எழுந்த இன்னிசைதான் "கதர் விற்பனை".

ஒரு விதவையும் அவளின் தொழிலும்தான் கவிதையின் பொருள். ஆயினும், இது அன்றைய அதிகாரிகளை என்ன பாடு படுத்திற்று? லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் மூலம் தமிழ்நாட்டிலே பறந்துகொண்டிருந்த இந்தக் கவிதையையும் அவர்கள் வேட்டையாடினர். ஆனால் பாவம்! இலக்கியத்தைச் சிறைப்படுத்த அவர்களுக்குத் திராணி இல்லை. அது அவர்களை எத்திவிட்டு இலக்கிய வானிலே இருந்து கண் சிமிட்டிச் சிரிக்கிறது. தேசத் தலைவர்கள் வகுக்கும் திட்டங்களின் சாரத்தைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம், இனிய மொழியிலே எடுத்து விளக்கி, அவர்கள் மனதைப் பண்படுத்தி முன்னே செல்வார்கள் கவிகள். பண்படுத்தப்பட்ட அந்த உள்ளங்களில் புரட்சி விதையைத் தூவிக்கொண்டு பின்னே செல்வார்கள் தொண்டர்கள். நாட்டு நிலைமை, கவிகளிடமிருந்து இந்த வேலையை எதிர்பார்க்கிறது. உணர்ச்சியும் சோகமும் கைகோர்த்து, கருத்துக்கு மெருகு ஏற்றும் இந்தக் கவிதையின் மூலம், தேசப் பணியில் கவி தனக்குரிய பங்கை எவ்வளவு நேர்த்தியாகச் செய்து முடிக்கிறார் என்றுதான் பார்ப்போமே!

அதோ வருகிறாள் அந்த ஏழைப் பெண். தலையிலே ஒரு சுமை, கையிலே ஒரு குழந்தையை ஏந்தி, பக்கத்திலே ஒன்றை அழைத்துவருகிறாள். அவள் முகத்திலே அன்றிருந்த ஏக்கம் கலந்த சோகப்பார்வை இப்பொழுது மறைந்துவிட்டது. அவள் கண்கள் இப்பொழுது நம்பிக்கையையும் வெறுப்பையும் மாறி மாறிப் பிரதிபலிக்கின்றன. இன்று அவள் பிச்சைகேட்க வரவில்லை. ஏமாந்தவனை எத்தி வாழும் கும்பலில் போய், பல்லைக்காட்ட அவர்கள் வரவில்லை. அந்தக் கும்பலின் மனிதத் தன்மையையும், தாய்நாட்டுப் பற்றையும் புடம்போட்டுப் பார்க்கத்தான் அவள் இன்று வருகிறாள். வாழும் முறையைத் தேசபக்தர்கள் அவளுக்கும் காட்டி-

விட்டனர். அவர்கள் காட்டிய முறையிலே நின்று அவளும் உலகத்தில் வாழவேண்டுமானல் தேச மக்களின் ஆதரவு வேண்டும். அந்த ஆதரவைத் தேடித்தான் அவள் புறப் பட்டாள். ஜனசமூகம் முன்னேற்றமடையவேண்டுமானல் பரஸ்பரம் உதவியும் ஒத்தாசையும் இருந்தேயாகவேண்டும் என்ற உண்மை அவளுக்கும் தெரியும். மகளாகி, மனைவி யாகி, தாயாகிக் கடமையைச் செய்து அனுபவமடைந்தவள் அவள். இந்த எண்ணங்களுடன் வெளியே வந்த அவள் சமூகத்தைச் சந்திக்கும் நேரத்தில் ஒரு சந்தேகம் வந்து விடுகிறது. அன்று தன்னை நிந்தித்துத் துரத்திய அதே சமூகம், இன்றும் வசையம்புகளைத் தொடுத்து தன் னைத் திரும்பிப் பார்க்காமலே போய்விட்டாலோ என்று, மீண்டும் பிச்சைதான் கேட்கிருள் என்று நினைத்து அவளை யாராவது ஏளனஞ்செய்ய ஆரம்பித்தால், அவள் வந்த காரி யம் நடக்காமலே போய்விடும். ஆகவே அவள் புதிய முறை யிலே சமூகத்தின் கவனத்தைக் கவர நினைத்துப் பாடுகிருள்.

பாவிஎன் கதையினைக்
கேளுமையா—அந்தப்
பாஞ்சாலி கதையுமீ
தொக்குமோ ஐயா''

ஏன் இந்த தலைதெறிக்கும் வேகத்தில் ஓடுகிறீர்கள். நீங்கள் மட்டும் தானு உலகம். என்னைப்போன்ற பஞ்சைகளும் சேர்ந்ததுதானே அது. பாரதத்திலே பாஞ்சாலிக் கதை யைப் படித்துவிட்டு "ஐயையோ" என்று அலறும் நீங்கள் உங்கள் முன்னிலையில் பிரத்தியட்சமாக என்ன நடக்கிற தென்பதைப் பாருங்கள். "பாஞ்சாலியின் கதையைவிடச் சோகம் நிறைந்த துன்பக்கதை இதோ உங்கள் முன்னிலை யில் நடப்பதை ஏறிட்டுப் பாருங்கள்'' என்ற கருத்துக்களை உள்ளடக்கி அவள் போடும் கூப்பாட்டைக் கேட்டுத் திடுக் கிட்டுத் திரும்பிப் பார்க்கிருர் ஸ்ரீமான் மல்மீசு மகாஜனம்.

ஓகோ! நீதானு? இன்னும் நீ சாகவில்லையா? என்று அவர் மனம் கேட்கிறது. அதன் சாயல் அவர் முகத்திலே படர்ந்து வெளியாகிறது. ஏழை என்ருெரு ஜென்மம் உல கத்தில் ஜீவித்திருக்கவேண்டுமானல், தனக்கு உழைத்துப்

போடுவதற்காகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களெல்லாம் மாண்டு மடியவேண்டும் என்று நினைக்கும் கூட்டத்தின் பிரதிநிதிதானே அவர். அவர் நினைத்ததை அறிந்துகொண்டவளைப்போல் அவள் கூறுகிறாள்,

"ஆவியைப் பிடித்துநான்
அலைவதெல்லாம்—என்றன்
அருமைக் குழந்தைகளுக் காகவே ஐயா"

'ஐயா, நான் இறந்துதான் போயிருக்கவேண்டும். இல்லை. நான் இறந்தேதான் போனேன். ஆனால் தேசத்தின் ஒப்பற்ற தலைவர் காட்டிய வழி நின்று என் பிள்ளைகளுக்கு நான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காக, தாயுள்ளத்தின் தவ வலிமையால் காலனின் கையிலிருந்த என் உயிரைப்பிடித்து என் கைகளில் வைத்துக் கொண்டலைகிறேன். அது என் உடலில் இல்லவே இல்லை." என்று அவள் சாதுரியமாகச் சொல்லுகிறாள். அந்தப் பேச்சிலே, ஊசலாடும் தன் உயிர் போகுமுன் அந்த மகா ஜனம் உதவிக்கு வர வேண்டுமென்று, தான் பின்னால் கேட்கப்போகும் விஷயத்திற்கு முகவுரையும் கூறி, சுதேசித்தொழில் உடனடியாக ஆதரிக்கப்படாவிட்டால் நாடு நாச களரியாகிவிடும் என்ற கவியின் கருத்தையும் அவள் வெளியிடுகிறாள்.

இவ்வளவையும் கேட்ட பிறகு அந்தப் பிரபுவுக்கு அவள் பேரில் அநுதாபம் பிறக்கிறது. ஏதாவது சிலஅநுதாப வார்த்தைகளைக் கூறிவிட்டு ஓடிவிட எத்தனித்து அவர் "ஏனம்மா உனக்கு உதவி செய்ய வேறுயாருமே ஆண்பிள்ளைகளில்லையா" என்று கேட்கிறார். இந்த வார்த்தைகள், அவள் மனதிலே புதைந்து கிடந்த எண்ண அலைகளைக் கிளறிவிடுகின்றன. அவள் கணவனார் அவளிடம் எவ்வளவு பாசம் வைத்திருந்தார். அவள் சகோதரன் கூட அவளிடம் மாறாத அன்புடையவன். அவர்களெல்லாம் இருந்தால் அவளுக்கு இந்தக் கஷ்டம் வந்தேயிராதே. இந்த எண்ணங்கள் தோன்றவே அவள்,

"கூடப் பிறந்தவரும் மாண்டுபோனார்—என்னைக்
கொண்ட கணவரும்போய்க் காடுமறைந்தார்.
தேடி அவரளித்த பொருளுமில்லை—ஒரு
செம்பா லடித்தகாசென் கையிலுமில்லை"

என்று கூறி கண்ணீர் விடுகிறாள். கொண்ட கணவனுமின்றி, கூடப்பிறந்தவர்களுமின்றி, கையில் காசுமின்றி எத்தனை எத்தனையோ தாய்மார்கள் இன்று தெருவில் நின்று தயங்குகிறார்கள். அவர்களையெல்லாம் சாதாரண பிச்சைக்காரிகள் என்று நாம் நினைத்து விடலாமா? சுதந்தரத் தேவனையும், செல்வச் சகோதரனையும் கொள்ளைகொடுத்துவிட்டு, நாற்பது கோடி வாடி முகம் சடைந்த மக்களையும், தீரா வயிற்றுப்பசியையும் வைத்துக்கொண்டு அழுது பிரலாபிக்கும் இந்தியத் தாயின் உருவமே அந்த ஏழைப்பெண்கள் என்பதை நாம் அறியவேண்டும் என்றுதான் கவி ஆசைப் படுகிறார்.

தேசமும், தேசமக்களும் இந்த நிலைமைக்கு வந்து விட்டதை அறிந்த காந்தி மகான் கதர்த்திட்டத்தை வகுத்துக் காட்டினார். அவரின் உபதேசப்படி அந்த ஏழைப் பெண் பருத்திவிளைக்குச் சென்று பஞ்சு வாங்கி, அதை அரைத்து நல்ல நூலுண்டாக்கி, தன்னந் தனிமையாக இருந்து, அதை ஆடையாக நெய்தெடுத்தாள். அவள் தனது கடமையைச் செய்துவிட்டாள். இனி சமூகம் தனது கடமையைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாடு உருப்படும் அவர்கள் செய்யவேண்டிய கடமையொன்றும் அவ்வளவு பிரமாதமானதன்று. கோவர்த்தனத்தை அவர்கள் குடையாகப்பிடித்து ஏழைகளைக் காவல் புரிய வேண்டும். அந்த ஏழைகள் நெய்தெடுத்த கதராடையை வாங்கி உபயோகிக்கவேண்டும்; அவ்வளவுதான். அதைத்தான் கடைசியாக அந்த விதவைப் பெண் கேட்டாள். ஆனால் அந்தக் குரலையும் சமூகம் கவனிக்கவில்லை. மல்பீசைப்போல் கதர் மெல்லியதாக இல்லையே என்று அது, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டது. இதைக் கண்டதும் கோபமும், வெறுப்பும் அவளைக் கௌவிக்கொண்டன. அந்த நிலைமையிலே அவள் பாடுகிறாள்.

"நல்ல சரக்கு சீமைச்சரக்கென்று நீர்— இந்த
நாட்டுச்சரக்கைப் பழிக்கலாமோ?
மெல்லிய பூவாடை நெய்து தருவோம்— உங்கள்
மேலான ஆதரவே வேண்டுமையா".

நாட்டுச் சரக்குக்கு ஆதரவு காட்டினால்தானே அது வளரும்.

ஆதரவு பெருகப் பெருகத்தானே தொழில் முறையும் அபி விருத்தியடையும். இந்த சாதாரண உண்மைகளைக்கூட அறிந்து கொள்ளாமல் சீமைச்சரக்கு நல்லசரக்கு என்று நாம் மனம் பறிகொடுத்ததினால்தானே, நாட்டை அன்னியன் ஆளவிடுத்து, வாயில் விரலை வைத்து அழுது பிரலாபிக்கி ஞேம் என்று அவள் இடித்துக் கூறிவிட்டு,

"காசுமியர் சால்வைநெய்த கையுமில்லையோ?—உயர்
காசியிலே நெய்த பட்டின் காலமும் போச்சோ?
மாசிலாத டாக்காவின் மஸ்லினுடை— இன்னும்
வாவென்ருல் வாராதோ? வளர்ந்திடாதோ"?

என்று நமது பண்டைச் சிறப்பையும் சுட்டிக் காட்டுகிருள். பண்டைப் பெருமைகளை நினைத்தும், இன்றையச் சிறுமையை நினைத்துமாவது அவருக்கு மனமாற்றம் ஏற்பட்டுவிடாதா என்று அவள் கருதுகிருள். அவள் வருத்தத்தின் வலிமை அவரை வசிகரிக்கத்தான் செய்கிறது. ஆயினும், மல்பீசு மோகம் கலையவில்லை. "கதர் கரடுமுரடாயிருக்கிறதே" என்று யோசிக்கிறேன் என்று தாழ்ந்த குரலில் பேசுகிருர். அவ ரின் மயக்கத்தைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வருகிறது. அவரை அந்த நிலைமையில் தப்பிவிட்டுச் செல்லமுடியாதபடி தடுக்க நினைத்து, அவள், "ஐயா நீர் சொல்வது சரிதான்" ஆனால்,

"ஐந்து வயதுமகள் கோலமிட்டால்—அதை
அழகில்லை என்றழிக்கும் தாயரும் உண்டோ?
பஞ்சு படுவதிலும் பெரும்பாடு—நாங்கள்
படுவதும் நீங்கள் அறியாததோ ஐயா"?

என்றுகேட்டு அவரின் பிள்ளைப்பாசத்தைத் தொட்டுப் பார்க் கிருள்.

அதோ! பாரும் முற்றத்திலே கோலமிட்டுக் கொண்டி ருக்கும் அந்தக்குழந்தையை; அதோ! அந்தத்தாய் பிள்ளையி டம் அந்தக்கோலத்தைப் பார்க்கிருள். அந்தப்பிள்ளையின் கையின் ஓவியம்தானே அந்தத் தாயின் உள்ளத்தைக் கவர்கி

றது. அதோ பாருங்கள்! அந்தத்தாய் ஓடிவந்து தன்பிள்ளையை அள்ளிக்கொள்வதை. அவள் பிள்ளையிட்ட கோலம் கோல மாகவா இருக்கிறது? ஆயினும் அதைப் பார்த்துப்பார்த்து தன் குழந்தையின் கையை முத்தமிடுகிறுளே தாய். இந்திய நாடு கைத்தொழிலிலே அந்தக்குழந்தை போன்றதுதானே. இந்தக்கதர் அந்தக்குழந்தையிட்ட கோலத்தைப் போன்றது தானே. இதை இந்த அளவில் நெய்து எடுப்பதற்கு நாங்கள் என்ன பாடுபட்டோம். நீங்களெல்லாம் பிள்ளைகளைப் பெற்ற வர்கள்தானே. இதை அழிக்கத் துணியலாமா? என்ற கருத் துக்களையெல்லாம் உள்ளடக்கி வரும் இந்தப்பாட்டின் கவி யின்பம் நம்மை எங்கேயோ அழைத்துச் செல்கிறது. பிறப் பிலே கவிஞர்களாகத் தோன்றியிருக்கும் மேதைகள் இத் தகைய கவியின்பத்தை உலகிற்கு அளிக்க முடியும். அது வேறு விஷயம்.

சரி. அதுதான் போகட்டும். தேசாபிமானத்திற்காகக் கதரை ஆதரிக்க மனமில்லாவிட்டால் விட்டுவிடுவோம். மனி தனுக்கு இரக்கம் என்று ஒன்று இருக்கிறதே. இந்தஇரக்கம் ஏழைகளின் துயரைப் போக்குவதற்கு உதவவேண்டாமா என்று நினைத்து, அவள் அந்த மல்பீசு துரையின் இரக்க சிந்தனையை அளந்து பார்க்கிறுள்.

“குறுக்கு முறியநெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை அடக்கி நெய்த கதராடை
மறுத்து நீர் தள்ளாமல் கொள்ளுவீரோ?—எங்கள்
வயிற்றில் எரிதணியச் செய்குவீரோ”.

ஐயா! இந்த ஆடையை நெய்தெடுப்பதற்குமுன் நான் என்ன பாடுபட்டேன். இனியொருவரின் உழைப்பு இதில்இல்லை. பருத் தியும் ஆடையாக இதைக்காய்த்தளிக்கவில்லை. குடிக்கக் கஞ்சி யுமின்றி, வயிற்றுப்பசியுடன், கைகால் களைக்க நான் இதை நெய்யும்போது என் குறுக்கு முறிந்து தரிப்பு வந்தது. ஆயி னும் என்பிள்ளைகளை நினைத்துக்கொண்டு, என் துயரங்களெல் லாம் தாங்கி நான் இதை நெய்தெடுத்தேன். என் முழு உழைப்பையும் பெற்றுத்தான் இந்தக்கதர் ஆடையாயிற்று. இதை மறுத்து நீங்கள் தள்ளினுல் என் உழைப்பின் கதி

என்ன? என்னை விடுங்கள். உழைப்பவனின் உழைப்பைத் துச்சமாக நீங்கள் எண்ணிவிட்டால், அந்த உழைப்பவனின் உற்சாகம் குன்றிவிடுமே. அந்த நிலைமை ஏற்பட்டு விட்டால் உலகத்தின் வாழ்க்கை என்னவாகும்? என்று கூறி அவள் கதறினாள். அதுகூட அவரை அசைக்கவில்லை. விடுவாளா அவள்? "ஐயா இதுவரையும் கதர் என்னுடைய பசிப்பிணிக்கு மருந்து என்பதைக் கூறி மன்றாடினேன்; எனது சுயநலமட்டுமே அதற்குக் காரணமன்று. உமது நன்மையும்கூட இந்த கதர்த்திட்டத்திலேதான் பிணைந்து கிடக்கிறது. வெளியிலே எந்த மல்பீசை கட்டித்திரிந்தால் தான் என்ன? உண்மையில் நீர் அன்னியனுக்கு அடிமைஎன்பதை அறிவீரல்லவா? அந்த அடிமைத்தனம் அகலவும் நான் உழைக்கிறேன். அதுதான் இந்தக் கதர். கூறுகிறேன் கேளும் என்று ஆரம்பிக்கிறாள்.

"தேசமெல்லாம் புகழ்ந்திடும் ஆடைஐயா!—மேலைச்
சீமையையும் நடுக்கிடும் ஆடைஐயா!
காசுபணம் இல்லாத ஏழைகளுக்காய்—அந்தக்
காந்திமகான் போற்றும் காமதேனு ஐயா"!

கதர்த்துணி ஏழைகளுக்கு ஜீவனோபாயத்திற்கு மட்டும் வழிகாட்டுவதில்லை. நம்மை ஆளும் இனத்தையும் அது ஆட்டிவைக்கிறது. ஆளும் இனம் ஆடும்போது, நமது அடிமை விலங்கும் தளர்கிறது. பாரத நாட்டின் அரசியலும், பொருளாதாரமும் இணைந்து உருவானது தான் கதர்த்திட்டம். ஆகவேதான் காந்தி மகான் அதைக் காமதேனு என்று கருதுகிறார். இந்தக் கதரை அணிந்துகொண்டால் நமது பாவங்கள் தீர்ந்து நமக்கு நல்வாழ்வு கிடைக்கும்.

"வேறு புண்ணியங்கள் செய்யவேண்டுமோ?—கதர்
வேட்டி வாங்கி அணிவது போதாதோ? ஐயா!
நூறு பேருக்கன்னம் அளித்தபலன்—இந்த
நூலாடை கட்டுபவர்க் குண்டே ஐயா"!

புண்ணியத்தைச் சம்பாதிப்பதாக நினைத்துக்கொண்டு சத்திரமும், சாவடியும் கட்டி வைப்பது நம் நாட்டினருக்கு வழக்கம். அன்னச்சாவடிகள் சோம்பேறிகளுக்குத்தான் புகலிட

மாகிறது. இல்லை என்பவர்களுக்கு இலை போடுவதைவிட, இல்லை என்பவர்களே இல்லாமலாக்கிவிடுவது எவ்வளவோ மேலான புண்ணியமல்லவா? கதர் அந்தத் திருப்பணியைத் தான் செய்கிறது; கதரை நாம் ஆதரித்தால் தேசத்திலே தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு, பஞ்சம் கருகி மக்கள் க்ஷேமமடைவார்கள். ஏழைகளின் வயிற்றுக்கொடுமையை அகற்றி, அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்து, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திச்செல்லும் கதரை ஆதரிக்கும்படி ஏழைப் பெண்ணின் வாயிலாக கவி நாட்டுமக்களை வேண்டுகிறார். பெற்ற பிள்ளைகள் பேரால், உழைப்பின்பேரால், சுதந்தரத் தேவியின் பேரால், வேதங்கள் கூறும் புண்ணியங்களின் பேரால், பாரத சமூகத்திற்கு கவி கதரின் மேன்மைகளை எடுத்து விளக்கினார். சமூகம் அதைப் பூரணமாக ஒத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. எனவே, காலம் வரும்வரை அவர் காத்திருக்கிறார். காலம் காத்திருக்கவில்லை. வந்து விட்டது. கவி தீர்க்கதரிசியல்லவா? போரால் எழுந்த பஞ்சம் பாரத நாட்டைப் படாத பாடு படுத்துகிறது. அன்று மல்பீசை நாடிச்சென்ற பிரபு, இன்று மானம் காக்கத் துணியின்றித் தயங்குகிறார். புலவர் கண்களிலே அவர் பரிதாபகரமான காட்சியாகத் தோன்றுகிறார். "ஐயா பிரபு! அன்று சுதேசியை ஆதரிக்கும்படி என் கற்பனைப் பெண் மன்றாடி மன்றாடி வேண்டினாளே. நல்ல சரக்கு சீமைச் சரக்கு என்று நீர் அந்த நாட்டுச் சரக்கைப் பழித்தீரே" இன்று, அந்த

> "சீனத்துப் பட்டெங்கே?—உயர்ந்த
> சீமைத் துணிகளெங்கே?
> மானத்தைக் காக்க இந்நாள்—எந்த
> மல்பீசைக் கண்டோமையா?"

என்று ஏளனமும் கோபமும் கலந்து கேட்கிறார். அந்தப் பிரபு தமது குற்றத்தை யுணர்ந்து கம்பி நீட்டுகிறார். அவர் போகட்டும்; கவியின் இந்தப் பாடலிலே நாம் சிறிது திளைப்போம். இந்தப் பாடலிலே கருத்துக்களின் கோர்வை உணர்ச்சிக் கொடியிலே பின்னி, சோகக் குரலை எழுப்பித் தெள்ளத்தெளிந்த தமிழில் அற்புதமாக மிதக்கிறது.

கதரும் கைம்பெண்ணும் நாம் நாள்தோறும் கேட்கும் விஷயங்கள்தான். எவ்வளவோ தலைவர்கள் அதைப்பற்றிப் பலதடவை பேசியிருக்கிறார்கள்; எழுதியுமிருக்கிறார்கள். ஆயினும் அதே விஷயத்தை எவ்வளவு லாவகமாகக் கவி தன் கவிதையில் பூட்டுகிறார். கவியின் விவாதத் திறமையும், மக்கள் மனதிலே கருத்துக்களை எளிதிலே புகட்டும் திராணியும், இந்தக் கதர்ப்பாட்டிலே மிக நேர்த்தியாக வெளியாகின்றன. இதைப் படிக்கும்போது நாமெல்லாம் சாதாரணமாக நினைத்த விஷயம்தான்; ஆயினும் கவிஞனைப்போல் இவ்வளவு தெளிவாக யாருமே கூறமுடியாது என்றுதான் நமக்குப் படுகிறது. "What of't was thought but never so well expressed" என்று கவிதைகள் அமையவேண்டும் என்று கூறுவார்கள். அதற்குக் கதரின் கவிதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

VI

ரோஜாவின் கீதம்.

கடவுள் ஒரு கவிஞன். அந்தக் கவிஞனின் அற்புதக் கவிதை தான் இயற்கை. அந்த இயற்கையில் எவ்வளவோ அழகு படர்ந்து ஒளிர்கிறது. அது தன்னிலே எவ்வளவோ பெரிய தத்துவங்களைப் பொதிந்து வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தத்துவங்களைக் கண்டுபிடிப்பதற்காக கவிஞர்கள் இயற்கையை நாடிப்போகிறார்கள். இயற்கை எழுப்பின இனிய குரலை சாதாரண காதுகளால் கேட்கமுடியாமலிருக்கலாம். ஆனால் தமது வாழ்வை அந்த இயற்கையுடன் இணைத்து, இன்பம் துய்க்கும் அறிஞர்கள் அந்தக் குரலைக் கேட்டு, அதன் நுணுக்கங்களை நமக்கு அறிவுறுத்துகிறார்கள். அந்த அறிஞர் கூட்டத்தைச் சேர்ந்தவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

பூந்தோட்டத்திலே, பூமகளின் புன்னகைபோல் எத்தனையோவித மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன. அல்லி, மல்லி, செண்பகம், தாமரை யென எத்தனையோ பூக்கள் நம் கண்ணெதிரே படுகின்றன. ஆயினும் அந்த மலர்களுக்குள் மலராக, மலர்வது ரோஜாப்பூ. தோற்றம், நிறம், மணம் முதலிய எல்லா அம்சங்களும் இங்கிதமாக அமைந்து அழகைச் சொரிகிறது ரோஜாப்பூ. அதன் எழில் கொள்ளையிலே மனம் பறிகொடாதவர்கள் இருக்கமுடியாது. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் ரோஜாமலரை விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே காரணத்தைக் கொண்டு அதை விரும்புகிறார்கள் என்று கூறமுடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அதைப்பார்க்கின்றனர். அது அவரவரின் மன எழுச்சிக்குத் தகுந்தவண்ணம் அவர்களுக்குக் காட்சி தருகிறது.

நந்தவனத்திலே ரோஜா மலர்ந்துவிட்டது. அங்கே வந்த கன்னிப் பெண் அதைக் கண்டு ஆனந்தமடைகிறாள்.

அந்தப் பூவைக் கொய்து தன் குழலிலே சொருகிப் பக்கத்துச் செடியிலே மறைந்துகொள்கிறாள். தன்னைத் தேடி வரும் தன் அன்பனுக்கு அது அவள் இயற்கையழகை இன்னும் அழகாக எடுத்துரைக்கும் என்று அவள் எண்ணினாள். மங்கையின் குழலிலே சொகுசாக இருக்கும் இம் மலர் ஒரு எழுத்தாளனின் இலக்கிய சிருஷ்டிக்குக் காரணமாகவும் அமைகிறது.

ஒரு சிவப்பு ரோஜா மலர் கொண்டு தந்தால் அந்த மாணவனை மணந்து கொள்வதாக வாக்களித்தாளாம் ஒரு கன்னி. சட்டப் புத்தகங்களைப் படித்துப் படித்து, வாழ்க்கை அனுபவத்தைப் படிக்க மறந்த அந்த இளைஞன் தனது புத்தகங்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, சிவப்பு ரோஜாவைத்தேடி அலைகிறான். ஆனால் அது கிடைக்கவில்லை. எங்கும் வெள்ளை ரோஜா மலர்தான் காணப்பட்டன. அலுத்துப்போய் அவன் ஒருமரத்தடியில் கிடந்து புலம்புகிறான். அந்த மரத்திலே வசித்த வானம்பாடிப் பறவை அவனின் காதல் ஏக்கத்தைக் கேட்டது. தியாக உணர்ச்சி நிரம்பிய பறவை அது. அது அன்றிரவே பறந்து ஒரு ரோஜா செடியின் முள்ளிலே தனது மார்பை அழுத்தி, இரத்தத்தை அதன் மூட்டிலே சிந்தியது. ரோஜா செடியின் வேரிலே பறவையின் இரத்தம் ஏற ஏற, செடியிலிருந்த வெண்ணிற ரோஜாவுக்கு செந்நிறமும் ஏறிற்று. காலையில் துயில் எழுந்த மாணவன் அதைப் பறித்து, காதலியிடம் கொண்டு போனான். "பூ! இவ்வளவுதானா" என்றுகூறி அவள் அதை ரோட்டிலே எறிந்து விட்டாள். அவன் தன் புத்தகக்கட்டைப் பிரிக்க ஆரம்பித்தான். ஒரு ரோஜாவை வைத்துக்கொண்டு இப்படி ஒரு அற்புதமான இலக்கிய சிருஷ்டியில் இறங்கியிருக்கிறார் "ஆஸ்கார் வைல்டு".

சிந்தனைக்கடலிலே மூழ்கி ஒரு பாதைவழியாகப் போனார் ஒரு பக்தர். மலரின் மணம் அவர் கவனத்தைக் கவர்ந்துவிட்டது. அதைப் பறித்து தேவ சன்னிதானத்தில் கொண்டு போய்ச் சாத்துகிறார். கடவுள் அர்ச்சனைக்கு அது ஒரு சிறந்த சாதனம் என்பது அவர் எண்ணம்.

இவ்விதம் ஒவ்வொருவருக்கும் விதம் விதமாக மகிழ்ச்சியூட்டும் ரோஜா மலரில், கவிகள் வாழ்க்கையின் மகத்தான

ரகசியங்களைத் தேடிப்பார்க்கிறார்கள். "எனது கை கேட்கிறது. வாய் பார்க்கிறது. காது செய்கிறது. கண் பேசுகிறது. எனது கை காதாகிவிடும்போது, காது கையாகிவிடுகிறது" என்னும் பொருள்பட ஒரு புலவர் கூறுகிறார். அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் கவிகள். அவர்களின் கண்கள் கேட்கும், காதுகள் பேசும். அவர்கள் இயற்கையை அணுகும் நோக்கமும், முறையும் அவர்களுக்கே வாய்ப்பவைகளாகும். இயற்கை உடலிலே கவிகள் தமது இருதயத்தைப் பொருத்திப் பார்ப்பார்கள். இயற்கையின் இன்னிசை அந்த இருதய வீணையிலே எழுந்து வியாபிக்கும்.

பாரசீகத்திலே, உமர்க்கய்யாம் ஒரு தத்துவ ஞானப் புலவர். அவர் ஒருநாள் ரோஜா மலரில் தனது இருதயத்தைப் பொருத்திப்பார்த்துவிட்டு, தமது பாரசீக மொழியிலே எதையோ பாடிக்கொண்டு போகிறார். அவர் பாட்டின் பொருளை நம்மால் அறிய முடியவில்லை. ஆனால் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் மனம் அதைக் கேட்டது.

"சிரிக்கும் ரோஜா மலரைப்பார்
செப்பும் இனிய மொழியைக்கேள்"

என்று உமர்க்கய்யாம் பாடியதாக கவிமணி நம் சொந்த மொழியிலேயே நமக்குச் சொல்லுகிறார்.

ரோஜாவின் இனிய மொழியை நம்மால் கேட்கமுடியுமா? ஒரு உண்மையான கவிஞனால்தான் அதைக் கேட்கமுடியும். கவிமணி கேட்டுச் சொல்கிறார். அதை நாம் படித்துப் பார்ப்போம்.

பூந்தோட்டத்திலே போகிறார் கவிமணி; உலர்ந்து வெந்து கரிந்தங்கோர் ரோஜா நின்ற நிலை அவர் மனதைக் கவர்ந்தது. வாழ்க்கையின் மகிழ்ச்சிப் பெருக்கிலே பிரபஞ்ச ரகசியங்களை சரியாக கேட்க முடியாது. துன்பச்சுழியிலே தான் அந்த ரகசியங்கள் நிச்சயமாகவும் தெளிவாகவும் புலப்படும். கவிமணி சிரிக்கும் ரோஜாவை ஒதுக்கிவிட்டு, கரிந்த ரோஜாவை அணுகிப்பார்க்கிறார். அது அவருக்குப் புலப்படுத்தும் உண்மைகளை "ரோஜாவே ஏன் வாடுகிறாய்"

என்ற தலைப்பில் உள்ள அவரின் பாடல்களில் நாம் படிக்கலாம். ஏன் வாடுகிறாய் என்ற கேள்வி பிறந்ததும் ரோஜா பதில் கூறுகின்றது.

கள்ளன் வந்தான், கள்ளன் வந்தான்,
கதவையுடைத்தான்—வீட்டுக்
கதவையுடைத்தான்;
கொள்ளை யிட்டென் பொருளையெல்லாம்
கொண்டு போய்விட்டான்—ஐயோ!
கொண்டு போய்விட்டான்.

ரோஜாவின் இதழ்கள் ஒன்றாய்க்குவிந்து மொட்டாக இருந்தன. அந்த மொட்டுக்குள்ளே சும்மா மூடிக்கிடந்தது அதன் நறுமணம். காலம் கனிந்ததும் மொட்டு மலராக விரிந்தது. அதன் மணம் எங்கும் கமழ்ந்தது சிறிதுநேரம். பிறகு அது மறைந்து விட்டது. இதுதான் விஷயம். மலர் மொட்டாக இருந்து, மலர்ந்து மணம்வீசும் ஒரு இயற்கை நிகழ்ச்சி. இதை நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். தாவர சாஸ்திரிகள், மலரின் சரித்திரத்தை இதைவிடத் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார்கள். சில அகராதிப் புலவர்கள், மலரின் விருத்தாந்தத்தை அழகாகப் படம்பிடித்து எழுதி வைத்திருக்கின்றனர். கவிமணியும் இதே வேலையில்தான் ஈடுபடுகிறார் என்று நினைக்க முடியுமா? கவிகளுக்கு தாவர சாஸ்திரம் தெரிந்திருக்கலாம்; ஆனால் மலரின் உடற்கூறுகளை ஆராய்ந்து வெளியிடும் வேலை அவருடையதன்று. கவிக்கு மலரிடம் வேறு விதமான வேலைகளுண்டு. மேலே காட்டிய பாட்டின் சொற்களின் செழுமையையும், அமைப்பையும் கூர்ந்து கவனித்தால், அதிலே ஓர் அரிய உண்மை படர்ந்து தழுவி இருப்பதைக் காணலாம்.

பூவின் லட்சியமென்ன? மலர்ந்து மணங்கமழ்வது தானே. அந்த லட்சியம் கைகூடவேண்டுமானால் அதற்குரிய பக்குவம் வாய்க்கவேண்டும். அந்தப் பக்குவம் கிடைக்கப் பெறாததினால் அது குவிந்து மொட்டாகி இருந்தது. மலரின் அரிய தன்மையான மணம் அதற்குள்ளே சிறைப்பட்டுக் கிடந்தது; அந்தச் சிறைக்கோட்டத்திலிருந்து அந்த மணத்

துக்கு விடுதலை கிடைத்தால் தான் மலரின் லட்சியம் கைகூடும். விடுதலை கிடைக்க வேண்டுமானால் மலர் மலர்ந்து விரிய வேண்டும். இந்த மலரைப் போன்றது தான் மனிதனின் உள்ளமும். மனிதனின் உள்ளமும் மலரைப்போல் மலர்ந்து விரிய வேண்டும். அப்பொழுதுதான், அவனின் தேவாம்சம் அல்லது "ஆத்மா" விடுதலையடைந்து அவனின் வாழ்க்கை லட்சியம் கைகூடும்.

மனிதனின் மனம் விரிவடைய வேண்டுமானால், அறிவு முதிர்ச்சி என்ற பக்குவம் அவனுக்கு ஏற்பட வேண்டும். அந்தப் பக்குவம் ஏற்படாதவரை அவனின் மனமும் மலரின் மொட்டைப்போல் குவிந்தே இருக்கும்; அவனின் தேவாம்சம் அதற்குள்ளே சிறைப்பட்டுக்கிடக்கும். மலருக்கு மணம் இருப்பதைப் போலத்தான் மனிதனிடமும் ஆத்ம ஒளி இருக்கிறது. அது எங்கே இருக்கிறது? காணமுடியவில்லையே யென்று சிலருக்கு சந்தேகம் வரலாம். அவர்களுக்கு ஒரு வார்த்தை. மலரிலே மணம் இருக்கத்தானே செய்கிறது. அதைத் தொட்டுப் பார்க்க முடிகிறதா? கண்ணினால்தான் அதைக் காணமுடியுமா? முடியாது. ஆயினும் அது அந்த மலரில்தானே படர்ந்திருக்கிறது. இதைமறுக்க முடியுமா? இப்படிதான் மனிதனிடமும் ஆத்ம ஒளி என்கிற அரிய சக்தி இருக்கிறது. அதைக் காணமுடியாது, தொடமுடியாது, ஆயினும் அது மனிதனிடமே இருக்கிறது. இறைவன் மனிதனைத் தனது அம்சமாகவே சிருஷ்டித்தார் என்ற உண்மையை மலர் நமக்குத் தெரிவிக்கிறது.

மொட்டுக்குள் சிறைப்பட்டுக்கிடக்கும் மணமும், மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் ஆத்ம ஒளியும் நீண்ட நாள் அந்தக் கூட்டுக்குள்ளே தங்கி வாழமுடியாமல் வெளியில்வர துடித்துக் கொண்டேயிருக்கும். சிறைப்பட்டுக் கிடக்கும் தன்மை அவைகளிடம் இல்லை. எங்கிருந்தோ அவைகள் வந்தன. சிறிது நேரம் இவ்வுலகில் தங்கி இருந்துவிட்டு தம் பிறப்பிடத்தை நோக்கி அவை போய்விடவேண்டும். "குழந்தை" என்ற தலைப்பில் கவிமணி வெளியிட்டிருக்கும் முதற் பாட்டில் அவர் இந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகிறார்.

"எங்கே யிருந்து வந்தாய்? குழந்தாய்!—அதை
யானும் அறிந்திடச் சொல் குழந்தாய்!
எங்கும் நிறை வெளியில் இருந்தேன்—சற்று
இங்கும் இருக்க வந்தேன் அம்மா!"

ஆம்! சிறிது நேரம் தங்கி இறைவனின் உண்மையை உலகத்துக்குக் காட்டிவிட்டு, அவைகள் போய்விடத் துடித்துக் கொண்டே இருக்கும். தனது பிறப்பிடத்தை விட்டுத் தூர தேசத்துக்குச் சென்றவன் தன் சொந்தஇடத்தைக் காணத் துடித்துக்கொண்டுதானே யிருப்பான். தன் காதலியை விட்டு நீண்டநாள் பிரிந்திருப்பவன் மீண்டும் தன்காதலியைச் சென்று சேர விரைந்துகொண்டுதானே இருப்பான். அது போலத்தான் மலரின் மணமும், மனிதனின் ஆத்மாவும். எங்கும் நிறைந்த சூக்ஷ்ம நிலைமையிலிருந்து பிரிந்து வந்த சிறு பொறிகள் அவை. தம் பிறப்பிடத்தை நோக்கிப் போய் விட அவை துடித்தக்கொண்டே தானிருக்கும். ஆகவே, பருவகாலம் வந்தவுடன் மொட்டு விரிந்து மணத்துக்கு விடுதலையளிக்கும்; அறிவு முதிர்ச்சி வந்தவுடன், அல்லது, ஞானசிரியர் உபதேசிக்கும் தெளிந்த அறிவுரைகளைக் கேட்டவுடன், குவிந்திருக்கும் மனிதனின் மனப்பூட்டு உடைக்கப்பட்டு, அவனுள்ளிருக்கும் தெய்வாம்சம் வெளியாகும். இந்தப்பருவகாலமும், அறிவுத் தெளிவும் நமது இச்சையாக வருவனவல்ல. நமக்கும் மேலான ஏதோ ஒரு சக்தியால் இயக்கப்பட்டே அவைகள் நிகழ்கின்றன. எத்தகைய சடங்குகளும், முன்னெச்சரிக்கையுமின்றி அவை தம் வேலையைச் செய்யும். ஆகவே, கவி அதைக் கள்வனாக பாவித்து,

"கள்ளன் வந்தான் கள்ளன் வந்தான்
கதவை யுடைத்தான்—வீட்டுக்
கதவை யுடைத்தான்"

என்று நயமாகக் கூறுகிறார். மலரின் விலையேறிய பொருளாகிய மணத்தை எடுத்துச் செல்வதற்காக, அதன் இதழ்களை உடைக்கும் சக்தி கள்ளனாகத்தானே இருக்க முடியும்.

மொட்டு மடலவிழ்ந்ததும் என்ன நடக்கிறது? "கம்" மென்று மணம் வீசி எங்கும் பரவுகிறது. மலரின் சுற்றுப் புறங்கள் அதைச் சிறிதுநேரம் அனுபவிக்கின்றன. பிறகு

அந்த மணம், தங்கியிருந்த மலரை உதறித் தள்ளிவிட்டு, எங்கும் நிறைந்த காற்றிலே கலந்து தன்னை இழந்துவிடுகிறது. உலகத்தில் காணும் சகல பொருள்களும் சிருஷ்டிக்கப்படுவதற்கு நோக்கம் ஒன்றிருக்கவேண்டும். அந்த நோக்கம் மலரைப்பொறுத்தவரை தனது மணத்தினல் ஆத்தும போதனை செய்வதுதான். உருவமோ உடலோ இல்லாத தனது மணம், தன்னிடத்தில் சிறிதுநேரம் தங்கியிருந்து சுகந்தம் வீசியதையும், பிறகு அது காற்றிலே கலந்து மறைந்துவிட்டதையும் பற்றி, மலர் ஆத்துமகீதம் வெளியிடுகிறது. இப்படியே பக்குவமடைந்த மனிதனின் மனதிலிருந்து ஆத்தும கீதம் வெளியாகும். சிறிதுநாள் தனது சூழ்நிலைகளுக்கு இறைவன் உண்மையைப் போதித்துவிட்டு, எங்கும் நிறைந்திலங்கும் ஜோதியான இறைவனுடன் அது இரண்டறக் கலந்துவிடுகிறது. காற்று மணத்தையும், இறைவன் ஆன்மாவையும் தன்னிடம் அணைத்து, தானே அதுவாய், அதுவேதாஞய் ஆய்விடும் கருத்துத்தான்,

கொள்ளை கொண்டேன் பொருளையெல்லாம்
கொண்டுபோய்விட்டான்—ஐயோ!
கொண்டுபோய்விட்டான்

என்ற வரிகளில் எதிரொலிக்கின்றன.

மலர் தனது கடமையைச் செய்வதற்குமுன், தனது விரோதிகளால் அழிந்து விடாமல் இருப்பதற்காக, இயற்கை அதன் பாதுகாவலர்களாக முட்களை வைத்திருக்கிறது. அவை கத்திகட்டிக் காத்து நிற்கும் காவலாளரைப்போல் மலரைப் பாதுகாக்கின்றன. ஆயினும் இந்தப்பாதுகாவல்களுக்கு மணம் கட்டுப்பட்டதில்லை. மாயை ரூபத்தில்வரும் எதிரிகளிடமிருந்து மலர் தனது உடலைப்பாதுகாத்துக்கொள்ளலாம்; ஆனல் மணத்தின் வேகத்தைத் தடுப்பதற்கு அந்தக் காவலுக்கு சக்தி கிடையாது. சமயம்வந்ததும், அது இந்தக்காவல்களையெல்லாம் லட்சியப்படுத்தாமல் தனது திக்கைநோக்கிப் போய்விடும்.

"கத்தி சட்டிக் காத்து நின்ற காவலாளரை—
பல காவலாளரை
எத்திவிட்டு ஓடுகின்றான் என்ன மாயமோ?—
ஐயோ என்ன மாயமோ" ?

என்று மலர் கவியிடம் முறையிடுகிறது. மனித வாழ்க்கையி லும் இப்படித்தான். அதிகாரம், பணம், பந்துக்கள் என்ற எவ்வளவோ பாதுகாவல்கள் மனிதனுக்குண்டு. இந்த உல கத்திலே அவனை நிரந்தரமாக வைத்துக்கொள்ள இந்தப் பாது காவல்களுக்கு சக்தி கிடையாது. மனிதனின் ஆன்மா கடவுளை நோக்கிக் காலடிவைக்கும்போது, இந்தப்பாதுகாவல்களையெல் லாம் அது துச்சமாக எண்ணிவிடும். இது மட்டுமல்ல; ஆன் மாவைத்தாங்கிநிற்கும் பாத்திரமாகத்தான் உடல் இருந்தது. ஆனால் அந்த ஆத்மா தனது இருப்பிடத்தைப் பார்த்துப் பறந்துவிடும்போது, எந்த சக்திகளாலும் எந்தப் பாதுகாவல் களாலும் அது தங்கியிருந்த உடலைப் பாதுகாக்க முடியாது; அது அழிந்தேவிடும். இந்த அரிய போதனையை மலரின் மேல் ஏற்றி, கவி நமக்கு எடுத்தோதும் நயம் நமது கருத் தில் சென்று இனிக்கிறது.

மலரின் மணம் போனபின்பு மலரை யார் தீண்டுவார் கள்? மணத்தினால் ஏற்பட்ட மகிமைதானே அதற்கு. எனவே அது போன பின்,

"பூவுலகில் வாழ்ந்ததினிப் போதும் போதுமே" என்று கூறுவதாகக் கவி சொல்லுகிறார். ஆம்! இனி வாழ் வதில் உபயோகமில்லைதான். மணத்தைத்தாங்கும் பாத்திர மாகத்தான் அது இருந்தது. இனி அந்தப் பாத்திரத்தைத் தாங்கிக் கொண்டிருந்த கொடியிலே அது இருக்க நியாய மில்லை. மண்ணோடு மண்ணாக அது கலந்து விடவேண்டியது தான். அந்த இடத்திலே புதிய மலர்கள் தோன்ற வேண்டும்; இனியும் மணம் வீசவேண்டும்; மறையவேண் டும்; இதுதான் முறை. மனிதனும் இப்படித்தான். ஆத்மா பரிபக்குவமடைந்து, தனது குறியை எட்டிப் பிடித்துவிட்டால் இந்த உடல் உலகில் இருக்க உரிமையே கிடையாது. அது மண்ணிலே மறைந்து விடவேண்டும். புதிய மனிதர்கள் பிறப்பார்கள்; ஆத்ம விஜாரணை செய்வார்கள்; மறைந்து விடு வார்கள்.

"ஈடற்ற கலமிது கவிழ்த்திக் கவிழ்த்தியுயிர்
ஏனோதிருத்திவைப்பாய்"

என்று "அஞ்சலியில்" கவிமணி இதைத்தான் கூறுகிறார்' பிரபஞ்சம் மாறிக்கொண்டே போகும்; மாறும் உலகத்தில் ஒவ்வொருவரும் தம் கடமையைச் செய்துவிட்டு மறைந்து விடவேண்டும். அவர்கள் இன்னும் பிறப்பார்கள்; இறப்பார்கள். வாழ்க்கையின் ரகசியமும் நியதியும் இதுதான். இந்தக்கருத் துக்களைத்தான் நமது ஜீவித கவி தே. வி. "ரோஜாவே என்வாடுகிறாய்" என்ற பாட்டின் ஜீவனாக ஊதுகிறார். அந்தப் பாடலை பலமுறை படித்துப் படித்து நாம் ஆத்ம போதனை பெறவேண்டும்.

"கள்ளன்" என்பது வண்டைக் குறிக்கும் எனப் பொருள் கொண்டு, வண்டு மதுவைத்திருடிப் போவதைக் கவி சித்திரிக்கிறார் என்றும் கருதலாம். ஆனால் அந்தப் பாடலில் கவியின் இதோபதேசம் இருக்கிறது என்று கருதி அந்தக் கோணத்திலிருந்து அதைப் பாக்கும்போது "வண்டு" மறைந்து விடுகிறது. எனவே நான் நின்ற கோணத்திலிருந்தே கவிதையைப் பார்த்திருக்கிறேன்.

VII

சர்வாதிகாரி.

இன்றைய உலகப்போக்கிலே மனிதவாழ்வு நிச்சயமற்றதாகி விட்டது. நம்பிக்கையும், சமர்தானமும் மறைந்து, அச்சமும்; துன்பமும் கோரத்தாண்டவம் புரிகின்றன. நிலைகெட்ட இந்தக் குழப்பத்திற்கு இயற்கையான காரணங்கள் உண்டா? இல்லை. "கருணையின்றி மனிதருள்ளம் கருங்கல்லான காரணத்தினால்" வந்த வினைகள் இவை என்பது தே. வி. யின் துணிபு. வெயிலென்றும், மழையென்றும் பாராமல், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைக்கும் பாட்டாளி முதுகெலும்பு ஒடிந்துகிடக்கிறான். அவன் வயிற்றுச் சோற்றைத்தட்டிப் பறித்து, கோடி கோடியாக குவித்துப்புதைத்து வைக்கிறான்முதலாளி என்ற கேடுகெட்டபாவி. அவனுக்குப் பக்கப்பலமாக இருந்து, பாமரன் கண்ணிலே மண்ணைத்தூவுகிறான், வஞ்சகப் பூசாரி கடவுளின் பேரைச் சொல்லிக் கொண்டே. அதிகார வெறிபிடித்த சர்வாதிகாரி குடிகளின் உரிமையைத் தன் பாதத்தடியிலே தள்ளி மிதிக்கின்றான். எனவே, வாழ்க்கை நியதியில் சலசலப்பு ஏற்படுகிறது; வேற்றுமைகள் வளர்கின்றன; குமுறல் ஓசை எழும்புகின்றது; போர் முரசு ஒலிக்கிறது. இந்தக் குழப்பத்திலே செய்வகை யறியாது, தலையிலே கையைத்தாங்கி விண்ணை அண்ணாந்து பார்த்துப் பொருமுகின்றான் சாதாரண மனிதன். இந்த நிலைகெட்ட உலகப்போக்குக்குப் பரிகாரமில்லையா? மனிதனின் வாழ்க்கைப்பாதையிலே இன்பத்தைச் சேகரித்துவைக்கக் கடமைப்பட்டிருக்கும் கவிஞர்கள், இதற்குப்பரிகாரம் செய்யவேண்டாமா? வேண்டும். பரிகாரம் தந்திருக்கிறார் கவிஞர் பெருமான் தேசிக விநாயகம் பிள்ளை. "சர்வாதிகாரி" என்ற பாடல் அந்த இனத்தைச் சேர்ந்தது. அதைச்சிறிது பார்ப்போம்.

உலக சமாதானத்திற்கு உலைவைக்கும் புண்ணிய கைங்கிரியத்தில் முன்னிற்பவர்கள் **சர்வாதிகாரிகள்.** மனித இனத்தின் உயிரும் உடைமையும், தமது இரத்த வெறியைத்

திருப்திப் படுத்தவே இருக்கின்றன என்று உறுதியாக நம்பு கின்றனர் சர்வாதிகாரிகள். அவர்களின் இந்த விநோத சித் தாந்தம் காரணமாக, யுகம் யுகமாகக் கஷ்டப்பட்டு, எவ்வ ளவோ பேரறிஞர்களாலும், தீர்க்கதரிசிகளாலும், புலவர் பெருமக்களாலும் நிர்மாணிக்கப்பட்ட உலக நாகரிகம் அழி யும் தறுவாயில் வந்து விட்டது. குடிகளுக்காகக் கோன் என் பது மறைந்து, கோனுக்காகவே குடிகள் என்ற நாச சித்தாந் தத்தை சர்வாதிகாரிகள் கைக்கொண்டனர். இந்தக் காரணங் களால் உலகைக் கவிந்திருக்கும் துயரப் படலத்தை, ஒருநாள் கவிஞரின் கற்பனைக் கண்கள் கண்டு விட்டன. சர்வாதிகாரிக ளின் சர்வ நாசக் கொள்கை, அவர் உள்ளத்தின் அமைதி யைக் குலைத்தது. சாந்தம் நிறைந்த கவிமணியின் நெஞ்சகத் தில் ஆவேசப் புயல் வீச ஆரம்பித்தது. உடனே அனல் கக் கும் சொற்கள், அவரின் உள்ளத்திலிருந்து பொட்டித் தெறித் தன. அவர் பாடுகிறார்:—

"தேடித்தேடி இரை கிடையாதொரு
    சிங்கவேறு முழங்கும் முழக்கினில்
பாடுமின்னிசை கேட்டிடலாமதன்
    பார்வை தன்னில் இரக்கமும் பார்க்கலாம்.
வாட வாயில் வயிற்றில் அடித்தெமை
    வானின் மீன்களை எண்ணிட வைத்தவன்
நீடு வஞ்சகன் செய்த கொடுமை இந்
    நெஞ்சில் ஆறுதல் காண்பதரிதரோ"

ஆம்! சர்வாதிகாரிகளின் வஞ்சக ஆட்சியிலே மக்களுக்கிழைக் கப்படும் இன்னல்கள் கணக்கில் அடங்காதவை. அவற்றை நினைத்தாலே நெஞ்சு சுடுகிறது. அவன் எதை வேண்டுமானா லும் செய்யட்டும். ஏழைகளின் வயிற்றில் அடித்து அவர்க ளைப் பட்டினி யிட்டுக் கொல்லுகின்றானே! அதைப் பொறுக்க முடியுமா? அதுதான் போகட்டும். 'கும்பி காய்கிறதே' என்று முறையிடக்கூட முடியாத வண்ணம் அவன் குடிக ளின் வாயிலுமல்லவா அடித்துவிட்டான், குதிரை கீழே தள் ளினதுமன்றி குழியும் பறித்த கதைபோல. அதை நினைக்கும் போதுதான் அவன் செய்யும் கொடுமைகளின் வேகம் நன்றா கத் தெரிகிறது கவிக்கு. அதைத்தான் மேலே காட்டிய பாட் டின் இறுதி நான்கு அடிகளிலும் கவி கூறுகிறார். தேசத்தின்

பேரையும், அரசியலின் பேரையும் கூறிக்கொண்டு சர்வாதிகாரிகள் செய்யும் அநீதியும், சூழ்ச்சியும், **வாயில், வயிற்றில்** என்ற இரண்டு சொற்களில் எவ்வளவு அற்புதமாக சித்திரிக்கப்படுகின்றன. தான் செய்யும் அக்கிரமங்களுக்கு எதிராகப் பொதுமக்கள் அபிப்பிராயம் வெளியிட்டால், எதிர்ப்பு சக்தி வலிமை பெற்றுத் தன்னையழித்துவிடும் என்று நினைத்த சர்வாதிகார நாடுகளிலே—ஏகாதிபத்திய ஆட்சியிலே, பத்திரிகைச் சட்டமென்றும், அவசரச் சட்டமென்றும், தடையுத்தரவென்றும் கூறி, மக்களின் பேச்சுரிமையைப் பறிக்கும் அரசியல் சூழ்ச்சியை **வாயில் அடித்து** என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறுர் கவிமணி. அதை ரசித்து மகிழவேண்டும்.

நீடு வஞ்சகன் செய்த கொடுமைகளை எண்ணிப்பார்த்து வேதனையடைந்த கவி, அந்த வஞ்சனுக்கு ஆளாகி துடிதுடிக்கும் கோடிக்கணக்கான மக்களையும் எண்ணிப்பார்த்தார். அவர்களின் துன்பத்தை தனது துன்பமாகவே கருதினுர். எனவே, 'நெஞ்சில் ஆறுதல் காண்பதரிதரோ'' என்று, அந்த பஞ்சைகளின் பிரதிநிதியாக நின்று அவர் முழங்குகிறுர். வெறும் முழக்கத்துடன் அவர் திருப்தியடையவில்லை. எனவே, அவர் சர்வாதிகாரிகளுக்கு முதல் முதலில் ஒரு எச்சரிக்கை செய்கிறுர். பாட்டின் முதல் நான்கு அடிகளும் அந்த எச்சரிக்கையைத்தான் பறை சாற்றுகின்றன.

''தேடித் தேடி இரைகிடையாதொரு
சிங்கவேறு முழங்கும் முழக்கினில்
பாடுமின்னிசை கேட்டிடலா மதன்
பார்வை தன்னில் இரக்கமும் பார்க்கலாம்''

காட்டிலே ஒரு சிங்கம். குறிப்பிட்ட வேளையில் அதற்குப் பசிவந்தது. வழக்கப்படி தனது இரையைத் தேடித் தேடி அலைந்தது காடெல்லாம். ஆனுல் கிடைக்கவில்லை. ''நமது விதி அவ்வளவுதான்'' என்று அது திரும்பிவிட்டதா? இல்லை. கோழைக்குத்தான் விதி புகலிடம். சிங்கம் அந்த இனத்தைச் சார்ந்ததன்று. எனவே, தனது பசி தணிவதற்கு நியாயமாகத் தனக்குக் கிடைக்கவேண்டிய உணவு தேடித்தேடி அலைந்த

பிறகும் கிடைக்கவில்லையாகையால் அந்தச் சிங்கம் கோரமாகக் கர்ஜித்தது நடுக்காட்டில் நின்று. தந்திரமாகப் பதுங்கியிருந்த மிருகங்களெல்லாம் அதன் காலடியில் கலங்கி வந்து விழுந்தன. துஷ்டமிருகம் ஒரு கர்ஜனையினால் எத்தனை உயிர்களைக் கொன்றுவிட்டது என்று கவிஞர் எண்ணவில்லை. சிங்கத்தின் முழக்கத்திற்குக் காரணம் உண்டு. அதை அதன் கண்ணில் காணலாம். கவிஞர் கண்டார், சிங்கத்தின் கண்களிலே இரக்கப் பார்வை இருப்பதை. தனது முயற்சிக்குப் பலன் கிடைத்திருந்தால் இந்த அழிவு நேர்ந்திராதே. நாமும் அந்த மிருக இனத்தின் உடன்பிறப்புத்தானே. நமது உணவு மறைக்கப்பட்டதினாலல்லவா இப்படிச் செய்ய நேர்ந்துவிட்டது என்று சிங்கத்தின் கண்கள் கவிஞருடன் பேசின. எனவே, கவிஞருக்கு அதன் கர்ஜனை கோர சப்தமாக அன்றி, இன்னிசையாகக் கேட்டது. ஆம்! அது இன்னிசைதான். "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையழித்திடுவோம்" என்ற பாரதியின் பாடலைத்தான் பசியால் வாடிய சிங்கம் முழங்கிற்று. தேடித்தேடி இரைகிடையாதொரு சிங்கவேறு முழங்கும் முழக்கத்தைப் போலவே பாடுபட்ட தன் உழைப்பைப் பறிகொடுத்து, பசியால் வாடும் மனிதனும் ஒரு நாள் கர்ஜிப்பான். அப்பொழுது, அவன் உணவைத் தட்டிப் பறித்தவர்கள் அவனுக்கு இரையாவார்கள். அந்தச்சமயத்தில், அவனைப்புரட்சிக்காரன், நாசவேலைக்காரன் என்று பிரசாரம் செய்வதில் உபயோகமிராது. ஏனெனில் ஒடுக்கப்பட்டவனின் குமுறல் வெறியினால் விளைவதல்ல, பசியினால் வருவது. பசிக்கொடுமை பொல்லாதது. ஆகவே அந்த நிலைமை வருமுன்பு சர்வாதிகாரிகள் திருத்தவேண்டும், என்று கவி எச்சரிக்கை செய்கிறார்.

கவிஞர் கூறும் இந்த எச்சரிக்கை பலனளிக்காவிட்டால் நாமே நமக்குத்துணையாகி நமது நிலைமையை வகுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய திட்டங்களையும் கவிஞர் அடுத்த பாடல்களில் வகுத்துக்காட்டியிருக்கிறார்:

அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளந்தேறி செய்வினையில் ஊக்கம் கொள்ளவேண்டுமானால், அடக்கி ஒடுக்குபவனின் உண்மையான சொரூபத்தை அவர்கள் முதலில் உணர

வேண்டும். அப்பொழுதுதான் அவனைப் பற்றிய அச்சம் ஒழியும். எவ்வளவோ நாடுகளுக்கு அவன் அதிபன். கணக்கிலடங்காத தளவாடங்கள் அவன் உத்தரவை நிறைவேற்றக் காத்திருக்கின்றன. அவனை எதிர்த்துப் போரிடுவது சாத்தியமா? என்று பாமரர்கள் பயந்துவிட்டால் நினைத்தகாரியம் நடவாது எனவே அவர்களுக்குக் கீழ்க்காணும் பாட்டின் மூலம் சர்வாதிகாரிகளின் சக்தியின் ரகசியத்தை எடுத்துக் காட்டுகிறார்.

"உன்னைச் சோறும் உடையும் அளித்தனம்
உதிரம் விட்டவன் போர்களை வென்றனம்
எண்ணிலாப் பல நாடுகளுக்கெல்லாம்
இறைவனுக்கி முடியுஞ் சூட்டினோம்
பண்ணுதற் கரிதான பல பல
பணிகள் செய்தவன் கீர்த்தி வளர்த்தனம்
நண்ணும் நன்றி இலாதவன் இன்னொரு
நச்சுவாய் அரவாகி விட்டானையோ"

ஆம்! சர்வாதிகாரி பிறப்பினால் சர்வாதிகாரியா? அவன் இன்றிருக்கும் உயர்ந்த நிலைமை நாம் அளித்த பிச்சைதான். நாம் பாடுபடாதிருந்தால்—போர் முனையில் நமது இரத்தம் சிந்தாமலிருந்தால்—இந்தப் பெருமை அவனுக்கேது? நமது உழைப்பினால்—தியாகத்தினால் அவன் பலமடைந்தான். ஆயினும் அவன் இனறு நம்மையே இம்சிக்க ஆரம்பித்துவிட்டான். அவனை "நண்ணும் நன்றியிலாதவன் இன்னொரு நச்சுவாய் அரவாகிவிட்டான்" என்று குறிப்பிடும் வார்த்தைகளில் கவிமணி எவ்வளவு வெறுப்புணர்ச்சியைக் கொட்டுகிறார். மறந்தும், பிறர்மனம் நோகப் பேசாத பெருந்தகையரான கவிஞர், நச்சரவு" என்று குறிப்பிடும் ஒருவன் ஜனசமூகத்திற்கு எவ்வளவு தீமையானவன் என்பதை நாம் உணரவேண்டும். அவனை நிர்மூலமாக்கும் முயற்சியிலே நமக்கு சலிப்பு ஏற்படக் கூடாது. பிறரின் இரக்கத்தைக் கோருவதற்குக்கூட அவன் தகுதியற்றவன் என்பன போன்ற கருத்துக்களையும் மறைமுகமாக வெளியிடுகிறார் கவி. எவனோ ஒருவன், முன்பின் அறியாதவன் இழைக்கும் தீமையை வேண்டுமானாலும் நாம் பொறுத்துக்கொள்வோம்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்று கூறிய வள்ளுவரின் பரம்பரையினர் பொறுக்கத்தான் செய்வார்கள். ஆனால் நாமே அளித்த செல்வத்தையும், அதிகாரத்தையும், செல்வாக்கையும் துணையாகக்கொண்டு நம்மையே கொடுமைப்படுத்தும் கொடுங்கோலனை மன்னிக்க முடியுமா? கூடாது. ஆகவே, மேல் நாம் செய்யவேண்டியதென்ன? அதையும் கவிஞர் கூறுகிறார்.

"பஞ்சத்தாண்டியாய் வந்த அப்பாதகன்
பாரில் நம்முளம் நையப்படுத்தினால்
கெஞ்சிக் கெஞ்சித் திரிந்த அடியவன்
கேலியாய் நம்மை நாய்களென்றெள்ளினால்
தஞ்சம் நீயென்றடைந்தவன் மீறி நம்
தலையிலேறி மிதிக்கத்தொடங்கினால்
அஞ்சி அஞ்சி அடங்கிக்கிடப்பதோ?
ஆண்மை மிக்கவராக எழுவீரே."

அவன் சர்வாதிகாரி என்பதற்காக அவனை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. எதிர்க்கக்கூடாது. பஞ்சத்தாண்டியாய் வந்து, நம்மிடம் கெஞ்சிக்கெஞ்சித் திரிந்த அடியவன், இன்று சக்தியுடையவனாகிவிட்டானேயென்ற பொறாமையினால் நாம் அவனை வெறுக்கவில்லை. தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் அவனுக்கும் நமக்கும் விரோதமே இல்லை. அதற்காக அவனை எதிர்க்கவும் கூடாது. எனவேதான், சர்வாதிகாரிகளுக்கு எதிராக பொதுமக்களைத் தூண்டிவிடும் இந்தப்பாட்டிலே, கவிமணி தர்க்க ரீதியாக தனது முடிவுக்கு நியாயங்களை எடுத்துக் காட்டுகிறார். பஞ்சத்தாண்டி நம்முள்ளத்தை நையப்புடைத்தால், அந்த அடியவன், நம்மை நாய்களென்று எள்ளினால், தஞ்சம் என்றவன் நம் தலையிலேறி மிதித்தால், அதற்குப் பிறகும், நாம் பொறுமைகொள்வது கோழைத்தனமாகும், எனவே, அவன் அநீதி செய்தால் "ஆண்மை மிக்கவராக எழுவீரே" என்று கட்டளையிடுகிறார். கவிமணி சர்வாதிகாரிகளுக்கு எதிராகப் பொதுமக்களைத் தூண்டிவிடும் இப்பாடலிலே ஹிட்லர், முசோலினி போன்ற நாச வேலைக்காரர்களின்மீது தனக்குள்ள வெறுப்பைக்காட்டிக்கொள்கிறார். அத்துடன், அவரின், விவாதத் திறமையையும், தர்க்க ரீதியையும் நாமும் காணுகிறோம்.

VIII.

கவிமணியும் தொழிலாளியும்.

உலக முழுமைக்கும் பொதுவாகப் பணி செய்யப் பிறந்து, மனித வாழ்க்கைக்குப் புதிய ஜீவனை நல்கி, மனிதனை அமர வாழ்விற்குத் தயார் செய்பவர்கள் உண்மைக் கவிகள்; அருட்கவிகள். தமிழ் நாட்டிலே எத்தனையோ அருட்கவிகள் உண்டு. அவர்களில் ஒருவரை இன்று நம்மிடையே காண்கிறோம். அது நமது பாக்கியம்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் நம்மிடையே வாழும் அருட்கவி. பொருமைத் தீயை வணங்கும் கூட்டம் கவிமணியை விபரீதமாக வியாக்கியானம் செய்யலாம். ஆயினும் கவிமணியின் மேதாவிலாசம் பூரண சோபையுடன் பிரகாசிக்கிறது அவரது பாடல்களில். கவிமணியின் கவிதைகள் வெறும் அலங்காரச் சொல்லடுக்குகள் அல்ல. உயிரற்ற வார்த்தைகளின் கதியற்ற கும்மாளமல்ல. நைந்து போன தமிழனின் உடைந்த உள்ளத்தின் கூப்பாடுகளை எதிரொலிக்கும் எத்தனையோ பாடல்களை அந்தக் கவிதைகளில் காணலாம். வாழ்க்கைச் சுழியிலே சிக்கித் தவிக்கும் பாட்டாளி மக்களுக்குக் கதியளிக்கும் எத்தனையோ பாடல்கள் கவிமணியின் மேதையிலிருந்து உதிர்ந்திருக்கின்றன. அவைகளில் ஒன்று "யாருக்குச் சொந்தம்?" என்ற பாடல்,

இன்றைய சமூக அமைப்பிலே, வாழும் உரிமை பறிக்கப்பட்டு துன்பத்தின் அடித்தளத்திலே அமுக்கி வைக்கப்பட்டிருப்பவன் தொழிலாளி. "உலகம் யாருக்குச் சொந்தம்" என்ற பிரச்னையை அடிப்படையாகக்கொண்டு கவிமணி நிர்மாணித்திருக்கும் கவிதை மாளிகை அந்தத் தொழிலாளி இனத்தின் சொந்தமான இன்பமாளிகையாகும். அந்த மாளிகையை நாம் சிறிது சுற்றிப்பார்ப்போம்.

"தகுதி யுடையர்களுக்கே வாழ்க்கை" என்பது ஒரு சித்தாந்தம். ஆனால் தகுதியுடையவன் யார்? என்ற கேள்விக்கு விடையை உலகப்போரில் தேடிஅலைகிறது மேல்நாடு. ஆயுதபலம் மிகுந்தவன் வாழத்தகுந்தவன் என்பது பாஸிட் கொள்கை. உயர்ந்த லட்சியங்களைக் கூறி உலகத்தை ஏமாற்றத் தெரிந்தவன் வாழத் தெரிந்தவன் என்பது ஏகாதிபத்தியத்தின் ஜம்பம். ஏழைகள் ஏமாந்த சமயத்தில் வஞ்சிக்கத் தெரிந்தவன் வாழும் உரிமை கொண்டவன் என்பது முதலாளி தத்துவத்தின் பிடிவாதம்—அதன் முடிவு உலகப்போர். உண்மையில் உலகம் இவர்களுக்குச் சொந்தமானதுதானா? இவர்களுக்கு வாழும் உரிமை உலகத்தில் உண்டா? இல்லவே இல்லை என்று கூறுகிறார் கவிமணி.

பாடு படுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தமையா
காடுதிருத்தி நல்ல—நாடு
காண்ப தவரலவோ?

என்று அவர் கூறுவதைப் பாருங்கள். உண்மையில் உரியவன் ஒருவனிருக்க உரிமையற்றவர்கள் வாழும் உரிமைக்காகப் போரிடுவது உலகத்தின் விநோதப் போக்கல்லவா என்றுகருதி, எவன் காடுதிருத்தி கழனியுண்டாக்கி உலகத்தை வாழத் தகுந்ததாக சமைத்தானோ அவனுக்கே உலகம் உரிமையுடையது. அவனே வாழத்தகுந்தவன்; சோம்பேறிகளுக்கும், வஞ்சகர்களுக்கும், வெறியர்களுக்கும் உலகத்தில் உரிமையில்லை என்று கவி தீர்ப்பளிக்கும் குரலிலே எவ்வளவு தெளிவும் உறுதியும் காணப்படுகிறது.

கருணையே உருவான கவிமணி, உலகத்திற்கெல்லாம் பொதுவாக நீதி வழங்க வேண்டியவர் ஒருதலைப்பட்சமாகப் பாட்டாளிகளுக்கு மட்டும் பரிவு காட்டலாமா? தொழிலாளிகள் அல்லாதவர்களுக்குப் புகலில்லையா என்று கேட்கலாம். தொழிலாளிகள் அல்லாதவர்கள் என்ற ஒரு இனம் உலகத்தில் ஏன் இருக்கவேண்டும். தொழிலின்றி வாழ்க்கை நடைபெறுதல்லவா?

"மந்திரம் ஓதுவதால்—எங்கும்
வயல் விளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே—அரிசி
சாதம் ஆயிடுமோ?
கட்டும் ஆடையாகப்—பருத்தி
காய்த் தளிப்பதுண்டோ?
சட்டி பானையெல்லாம்—மண்ணில்
தழைத்தெழுவதுண்டோ?"

என்று அடுத்துவரும் பாடல்களிலே கவிமணி அதைத்தானே கூறுகிறார். வயல் விளைய வேண்டுமானால் தொழில் செய்ய வேண்டும்; வயலிலே விளைந்த நெல் சாதமாகவேண்டுமானால் தொழில்செய்யவேண்டும். சமையலுக்குப்பாத்திரம் தொழில் செய்தால்தான் கிடைக்கும். தொழிலினால்தான் துணிகிடைக்கும்என்பதுஉண்மையானால் தொழில் எல்லோருக்கும் பொது தானே. தொழில் பொதுவாகி விடும்போது உலகம் அனைவருக்கும் பொதுவாகி விடுமல்லவா? அதைத்தான் கவிமணி விரும்புகின்றார். தொழில் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றிருக்கும்போது, ஒரு கூட்டம் சோம்பேறிகள் தொழில் செய்ய மறுத்தால், அந்தக் கூட்டத்திற்கு வாழும் உரிமையை கவி மறுப்பது நியாயமல்லவா?

இது மட்டுமா? இந்தச் சோம்பேறிகளுக்கு வாழும் உரிமை அளித்ததினால் உலகத்தில் நிகழும் அநீதிகளுக்குக் கணக்குண்டா? உழைத்து வாழாதவன் வஞ்சித்து வாழுகிறான். கையாலாகாதவன் தந்திரத்தால் வாழுகிறான். இதனால் மக்கள் வாழ்க்கை முறையிலே நிகழும் அநீதிகளுக்குக் கணக்குண்டா? கவிமணி கூறுகின்றார் கேளுங்கள்.

உழுது பயிர் செய்வோன்—வயிற்றுக்
குணவு பற்றாமல்
அழுதழுது நிதம்—நிற்ப
தறியீரோ ஐயா!"

உலகத்தைப் பார்த்து கவிமணி கேட்கும் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் கூறமுடியும்? உழைப்பவன் ஏன் அழுகிறான்? சோம்பேறி ஏன் இன்பமாக வாழ்கிறான்? உழைப்பாலன்றி வாழமுடியாது. எனவே வாழநினைக்கும் சோம்பேறி

உழைப்பவன் உணவைத் தட்டிப்பறிக்கிறான். உழைத்தவன் உணவின்றித் தவிக்கிறான். இது தான் உலக நியதியா? என்று அவர் கேட்கிறார். தட்டிப் பறித்த உணவைஉண்டுகளிக்கிறதா அந்த இனம்? அதுகூட இல்லை. அதைச் சேர்த்துச் சேர்த்துக் குவித்து வைக்கிறது. அதை நினைக்கும்போது தான் கவிமணிக்குப் பொறுக்கமுடியாத ஆவேசம் வருகிறது. அந்த ஆவேசத்தில் அவரிடும் கூப்பாட்டைக் கேளுங்கள்.

கோடி கோடியாக—நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம்மக்கள்—உண்ணு
வயிற்றுச் சோறலவோ?''

எவ்வளவு நேரடியான கேள்வி! எவ்வளவு கம்பீரமான கேள்வி! பாட்டா பாடுகிறார் கவி. இல்லை. நூற்றுக்கணக்கான வருடங்களாக தொழிலாளிமக்களுக்கு இழைத்து வரும் அநீதியின் கொடூரத்தைத் திரட்டி எடுத்து, ஆவேசக் கனலிலே தோய்த்து தர்மதேவதையின் முன் விட்டெறியும் உணர்ச்சிப் பொதியல்கள் அவை. நீதியின் முன் வழக்குரைக்கும் போது, பொங்கி எழுந்த அந்த ஆவேச வேகத்திலும்கூட ஏழைத்தொழிலாளிகளை **''வாடும் எம்மக்கள்''** என்று வாயாரக் கூறி அவர்களை கவி ஆரத்தழுவிக்கொள்ளும் காட்சி அற்புதமாக அந்தப் பாடலிலே அமைந்து விளங்குகிறதல்லவா? கவி அங்கு தன்னைக் காட்டிக்கொள்ளுகிறார்.

இத்தகைய உணர்ச்சி வேகம் எழுந்தபோது தான், ''தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று கவிபாரதியார் போருக்கு எழும்பினார்; அந்தப்போர் தமிழகத்திலே பரவாதிருக்கவேண்டுமானால் கவிமணி கூறும் பரிகாரம் உடனடி அமுலுக்கு வரவேண்டும்.

''வாழவேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்கலாகா தையா''

உலகத்துத் தொழில் அனைத்தும் நாம் உவந்து செய்யவேண்

டும். தொழிலிலே தனிப்பட்டவர் ஆதிக்கம் ஒழிந்து தொழிலைப் பொதுமையில் நடத்த வேண்டும். தொழிலின் பலன் பொதுமையாக இருக்கவேண்டும். எல்லோரும் சக்திக்கு ஏற்றவாறு உழைக்கவேண்டும்; தேவைக்குத் தகுந்து அனுபவிக்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் உலகத்தில் ஏழை இருக்க மாட்டான். வாழ்க்கை செம்மையாக நடக்கும். இந்த நிலை ஏற்பட்டால் நம்மில் போருக்கு அவசியமில்லை. உலகம் இதை உணருமா?

IX

கவிமணியின் நகைச்சுவை.

பாலுக்குச் சீனியைப் போலும், பசுந்தமிழ்ப் பாடலுக்கு இன்னிசையைப் போலும் கருத்துக்கு ஹாஸ்யம். லட்சியப் பாதையிலே யாத்திரைபோகும் மனிதனுக்கு இன்பத்தைச் சேகரித்துக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கும் கவிஞன், தனது சிந்தனைச் சோலையிலே உதிர்ந்த கருத்துக்களை ஹாஸ்யச் சுவையிலே குழைத்து அந்த மனிதனுக்குக் கொடுத்துவிட்டால் அவன் இன்பப் பரவசமடைந்து சிரித்துக் கொண்டே தன் யாத்திரையைப் பூர்த்திசெய்துவிடுவான். லட்சியப் பைத்தியங்கள் காற்றிலேறி விண்ணைத் தாண்ட ஹாஸ்யத்திலே பொதிந்த, கவிஞன் கருத்துக்களை உதவிக்கு அழைக்கின்றன. ஆகவே, மனித வாழ்வை வளப்படுத்தும் இலக்கிய சிருஷ்டிகளில் நகைச்சுவை இன்றியமையாத அம்சம் என மதிக்கப்படுகிறது. எந்த நாட்டு இலக்கியத்திலே கருத்து ஹாஸ்யத்துடன் உறவு கொள்ளுகிறதோ அந்த நாட்டு மக்களின் மனப்பண்புகள் அதிவிரைவிலே வளர்ச்சியடைந்து விடுகின்றன.

தமிழ்நாட்டு இலக்கியங்களிலே நகைச்சுவைக்குப் போதிய இடம் அளிக்கப்படவில்லை என்று சில இடங்களில் வாதிக்கப்படுகிறது. அந்த வாதம் எவ்வளவு தூரம் உண்மை என்பதைப்பற்றி இப்பொழுது பேசவில்லை. ஆனால், இன்று நம்மிடையே ஜீவித் கவிஞராய் விளங்கி, தமிழகத்துக்குப் புதிய வாழ்வைக் கூவிக்கொண்டிருக்கும் 'புத்தேரிக் குயில்' தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் தமது இலக்கிய சிருஷ்டிகளிலே உயர்ந்த கருத்துக்களை, அற்புதமான நகைச் சுவையிலே பொதிந்து வைத்து, நம்மவரின் பண்புகளுக்கு உரம் ஏற்றி வருகிறார் என்பது உண்மை.

பஞ்சமும் நோயும் உயிரை உறிஞ்ச, உள்ளம் வறண்டு கிடக்கும் தமிழனை, நிமிஷத்திலேயே சிரிக்கச் செய்து சிரிக்கும் அந்த உள்ளத்திலே உன்னத கருத்துக்களைப் பதிய வைத்து, அதன் மூலம் தமிழனுக்கு வாழும் வகையை வகுத்துக் காட்டுவதிலே கவிமணி அடைந்திருக்கும் வெற்றி சாமான்யமன்று.

கருத்துக்களை விளக்க கவிமணி கையாடும் ஹாஸ்யச் சுவையின் மேன்மையையும், அதிலே அவர் பெற்ற வெற்றியையும் "நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியத்திலே" தெள்ளத் தெளியக் காணலாம். நாஞ்சில்நாட்டு வேளாண்குடி மக்களிடையே இருந்த 'மருமக்கள் தாய' முறை காரணமாக அந்தச் சமூகத்திலே படிந்திருந்த கறைகளுக்கு அளவேது! குடும்பத்தின் பொதுச் சொத்துக்கு தர்மகர்த்தாவாகக் கருதப் படும் காரணவர்கள் பலதார மணங்களைச் செய்து பணங்களை எல்லாம் துர்விநியோகம் செய்துவந்தனர். அத்தகைய ஒரு காரணவனிடம் சொத்துக்கு உரியவனான மருமகன் போய்,

ஆரைக் கேட்டுநீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர் ஐயா?
பட்டப் பெயரும் பஞ்ச கல்யாணிப்
பிள்ளை யென்றுநீர் பெற்றுவிட்டீரே?

என்று ஏளனமும் எரிச்சலும் கலந்து கேட்கிறான். மான்மியத்தில் இந்த வரிகளை நாம் படிக்கும் போது, நம்மால் சிரிக்காமல் இருக்கமுடிகிறதா? அப்படிச் சிரிக்கும்போதே பலதார மணத்தின் இழிவும் நம் மனதில் அற்புதமாகத்தானே பதிகிறது. இவ்விதம் அந்த வேளாண் சமூகத்திலே அன்றிருந்த ஒவ்வொரு ஊழல்களையும நகைச்சுவையுடன் எடுத்துக் கூறிவிட்டு

ஆடு மாடுகளுக் காகும் இவ்வழி
மனிதர் நடக்கும் வழி இதாகுமோ?

என்று கேட்டுச் சிரித்துவிடுகிறார். அதைக்கேட்டு நாமும் சிரிக்கிறோம், வேளாண் சமூகமும் சிரித்தது. அந்தச் சிரிப்பின் வேகத்திலே நாஞ்சில்நாட்டில் மருமக்கள் தாய முறை இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. வால்டயரின்

அனல் கக்கும் எழுத்துக்கள் அன்று, பிரான்சிலே இரத்தப் புரட்சியைத் தோற்றுவித்தன; பிரான்சிலே இருந்த அநீதிக ளெல்லாம் கதறிக்கொண்டே மறைந்தொழிந்தன; இன்று கவி மணியின் ஹாஸ்யச் சொற்கள் நாஞ்சில்நாட்டிலே அன்புப் புரட்சியைத் தோற்றுவித்தன; நாஞ்சில் நாட்டிலே இருந்த அநீதிகளெல்லாம் சிரித்துக்கொண்டே மறைந்தன.

மருமக்கள்வழி மான்மியம், தமிழினத்தில் ஒரு தனிப் பட்ட பிரிவினரைப்பற்றியது; எனவே அதை விடுவோம். நாட்டுக்கே பொதுவான உண்மைகளை எடுத்துக் கூறும்போது கவிமணி நகைச் சுவையை அற்புதமாகவே கையாடுகிறார்.

தமிழன் என்றொரு இனமுண்டு; தனியாய் அதற்கொரு குணமுண்டு' என்று பாடினார் நாமக்கல் கவிஞர். உண்மை தான். ஆனால் தமிழன் இன்று ஒரே இனமாக மதிக்கப்படு கிறானா? வேதம் ஓதும் வேதியன் உயர்ந்தவன். வேலை செய் யும் வேறு குலத்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணத்திற்கு ஆக்கம் தருவதற்காக 'வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை' என்று யாரோ ஒரு கெட்டிக்காரன் புளுகி வைத்தான். அந் தக் கெட்டிக்காரனின் புளுகை அம்பலத்தில் கொண்டுவந்து அலசி, அதை சந்தி சிரிக்கச் செய்து, ஒற்றுமையின் உயர் வைக் கவிமணி போதிக்கும் முறையே எவ்வளவு அற்புதமாக இருக்கிறது.

வேதியராலே மழை வருமேல்—வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ?
வாதமெல்லாம் கட்டி வைத்திடுவோம்—ஒத்து
வாழ்வை மேற்கொண்டு உழைத்திடுவோம்.

இந்தப் பாட்டைக் கேட்டு நாம் சிரிக்கும் சிரிப்பிலே ஜாதி இறுமாப்பு தலை குனிந்து ஓடவேண்டும்.

இது மட்டுமா? 'பாரத நாடு பழம் பெரு நாடே' என்று பெருமிதத்துடன் கூறி நிமிரும்போது, நம்மை நிலைகுலையச் செய்யும் தீண்டாமைப் பேயை கவிமணி என்ன பாடுபடுத்து கிறார் என்பதைப் பாருங்கள்.

(தீண்டாமை)

மண்கலத் துள்ளே யிருக்கும்—அதில்
வைத்த பண்டத்தில் மறைந்து மிருக்கும்
வெண்கலம் வெள்ளிப் பொன் கண்டால்—உடன்
வெட்கம் அடைந்து வெளியேறிப் போகும்

என்று கவிமணி பாடுகிறார். அந்தப் பாட்டிலே மிதக்கும் ஹாஸ்யச் சுவையில் பொதிந்திருக்கும் கருத்துக்களைப்பாருங்கள். தீண்டாமைக்கு அடிப்படை சுயநலம் என்பது தெளிவாகத் தெரியும். உளுத்துப்போகும் கருத்தின் மேல் அமைந்த தீண்டாமைப் பேயைப் போஷித்த மேல் வகுப்பினரின் தீண்டாமையைக் கவிமணி இப்படி எள்ளிநகையாடிய பின்

சண்டிக் குதிரை மேலே
நொண்டித் துரை சவாரி
கொண்டது போலும் வாழ்வு
கண்டது போது மையா,

என்று கதறுவது நம் காதில் விழுந்து நமக்குச் சிரிப்பைத் தான் உண்டுபண்ணுகிறது.

தற்கால சுகத்தைக் கருதி எதிர்காலத்தில் இடறி விழுபவர்கள் பலர். அந்தக் கூட்டத்தில் சுதேசியத்தைப் பழிப்பவர்கள் முதன்மையானவர். அப்படிப்பட்டவர்களுக்கு சமயமறிந்து சுதேசியத்தின் மேன்மையை இடித்துக் கூறுமிடத்தில் கவிமணியின் ஹாஸ்யச்சுவை அற்புதமாக அமைந்துவிடுகிறது. கவிமணியின் கதர்ப் பாட்டிலே அதைக் காணலாம். தான் குறுக்கு முறிய நெய்த கதராடையை ஆதரிக்கும்படி அந்த ஏழைக் கைம்பெண் மன்றாடினாள்; எவ்வளவோ நியாயங்களை எடுத்துக் கூறினாள். 'நல்ல சரக்கு சீமைச் சரக்கு என்று கூறி அந்த நாட்டுச் சரக்கைப் பழித்து விட்டார் நாகரீகப் பிரபு. பொறுத்திருந்தார் கவி; காலம் மாறிற்று. நாட்டிலே போர் மூண்டது. நாகரீகப் பிரபுவுக்கு மானங் காக்க துணி கிடைக்கவில்லை. அந்தச் சமயம் பார்த்து கவிமணி,

சினத்துப் பட்டெங்கே? நல்ல
சீமைத் துணிகளெங்கே?
மானத்தைக் காக்க முன்னால் எந்த
மல்பீசைக் கண்டோ மையா!

என்று ஏளனமாகக் கேட்டு விடுகிருர். அதைக் கேட்டு கதர்ப் பக்தர்களுக்கெல்லாம் சிரிப்புத் தாங்க முடியவில்லை! மற்றவர் கள் தலை குனியத்தானே வேண்டும்?

சுதேசியத்தை விட்டு விடுவோம். ஆத்மீகத்துறையிலே படிந்திருக்கும் மாசுகளை அகற்றுவதிலும் கூட கவிமணி நகைச் சுவையை மறந்துவிடவில்லை. மனிதனைச் சிரிக்கச் செய்வதின் மூலம் உண்மைகளை எவ்வளவு இலகுவாக பரவச் செய்யலாம் என்பதற்கு கவிமணியின் பாடல்கள் நல்ல உதா கரணங்களாகும். ஆத்மீகம் என்று கூறிக்கொண்டு வெறும் மதச் சடங்குகளை மட்டும் கட்டியழும் ஆஷாடபூதிகளைக்கவி மணி கிண்டல் செய்கிருர் பாருங்கள்.

நித்தம் நித்தம் நீராடில்
நெடுமால் அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும் அத்
தனிப் பேறடைய வேண்டாமோ?

வெறும் சடங்குகளால் மோக்ஷம் கிடைத்துவிடுமானுல் தவளைகளுக்கும் மீன்களுக்கும் தான் முதலில் அதுகிடைக்க வேண்டுமென்று கவி கூறினுல் சிரிக்காமல் தான் இருக்க முடியுமா? அல்லது உண்மை மார்க்கத்தை உணர முயற்சிக்காமல் தான் இருக்கமுடியுமா?

கவிதைகளைப் போலவே பேச்சிலும் நகைச்சுவை சொட்டச் சொட்டப் பேசுவதில் கவிமணிக்கு இணை யாரு மில்லை.

"கதிர் விழுங்கி மதியுமிழ்ந்து வரு மருண்மாலை" என்ற சிலப்பதிகார அடிகளைக் கூறி "மாலைப் பொழுது கதிரை விழுங்கவுமில்லை, மதியை உமிழவுமில்லை; எனவே கவி இல்லாததைக் கூறினுர். கவிதை பொய்" என்ற விளக்கந் தந்த அறிஞருக்கு மறுமொழியாக கவிமணி, "கதிர்மறைவது மெய், மதி வருவது மெய் எனவே கவி பொய் சொல்லவில்லை என்று கூறி விட்டு "கடல் குடித்து மலை விழுங்கிவரு மருண் மாலை" என்று கவிஞன் பாடியிருந்தால் அது பொய்யாகு

மென்று பேசி முடித்ததும், சபையிலே எழுந்த சிரிப்புக்கு அளவில்லை. அந்தச் சிரிப்பு அடங்குமுன்பே, கவிமணி

உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந் துரைப்பது கவிதை.

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தார். கவிமணி இந்தப் பாடலை அப்பொழுதுதான்வெளிப்படுத்தினர்.

தனது பேச்சிலும், பாட்டிலும் நகைச் சுவையை அள்ளிக் கொட்டி நம்மை வாழ்விக்கும் கவிஞர் தமிழ் நாட்டின் குரு தேவர். அவர் வாழ்க!

X

தே. வி. யின் உமர்க்கய்யாம்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரமெல்லாம் தமிழ் மொழியில் பெயர்த்திடல் வேண்டுமென்பது பாரதியார்க்கட்டளை. அந்தக் கட்டளையின் உள்ளக் கிடக்கையைப் பூரணமாக அறிந்து கடனாற்றி வருகிறார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. பாரசீகத்திலே, சிறந்த வானசாஸ்திரியாகவும் தத்துவ ஞானப் புலவராகவும் விளங்கிய உமர்க்கய்யாமின் "ரூபயாத்" என்ற அருமையான நூல், தே. வி. யின் அருளால் இன்று தமிழருக்குக் கிடைத்து வருகிறது. தே. வி. யின் உமர்க்கய்யாம் தமிழிலக்கியத்தில் புதிய மணம் வீசுகிறது. தமிழகத்தின் இலக்கிய மறுமலர்ச்சியில், உமர்க்கய்யாம் மொழி பெயர்ப்பு ஒரு உன்னதமான சிருஷ்டி. வருங்கால கவிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் அது ஒரு வழிகாட்டி.

ரூபாயத், பாரசிகப் பாஷையிலிருந்து, பிட்ஜிரால்டு என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, பிட்ஜிரால்டின் உமர்க்கய்யாம் என்று புகழப்படுகிறது. ஆங்கில இலக்கியத்திலே அதற்கு ஒரு சிறந்த ஸ்தானமுண்டு. இந்த ஆங்கில மொழி பெயர்ப்பைத் தழுவி கவிமணி அதை தமிழில் ஆக்கி இருக்கிறார். இந்த தமிழ் ரூபயாத்தை நாம் "தே. வி. யின் உமர்க்கய்யாம்" என்று அழைப்போம்.

தே. வி. யின் உமர்க்கய்யா மொழி பெயர்ப்பு அல்லது தழுவல் என்று கூறுவதைவிட தனிநூல் என்று கூறுவதுதான் பொருந்தும். பாரசிகத்தில் 'ரூபயாத்' முதல் நூலாக இருப்பது எவ்வளவு தூரம் உண்மையோ அவ்வளவு தூரம் உண்மை தமிழில், தே. வி. யின் உமர்க்கய்யாம் தனி நூலாக இருப்பது. இந்தத் தமிழ் பாடல்களில் வரும் கருத்துக்களுக்கு பிட்ஜிரால்டின் 'ரூபயாத்' ஆதாரம் என்பது வாஸ்தவம் தான்; ஆனால், அந்தக் கருத்துக்களை வைத்துக்

கொண்டு கவிமணி சிருஷ்டித்திருக்கும் கவிதைகள், அதன் நயங்கள் அதன் போக்கு எல்லாம் இந்தத் தமிழ்க் கவியின் சொந்த சிருஷ்டி; தமிழர்களுக்கே உரியது. ஆரிய மொழியி லிருந்த ராமகாதையை தமிழில் ஆக்கிய கம்பன், அந்தக் கதை யின் கட்டுக்கோப்பை மட்டும் எடுத்துக்கொண்டு, தமிழ் பண் பாட்டுக்கும், தனது மேதைக்கும் ஒத்ததான காவியத்தை சிருஷ்டி செய்து, எப்படி ராமாயணத்தை தமிழிலே தனி நூலாகச் செய்தானே அப்படியே கவிமணியும் உமர்க்கய்யா மைச் செய்து முடித்திருக்கிறார். ஆனால், கம்பனைப் போல், கவிமணி கதையை எடுத்துக்கொள்ளவில்லை; தத்துவங்களை எடுத்துக் கொண்டார்.

கதையைத் தழுவி எழுதுவது தத்துவ நூல்களைத் தழுவி எழுதுவதுபோல் அவ்வளவு கடினமல்ல. கதையை தழுவி எழுதக் கூடியவர்கள் தம் கற்பனசக்தியை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பறக்கவிடலாம்; ஆனால் தத்துவ நூல்களைத் தழுவி எழுதும்போது கற்பனையை மனம்போன போக்கில் விட்டால் நூல் குப்பைக்கூழமானாலும் ஆகிவிடும் ஆகவே அவர்கள் பலக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே தமது மொழிபெயர்ப்பைச் செய்யவேண்டும்.

மூல நூலின் கருத்துக்களை பாதிக்காத முறையில் தமிழ் பண்பாட்டுக்கும், தனதுமேதைக்கும் ஒத்ததாக உமர்க் கய்யாம் பாடல்களை தமிழிலே சமைப்பதில் கவிமணி மிகத் திறமையான முறைகளைக் கையாண்டு வெற்றிபெற்றிருக் கிறார்.

The Moving Finger writes; and having writ,
Moves on: nor all your Piety and wit
Shall lure it back to cancel half a line,
Nor all your Tears wash out a word of it.

என்பது பிட்ஜிரால்டின் உமர்க்கய்யாமில் ஒரு பாட்டு. இந்தப் பாட்டிலே உள்ள கருத்துக்களை கவிமணி தமிழிலே தருவ தைப் பாருங்கள்.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீரா றெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ

இந்தப் பாடலிலே, மேலே இருக்கும் ஆங்கிலப் பாடலின் கருத்துக்கள் அப்படியே வெளியாகின்றன; ஆனால் அதேசமயத்தில், கவி தன்னையும் வெளிக்காட்டுகிறாரல்லவா? ஆங்கில பாடலுக்கு வார்த்தைக்கு வார்த்தை தமிழிலே மொழி பெயர்த்திருந்தால் அதில் இந்தத் தமிழ் பாட்டிலிருக்கும் நயமும் வேலைப்பாடுகளும் அமைந்திருக்க முடியாது. எல்லா மொழிகளுக்கும் ஒரே விதமான தன்மையும் செழுமையும் இருக்குமானால் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பது கஷ்டமாக இராது, ஆனால் மொழிகளுக்கு தன்மைகள் வேறு வேறாக இருக்கின்றன. ஆகவே கவி அந்த ஆங்கில மொழியில் அதிகம் கவனம் செலுத்தாமல், பாட்டின் பொருளிலேயும் அதன் ரசத்திலேயும் ஈடுபட்டு அந்தபொருளையும் ரசத்தையும் எந்த முறையில் தனது மக்களுக்கு கொடுக்க வேண்டுமோ அந்த முறையில் அளிக்கிறார்.

The moving finger writes; and having writ
Moves on:

என்ற வரிகளுக்கு "நகரும் விரல்கள் எழுதிக்கொண்டே இருக்கின்றன. எழுதியபிறகு பின்னும் நகர்ந்துகொண்டே இருக்கின்றன" என்று மொழி பெயர்த்திருந்தால் அதிலே பொருள் தெளிவோ அல்லது இலக்கிய சுவையோ இருக்க முடியுமா? இந்த வார்த்தைகளிலே மிளிரும் கருத்தை

எழுதிச்செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்

என்ற வரிகளால் கவிமணி அமைத்திடும் பொழுது அதில் பொருளின் தெளிவையும் நமது பண்பாட்டுக்கு ஒத்த ஒரு இலக்கியச் சுவையும் நாம் அனுபவித்து மகிழ்கிறோமல்

லவா? இதற்காகத்தான் ஒரு கவியின் நூலை இனியொரு கவி தான் மொழி பெயர்க்க முடியும் என்று கூறப்படுகிறது.

ஆங்கில மொழியை தமிழ் மொழியாக்குவது கவியின் வேலையல்ல. கவிதையை கவிதையாக மொழி பெயர்ப்பதே கவியின் வேலை. ஒரு மொழியின் கவிதையை இனியொரு மொழியில், வார்க்கும்போது மூலத்திலுள்ள காவியச் சுவையும் கருத்தின் ஆழமும் மறைந்து, வார்த்தைகள் மட்டுமே மிஞ்சி நிற்கும். ஆகவே மொழிபெயர்ப்பில் ஈடுபடும் கவி, தான் மொழிபெயர்க்கும் கவிதைக்கு புதிய ரூபமும் ஜீவனும் கொடுத்தாகவேண்டும். அப்பொழுது தான் முதல் நூலின் கருத்தின் ஆழமும் காவியச் சுவையும் மொழிபெயர்ப்பில் கிடைக்கும் என்பது அனுபவசாலிகள் கண்ட உண்மை. கவிமணி இந்த உண்மையை தனது உமர்க்கய்யாமில் நிரூபித்துக் காட்டி இருக்கிறார். இதிலே தனக்கு வெற்றி கிடைப்பதற்காக முதல் நூலின் அடிப்படையான கருத்துக்கு பாதகம் விளைவிக்காத முறையில், அதிலே சில திருத்தங்களும் மாற்றங்களும் செய்யும் உரிமையும் அவர் எடுத்திருக்கிறார்.

Think, in this batter'd caravan serai
Whose door ways are alternate Night and day,
How Sultan after Sultan with his pomp
Abode his hour or two, and went his way,

என்ற பாட்டை கவிமணி

"வையம் பழைய அரண்மனையாம்
வாயில் இரவு பகலேயாம்
மெய்யின் இங்குக் கொலுவிருந்து
விதித்த காலம் அரசாண்டு
செய்ய மணி[illegible] முடி வீழச்
சென்றமன்னர் எண்ணிலரால்
ஐய, இதனை உள்ளத்தில்
ஆழ்ந்து காணல் அறிவாமே"

என்று தமிழில் பாடி இருக்கிறார். இந்தப் பாட்டு மேலே உள்ள ஆங்கிலப் பாடலின் மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் என்று கூறுவதைவிட, அந்தப் பாடலின் விரிவுரை என்று

தான் கூறவேண்டும். "ஒவ்வொரு சுல்தான்களாக ஒன்றி ரண்டு மணிநேரம் வரை தனது செல்வங்களுடன் இருந்து விட்டு, தம் வழியேச் சென்று விட்டார்கள்." என்ற கருத்து டைய கடைசி இரண்டு அடிகளுக்கும்

மெய்யின் இங்கு கொலுவிருந்து
விதித்தகாலம் அரசாண்டு
செய்ய மணிமா முடி வீழச்
சென்ற மன்னர் எண்ணிலரால்

என்று கவி விரிவுரைக் கூறுகிறார்.

"செய்யமணி மாமுடி வீழ" என்ற சொற்றொடருக்கு ஆங்கிலப் பாட்டில் இடமில்லை. கவிமணி தனது தமிழ்ப் பாட்டிலே அதைப்புகுத்துகிறார்.

"எண்ணிப்பார்" என்ற பொருளைத் தரும் "Think" என்னும் வார்த்தைக்கு

ஐயா இதனை உள்ளத்தில்
ஆழ்ந்து காணல் அறிவாமே.

என்றும் விரித்துக் கூறி புதியகருத்தை நுழைக்கிறார். ஆனல் கவிமணி தமது பாடலிலே புகுத்தியிருக்கும் இந்தப் புதிய கருத்துக்கள் பாடலின் முக்கியமான கருத்துக்கு துணையாக அமைந்து அந்த கருத்தை முதல் நூலைவிட ஆழமாக நமது உள்ளத்தில் பதித்து விடுகிறது. எனவே அழகுக்கு அழகு செய்யும் நோக்கத்துடன் கவி எடுத்துக்கொண்ட இந்த உரி மையைப் பறித்துவிட யாருக்குமே அதிகாரமில்லை.

இன்னும் பிட்ஜிரால்டின் உமர்க்கய்யாமில்

A Book of verses under neath the Bough

என்ற கருத்துக்கு,

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு

என்றும்

And those who husbanded the Golden grain
And those who flung it to the winds like rain

என்ற அடிகளுக்கு

"பாரிபோல கொடுத்தவரும்
பணத்தை புதைத்து வைத்தவரும்
என்றும் கவிமணி வியாக்கியானம் செய்கிறார்.

"கவிதை நூல்" என்பதற்கு தமிழர்கள் பன்னெடுங்கால காலமா கரசித்து ரசித்து மகிழ்ந்துவரும் கம்பன் கவிதையை யும் "பணத்தை மழையைப்போல் இறைத்தவர்கள்" என்ற கருத்துக்கு தமிழன் மனதிலே மங்காது நின்று உலாவிவரும் கடை எழு வள்ளல்களில் ஒருவராகிய பாரியையும் உவமை காட்டி, ஆங்கிலப் பதங்களின் கருத்தை தமது பாடல்களில் அழகுற அமைக்கும் முறை ரசிகர் உள்ளத்தை அதிகம் கவர் கின்றது. இந்த உவமைகளை காட்டுவதின் மூலம் நம் தமிழ் நாட்டுக் கவி, ஆங்கிலப் புலவர் பிட்ஜிரால்டுக்கும் பாரசீகக் கவி உமர்க்கய்யாமுக்கும் பெரும் மதிப்புக் கொடுக்கிறார். இந்த உவமைகளின் மூலம் உமர்க்கய்யாமின் தத்துவத்துக்கு தானே பெருமை ஏறுகின்றது.

கவிமணியவர்கள் தமது உமர்க்கய்யாமின் மூலம் தமி ழகத்துக்கு பெரும் பணி செய்திருக்கிறார். அவரின் உமர்க் கய்யாம் பொருட்சுவையும் சொற்சுவையும் செறிந்த அழகிய நூல். அன்னிய மொழியிலிருந்த கருத்துக்களுக்கு மெருகு கொடுத்து, தமிழ் இலக்கியச் சுவையிலே கலந்து நமக்கு விருந்தளிக்கும் கவிமணி நீடூழி வாழ்க!

PART II

CHAPTER I

காந்தளூர்ச்சாலை

கவிமணி
சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

மொழி பெயர்ப்பு.

N. A. NOOR MAHAMED M. A; B. L.
M. K. BAWA.

ABBREVIATIONS.

K. S. Papers.	*Kerala Society Papers*, Trivandrum
S. I. I.	*South Indian Inscriptions*,
T. A. S.	*Travancore Archæological Series.*
The Colas.	*The Colas*, By K. A. Nilakanda Sastri, M. A., Professor of Indian History and Archæology, University of Madaras.
University of Nalanda.	*The University of Nalanda*, by Hasmukh D. Sankalia, M A., LL.B.

I

காந்தளூர்ச்சாலே.

ஆராய்ச்சி துறை ஜாரின் ஆதிக்கத்திற்கோ, சுல்த்தானின் ஆட்சிக்கோ உட்பட்ட சர்வாதிகாரப் பிரதேசமல்ல: அது ஒரு குடியாட்சி. அங்கே சாதாரண ஒரு நித்திய தொழிலாளியும்கூட தனது கடமையைச்செய்வதற்கும், தனது கருத்துக்களை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உணர்ச்சி அல்லது இதைப்போன்ற ஒரு உணர்ச்சிதான் கீழே காணும் சில வரிகளை எழுதுவதற்கு என் எழுதுகோலைத் தூண்டுகிறது.

தென்னிந்திய சிலாசாசனங்களை அறிந்திருப்பவர்களுக்கு, "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" என்ற சொற்றொடர் புதிதல்ல. முதலாவது ராஜ ராஜ சோழன் ஆட்சியின் எட்டாவது ஆண்டில் ஏற்பட்ட ஒரு கல்வெட்டில் இதைப்பற்றிய முதல் குறிப்பு காணப்படுகிறது*. இந்த அரசனின் பிந்திய கல்வெட்டுகள் ஒன்றில் "காந்தளூர்ச்சாலை கலமறுத்த ராஜ ராஜ தேவன்" என்று அவன் புகழப்படுகிறான். இந்த புகழ் மொழியின் தாத்பரியம் என்ன? அம்மன்னனுக்கு ஏன் இப்பட்டம் வழங்கப்பட்டது? இக்கேள்விகளுக்குரிய சரியான விடைகள் இன்னும் வெறும் ஹேஷ்யங்களாகத்தானிருக்கின்றன. இம்மாகாணத்திலுள்ள சிலாசாசன ஆராய்ச்சியாளர்களின் கையிலகப்பட்டு, குழப்பம்தரும் இச்சொற்றொடரின் வியாக்யானம், புரட்சிகரமாக இல்லாவிட்டாலும், வளர்ச்சிகரமான மாற்றத்தை அடைந்தேயிருக்கிறது. தென்னிந்திய சிலாசனத்துறையிலே இது ஒரு சிக்கலான பிரச்னையாகவே இருந்

---

*இந்தப்பட்டம், நாலாவது வருடத்திலிருந்து காணப்படினும், கேரளத்திலாவது பாண்டிய நாட்டிலாவது, ராஜ ராஜ சோழனின் எட்டாவது வருடத்திற்கு முந்திய கல்வெட்டுகள் எதுவும் காணப்படவில்லை.

"இதுவரை அறிந்திருப்பவைகளில் தெரிசனங்கோப்பு ஆதாரம்தான் (T. A. S. I., p. 238.) மிகவும் முந்தியது எனத் தெரிகிறது" (The Colas p. 200)

திருக்கிறது என்பதற்கு ஐயமில்லை. இச்சொற்றொடருக்கு, பலவேறு சந்தர்ப்பங்களில் பலவேறுவிதமான பொருள் கற்பிக்கப்பட்டிருப்பதினால், இது எவ்வளவு சிக்கலான சொற்டர் என்பதும், இதை வியாக்யானம் செய்ய முனைந்த ஆராய்ச்சியாளர்களின் மூளையை இது எவ்வளவுதூரம் குழப்பி இருக்கும் என்பதும் புலனாகும்.

டாக்டர் ஹல்ஷ் (Dr. Hultxsch) என்பவரே இப்பணியில் முதலில் முயன்றவர்.* அவரின் மூன்றுவிதமான வியாக்யானங்கள் கீழ்காணுமாறு.

(1) (அரசன்) காந்தளூரில் மாணிக்கம்போன்ற மாடம் அமைத்தான்.

(2) (அரசன்) காந்தளூரில் ஒரு மரக்கலத்தை அறுத்தான்

(3) (அரசன்) காந்தளூர் துறைமுகத்தில் கப்பல்களை அழித்தான்.

முற்கூறியவற்றில் ஒன்றேனும் பொருத்தமான பொருள் அல்ல என்பது எளிதில் விளங்கும். முதல் இரண்டு வியாக்யானங்களும் ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லையாகையால், ஆலோசனைக்கு எடுக்கவே அவைகள் தகுதியற்றவை என்று தள்ளிவிடலாம். ஆனால் மூன்றாவது வியாக்யானத்தை அவ்வளவு சுலபமாகத்தள்ளிவிட முடியாது.

இந்த ஒரு வியாக்யானமும்தான் இன்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைத்துருவி பரிசிலனைச் செய்ய அவசியமேற்படுகிறது. விவாதத்திலிருக்கும் சொற்றொடருக்கு இதுவே சரியான மொழிபெயர்ப்பு என்று இந்த டாக்டரே தனது குறிப்புரையில் எழுதுகிறார். "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" என்ற சொற்றொடரில் நான்கு.

*(1) S.I.I., I. p.65.
(2) Ibid., II. Part I. pp.35, 47, 72; Part II. pp.123, 128.
(3) Ibid., pp. 241, 250.

பதங்கள் இருக்கின்றன. (அறுத்தருளி என்பதை அறுத்து—அருளி என்று இரண்டு பதங்களாகக் கொண்டால் மொத்தம் ஐந்து பதங்களாகின்றன) காந்தளூர் * என்பது சந்தேகமில்லாமல் ஒரு கிராமத்தின் பேர்தான். இந்த இடம் எங்கே இருந்தது? இப்பொழுது நமக்குத் தெரியும் இடங்களில் எதற்காவது இந்தபேர் இருந்திருக்க முடியுமா? "சாலை" என்ற சொல்லின் தாத்பரியம் என்ன? இது துறைமுகத்தைக் குறிக்கிறதா அல்லது, அன்னசாலையைக் குறிப்பிடுகிறதா? கலம், அறுத்தருளி என்ற வார்த்தைகளின் பொருள் என்ன? விவாதத்திலிருக்கும் சொற்றொடருக்கு திருப்திகரமான வியாக்யானம் செய்வதற்குமுன் இக்கேள்விகளை நுணுக்கமாகப் பரிசிலனை செய்யவேண்டும்.

இந்தக்கேள்விகளை ஒவ்வொன்றாகப் பரிசிலனை செய்வோம். "காந்தளூர்" என்பது எந்த இடத்தின் பெயர் என்பதை முதலில் தெளிவாக்கவேண்டும். **ராஜராஜன்** என்றழைக்கப்படும் ராஜகேசரிவர்மனின் காவிய தஸ்தாவேஜ் ஒன்றில் காணப்படும், "சேரலன் வேலைக்கெழு காந்தளூர்ச்சாலை கலமறுத்ருளி" என்றவரியால், இது (காந்தளூர்) சேரநாட்டில் கடற்கரைக்கு அடுத்த இடம் என்பது தெளிவாகிறது. காந்தளூர் என்பது மலைநாட்டிலிருந்த ஒரு இடம் என்று டாக்டர் ஹல்ஷ் அபிப்பிராயப்படுகிறார். இந்த இடம் நெய்யாற்றின் கரை தாலூக்கில் இருந்ததாக திரு. K. V. சுப்ரமணிய அய்யர் குறிப்பிடுகிறார். இந்த தாலூக்கில் குளத்தூர் பகுதியில், "காந்தளூர்ச்சாலை மகாதேவர் கோயில்" ஒன்றிருப்பதாக திருவிதாங்கூர் தேவஸ்தான நூல் தெரிவிக்கும் உண்மையை அவரின் அபிப்பிராயத்துக்கு அனுசரணையாகக்கொள்ளலாம். இப்பொழுது **வலியசாலை** என்றழைக்கப்படும், திருவனந்தபுரத்தின் ஒரு பகுதிதான் காந்தளூர் என்று, திரு. கோபிநாதராவ் கருதுகிறார். தனது கருத்துக்கு ஆதாரமாக அவர், பிரசுரிக்கப்

---

* "சாலை" என்பது இடத்தின் பேரோடு சேர்ந்தது என்று கொள்ளமுடியாது. காந்தளூர் என்பதின் இறுதியாகிய "ஊர்" என்பது, அந்த இடம் மனிதர்கள் வசித்திருந்த இடம் என்பதைத் தெரிவிக்கப் போதுமானது. இதற்குமேல், ஒரு இடத்தைக் குறிக்கும் அடைமொழியாகிய "சாலை" என்ற சொல் அனுவசியம் என்று தோன்றுகிறது. (Contra: The Colas p. 200 Foot-note)

பட்டதும், பிரசுரிக்கப்படாததுமான கோயில் தஸ்தாவேஜி களிலிருந்தும், சிலாசாசனங்களிலிருந்தும் மேற்கோள் காட்டு கிறார். சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட திருவிதாங்கூர் ரெவினியூ மானுவலில் (Travancore Revenue Mannuel) நமக்கு கூடுதலான பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த புத்த கத்தின் ஐந்தாவது பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் ஆதாரங் கள் காந்தளூர்ச்சாலை மகாதேவர்கோயில் திருவனந்தபுரம் நகர எல்கைக்குள்தான் இருக்கிறதென்பதை தெளிவாகக் குறிப் பிடுகின்றன.

மேற்கூறிய இரண்டு இடங்களிலும் பூர்வீகமான காந்த ளூர்ச்சாலை எது? என்ற கேள்வி பிறக்கிறது. திருவனந்தபுரத் திலிருக்கும் வலியசாலை கிராமமா அல்லது நெய்யாற்றின் கரை தாலுகாவில் குளத்தூர் பகுதியிலிருக்கும் கிராமமா? "காந்தளூர்ச்சாலை மகாதேவர் கோயில் இருக்கும் இடமே காந்தளூர்ச்சாலை" என்று திரு. K. V. சுப்ரமணிய அய்யர் கருதியது தவறு என்பது வெளிப்படை. உண்மைக்கு புறம் பான விஷயம் இதைவிட வேறொன்றும் இருக்க முடியாது. தெய்வத்தின்பேரால் கிராமமோ, கிராமத்தின் பேரால் தெய் வமோ அழைக்கப்படுவதில்லை, ரோமுலசும் ரோமும் என்ற கதை இந்த விஷயத்தில் பொருந்தாது. தீரவிஜாரித்துப் பார்த்ததில், நெய்யாற்றின்கரை தாலூக்கிலுள்ள கிராமத்தின் பேர் குளத்தூர் என்றும், காந்தளூர்ச்சாலை அல்ல என்றும் தெரிகிறது. இந்த தாலூக்கின் கிராமப்படமும், இத்தகைய ஒரு இடத்தைக்குறித்துக் காட்டவில்லை. இங்கேயிருக்கும் கோயிலும்கூட இப்பொழுது அழிந்து கிடக்கிறது. இது ஒரு சிறிய தேவாலயம். தனது பண்டைப் பெருமைக்கும், மகாத் மியத்துக்கும் எடுத்துக்காட்டாக ஒரு அடையாளமேனும் இந்த கோயிலுக்கில்லை. இதன் வருடாந்தச்செலவு 36 பறை நெல்லும் 16 ரூபாயும்தான். காந்தளூர்ச்சாலை மகாதேவரின் பக்தர்களில் யாரோ ஒருவர், தனது வழிபாட்டிற்காக அல் லது வேறு யாதோ காரணத்திற்காக, தனது சொந்த வாச ஸ்தலத்தின் அருகாமையில் நிர்மாணித்துக்கொண்ட சிறிய கோயிலே இது என்பது என் அபிப்பிராயம். இதன் உண்மை களை வருங்கால ஆராய்ச்சிகள் ஒருக்கால் வெளியிடலாம். அழகியபாண்டியபுரத்திலிருக்கும், திருவேங்கடத்தப்பர்

திரத்திலிருக்கும் சிதம்பரேஸ்வரர், திருவனந்தபுரத்திலிருக்கும் காஞ்சிபுரமகாதேவர் போன்ற தேவாலயங்கள் மேலே சொன்ன என் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்வதற்குரிய உதாரணங்களாகும்.*

ஆனால் வலியசாலையிலுள்ள பெரிய சிவன்கோயில் விஷயம் வேறு. திருவாங்கூர் அரசாங்கத்தாரால் நிர்வகிக்கப்படும் பெரிய கோயில்களில் இதுவும் ஒன்று. இப்பொழுது இதன் வருடாந்தச்செலவு, ரூ. 7361 வரைப் போகிறது. இந்தக் கோயிலில் இருக்கும் ராஜேந்திரசோழன்,† ரவிவர்மா முதலியவர்களின் சிதைந்த சிலாசாசனங்கள் இக்கோயிலின் பண்டைப் பெருமைக்குச் சான்றுபகருகின்றன. **வலியசாலை** என்ற பேருங்கூட மிகவும் முக்கியம்வாய்ந்ததாகும். இந்த விஷயமாக விவாதத்தை ஆரம்பித்தால் மலபாரிலுள்ள புத்தமத ஸ்தாபனங்களின் சரித்திரங்களையும், அவைகளினால் ஏற்பட்ட பலாபலன்களையும்பற்றி விரிவான பரிசோதனை ஏற்படும். ஆதலால் அந்த முயற்சியில் இப்பொழுது நான் இறங்கவில்லை. மேலே நான் கூறியவற்றிலிருந்து, **வலிய சாலைதான் காந்தளூர்** என்று திரு. கோபிநாதராவ் கொண்ட முடிவு சரியானதென்றும், சந்தேகமின்றி அதை ஒப்புக்கொண்டுவிடவேண்டும் என்றும் தெளிவாகிறது.

"சாலை" என்ற பதத்தின் தாத்பரியம் என்ன என்பது அடுத்த பிரச்னை. டாக்டர் ஹல்ஷ், முதல் முதலில் அதை மாடம் என்று பொருள்கொண்டார். பின்னர் அதை விட்டுவிட்டு 'துறைமுகம் என்று கருதினார். இந்த இடம் கடலை அடுத்திருப்பதாகக் கூறப்படுவதாலும், 'கலம்' என்ற சொல் மரக்கலம் என்பதின் குறுகிய வார்த்தையாக இருக்கலாம் என்று கருதியதாலும் இந்த முடிவுக்கு அவர் வர நேர்ந்தது.

திரு. கோபிநாதராவ், இந்த வியாக்கியானத்தை நியாயமாக மறுத்து, பிராமணர்களுக்கு ஒழுங்காக உணவளிக்கும் ஊட்டுப்புரையே சாலையென்று கூறுகிறார். இந்தபொருளில்

---

*திரு. T. K. ஜோஸெப் அவர்களின் குறிப்புரை பார்க்க

†அனுபந்தம் I.

தான் அந்த வார்த்தை உபயோகிக்கப்படுகிறது என்பதற்கு, பண்டை இலக்கியங்களிலிருந்தும், சிலாசாசனங்களிலிருந்தும் ஏராளமான மேற்கோள்கள் காட்டப்படுகின்றன*. அக்கிர சாலை, அறச்சாலை என்ற சொற்றொடர்கள் இன்றும் வழக்கத்தில் உபயோகிக்கப்படுகின்றன. சாலை என்ற சொல் துறைமுகத்தைக் குறிப்பிடும் என்பதை இனிமேல்தான் நிரூபிக்க வேண்டும். இந்த கருத்தை இலக்கியங்கள் ஆதரிக்கவில்லை. வழக்கம் அதை மறுக்கிறது.

மூன்றாவதாக ஆலோசனைசெய்யவேண்டியது **"கலம்"** என்ற சொல். இதற்கும் டாக்டர் ஹல்ஷ் கூறும் கருத்து பொருத்தமானதல்ல. அவர் ஏதோ தடுமாறுகிறாரேதவிர சரியான முடிவிற்கு அவரால் வரமுடியவில்லை. முதலில் **'முத்து'** என்ற பொருளை பொருத்திப்பார்க்கிறார்; பிறகு அதை விட்டுவிட்டு **'பாத்திரம்'** என்று வியாக்கியானம் செய்கிறார். கடைசியில் அதையும் துறந்துவிட்டு **'மரக்கலம்'** என்ற பொருளைப் பிடித்துக்கொள்கிறார். ஆனால், இதில் ஒன்றாவது உண்மைக்கு ஒத்த பொருளல்ல.† ஆனால் திரு. கோபிநாதராவ் அவர்களோ அந்த வார்த்தைக்கு (1) உண்கலம். அதாவது உணவைவைத்து உண்ணும் பாத்திரம் அல்லது இலை என்றும், ஆகவே (2) சற்று விரிவான பொருளில் **'ஆசனம்'** என்றும் இரண்டு பொருள் கொள்கிறார். தனது கூற்றுக்கு ஆதாரமாக அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்களிலிருந்து (Vide T.A.S. II. p. 2 & 4 foot-note) அவரின் முதல் வியாக்கியானம் திருப்திகரமானது என்றும் பொருத்தமானது என்றும் தெளிவாகத் தெரிகிறது. அவரின் மரணத்துக்குப்பின்னால் பிரசுரமாகியிருக்கும் சிலாசனங்களிலிருந்து கீழே எடுத்துக்காட்டும் பகுதிகளால், அந்த வார்த்தைக்கு திரு. கோபிநாதராவ் கொண்டபொருள் சரியானதுதான் என்பதற்கு எத்தகைய சந்தேகமுமில்லை.

---

*அனுபந்தம் III.A.

†தமிழ் லெக்ஸிகன் ஆபீசைச்சேர்ந்த பண்டிட் ராகவையங்கார் அவர்கள் 'கலம்' என்பது கலாம் என்ற தமிழ் பதத்தின் அல்லது கலஹம் என்ற வடசொல்லின் சுருங்கிய வார்த்தை என்று அபிப்பிராயப்படுகிறார். ஆனால் தனது முடிவுக்கு ஆதாரமாக எந்த வழக்குச்சொல்லையும் அவர் காட்டவில்லை

I. S. I. I; IV. No. 1246, p. 432.

(1) "ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு [௪௰௩]........

(2) கதேவர் பொன்கொண்டருளி சிங்களப்பிடா(ர) ர்க்கு....வலிச....

(3) பரிசாவது இதுயுறையிலிதவர்வதாகவும் அந்தராய முட்பட்ட இறைதவிர்

(4) வதாகவும் மகேசுவரமடத்திலே **முப்பதுகல முண்பதாகவும்** தம்முனை

(5) டய திருக்கையாலே எழுத்திட்டுத் தந்தது இதுக்குப்பதினைய்ம்ப

(6) தப்பதனைய்ம்பலத்தால் பதினைஞ்சுகலமும் பத்துப சுவும்

(7) இரண்டு அடிமையும் பீத்தாரயவற்கம் நிற்ககடவி தாக. இத்தன்ம

(8) ம் அழிவுபண்ணுவான் தங்களம்மைக்குத்தானே மிணுளன், இத்த

(9) ன்மம் நடப்பித்தான் ஸ்ரீபாதமிரண்டும் சிங்களப் பிடாரனேன்த

(10) லமேலன"

இந்த கல்வெட்டில் 30 உணவு பாத்திரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனல் ஒவ்வொன்றும் 15 பலம் எடையுள்ள 15 பாத்திரங்களே வழங்கப்பட்டன. மான்யம் அளித்தவர், காலையில் ஒன்று, மாலையில் ஒன்று என இரண்டு நேர உணவுகள் ஏற்பாடுசெய்தார் என்பது வெளிப்படை.

II. "இவ்வரையன் விழுப்பேரையன்வைத்த **திருவக்கிரம்பத்துக்கலமும்** முட்டாதே உண்பதாக இப்பூமிவிற்றுக்குடுத்தோம்". T. A. S, IV. p. 119.

III. "ஆதன்துருத்திப்பிழாரிகோயிலுக்கு வடகிழக்கு கோதைசேந்நனுர்காடு நாற்றுக்கலம் **ஒருகலம் திருவக்கிரத்தினு.** ஸவகொச்சாகரியில் பந்திருகலமும் வட்டிகரியில் எழுபத்தைம்பறையுங் கூட **திருவக்கிரம் ஒரு கலம்**" T. A. S., II. p. 175.

எனவே ஊட்டுப்புரைகளில் பிராமணர்களுக்கு உணவ ளிக்கும் வழக்கத்தைச்சேர்ந்ததே கலம் என்ற சொல் என்பது தெளிவாகிறது*.

இனி, **அறுத்து, அருளி** என்ற இரண்டு சொற்களை யும் ஆராயவேண்டும், அறுத்து என்பதற்கு வெட்டி அல்லது அழித்து என்று டாக்டர் ஹல்ஷும், திரு. கோபிநாதராவும் பொருள் கூறுகிறார்கள். இதுமுழுத்தவறு. வரையறுத்து†, என்ற வார்த்தை அறுத்து என்று குறுகி நிற்பதாக இங்கே பொருள் கொள்ளலாம். தீர்மானித்தல், முடிவுசெய்தல், பங் கிட்டு கொடுத்தல் என்பது இதன் கருத்து (தமிழ்லெக்ஸிகன்) **அருளி** என்ற சொல்பக்தியையும் மரியாதையையும் குறிப் பிடும் அடைமொழியாகவே இங்கே உபயோகிக்கப்படுகிறது.

மேற்கூறிய விளக்கங்களினால், "காந்தளூர்ச்சாலை கல மறுத்தருளி" என்ற சொற்றொடருக்கு கீழ்க்காணும் பொருள் கொள்ளலாம். "மன்னன் மான்யம் வழங்கவும் கலங்களின் எண்ணிக்கையை (அதாவது உணவுபாத்திரங்களை) நிர்ணயிக் கவும் கருணைகூர்ந்தான். எனவே, காந்தளூர் அன்னசாலையில் உணவு அளிக்க வேண்டிய பிராமணர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தான்'! திருவிதாங்கூர் ஆர்கியாலஜிகல் சொசைட்டி பேப்பர் 1 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஹஜூர் ஆபீஸ் சாச னங்களும் இந்த கருத்தை ஊர்ஜிதம் செய்கின்றன. இந்தபிர மாணத்தின் முக்கிய விஷயம் என்னவென்றால், பார்த்திவசே கரபுரத்தில் ஒரு கோயிலும் கல்லூரியும் கட்டுவதும். **கோக் கருநந்தடக்கன்** என்ற ஒரு தலைவனால் அந்த இரு ஸ்தாப னங்களுக்கும் ஏராளமான மான்யங்கள் விடப்படுவதுமாகும். அதில்காணும் கீழ்க்காணும் வாக்கியம் நமது கவனத்துக்குரிய தாகும், "காந்தளூர் மரியாதையால் தொண்ணூற்றைவர் சட் டர்க்குச்சாலையும் செய்தான் ஸ்ரீ கோக்கருநந்தடக்கன்."

காந்தளூரில் இருந்ததைப்போன்ற ஒரு வேத கல்லூரி நிறுவப்பட்டது என்று இங்கு தெளிவாகக் கூறப்பட்டிருக்கி

*அனுபந்தம் III.B.
†அனுபந்தம் III.C.

றது. இதிலிருந்து "காந்தளூர்ச்சாலை" என்பது மிகப் புராதன மான ஸ்தாபனமென்பதும், தென்னாட்டு **நலந்தா** என்பதும் விளங்குவதுடன், அக்காலத்து மக்கள் இதை ஒரு ஆதர்ஸன ஸ்தாபனமாகக் கருதினார்கள் என்றும் தெரிகிறது. கலம் வழங்குவதைப்பற்றி மேலே கூறிய பிரமாணத்தில் கீழ்காணு மாறு கூறப்படுகிறது."இச்சாலைக்குப் பெய்தகலத்தில் பவிழிய சரணத்தாருடைய கலம் நாற்பத்தைந்து, தயித்திரிய சரணத்தா ருடைய கலமுப்பத்தாறு, தலவகார சரணத்தாருடைய கலம் பதினாறு, இனிவருங்கலம் மூன்றுசரணத்தாருக்கும் ஒப்பது"

மூன்று சரணத்தாருக்கும் கலங்கள் நிர்ணயித்த முறை யிலிருந்தும், அவைகள் வழங்கப்பட்ட முறையிலிருந்தும், **அறுத்தருளி** என்ற சொற்றொடரின் கருத்து தெளிவா கிறது.

"காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" என்பதற்கு திரு. கோபிநாதராவ் கீழ்காணும் விளக்கம் கூறுகிறார். "காந்தளூ ரில் உள்ள கலத்தை மன்னன் நிறுத்தினான். (அதாவது அன் னசாலையை நிறுத்தினான் என்று) ஆனால், இந்த பொருள் ஏற்பு டையதல்ல. தேசமெல்லாம் 'கொடைவள்ளல்' என்று புகழ்ந் துரைத்த பெரும் வெற்றிவீரனான முதலாவது ராஜ ராஜ சோழன், மேலே காட்டியதைப்போன்ற ஒரு பெரும் ஸ்தாப னத்தை அழித்தான் அல்லது நிறுத்தினான் என்று கூறுவது பொருத்தமற்றதாகும்.

காந்தளூர் துறைமுகத்தில் கப்பல்களை அரசன் நிர்மூலம் செய்தான் என்று கருதும் டாக்டர் ஹெல்ஷின் அபிப்பிரா யத்தை திருவாளர்கள் K. V. சுப்பிரமணிய அய்யரும், A. S. ராமநாத அய்யரும் கைக்கொள்கிறார்கள். அவர்களின் வாதத் திற்கு துணைதருவது, ஒரு சிலாசாசனத்தில்காணும், கீழ் வரும் வாக்கியமாகும். "வீரபாண்டியன் தலையும் சேரலன் சாலையும் இலங்கையும் தண்டாற்கொண்ட கோவிராஜ கேசரிபற்மரான உடையார் ஸ்ரீ ராஜாதிராஜதேவன் திரு. A. S. ராமநாதய்யரவர்கள் 'தண்டாற்கொண்ட' என்ற சொற் றொடரை பிரமாதப்படுத்திவிட்டு, 'வீரபாண்டியன் தலை' 'இலங்கை' என்ற வார்த்தைகள் சேரலன் சாலை என்பதோடு

சேர்ந்துவருவதால் சாலை என்பதற்கு அன்னசாலை என்ற பொருள் பொருந்தாது என்று முடிவுகட்டுகிறார். ஏன் பொருந்தாது என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு அரசன், ஒரு தேசத்தை வெற்றிகொண்டபிறகு, அந்த தேசத்தின் அறிவு நிலையமாகவும், பெருமையின் சின்னமாகவும் விளங்கும் ஒரு ஸ்தாபனத்தை ஏன் கைவசப்படுத்தமாட்டான்* ஆகவே, ஏன் இது பொருத்தமுடையதல்ல?

மேலும், சேர மன்னர்கள், காந்தளூர், கறைக்கண்டேஸ்வரம், தலைக்குளம் † முதலிய இடங்களில் சக்திவாய்ந்த கடற்படைகள் வைத்திருந்ததாகவும் பக்கத்து அரசர்கள் அதை அழிக்கப் பலதடவை முயன்றதாகவும், திரு. A. S. ராமநாத அய்யர் கூறுகிறார். ஆனால் அதற்கு ஆதாரமாக அவர் ஒரு தெளிவும் கொடுக்கவில்லை. காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி, கறைக்கண்டேஸ்வரத்துக் கலமற்றயாண்டு, தலைக்குளத்துக் கலமற்றயாண்டு" என்பனபோன்ற வாக்கியங்கள் நிச்சயமாகவும் அவருக்குத் துணைபுரியாது. ஏன் எனில், இந்த சொற்றொடர்களின் வியாக்கியானம் இன்னும் விவாதத்திற்குரியதாகவே இருக்கிறது. முதலாவது ராஜராஜ சோழனும், அவனின் மகனாகிய ராஜேந்திர சோழனும், உண்மையாகவே தம் காலத்தில் மிகவும் சக்திவாய்ந்த அரசர்களாக இருந்தார்கள். அவர்களின் கப்பல்கள், வங்காளக் கடலைப் பிளந்து, பர்மா, சயாம், சுமத்திரா, சிலோன் முதலிய தூரதேசங்களுக்கெல்லாம்சென்றிருக்கின்றன. ஆனால், அவர்களின் காலத்திலிருந்த சேரஅரசர்கள் கடற்படை செலுத்தினர் என்பதற்கு போதிய சான்றுகள் இல்லை. மேலே கூறிய தலைக்குளம்முதலிய இடங்களில் அவர்களின் கடற்படை இருந்ததென்பதற்கு ஒரு சிறு ஆதாரம்கூட கிடையாது.

அறுத்தருளி என்ற தொடரில் உள்ள **அறுத்து, அருளி** என்ற சொற்களில் அறுத்து என்பதற்கு அழித்து எனப் பொருள்கொண்டால் அந்த சொற்றொடர் சரியான பொருளில் அமைந்தது எனக்கூறமுடியாது. பயத்துக்கும் மரியாதைக்கும் உரிய ஒருவர் செய்யும் காரியத்தையே அருளி

---

*அனுபந்தம் IV.

†படத்தைப் பார்க்கவும்.

என்ற அடைமொழியுடன் குறிப்பிடமுடியும். அழிக்கும் செயலுக்கு **அருளி** என்ற அடைமொழி நிச்சயமாகப் பொருந்தாது. கொல்லப்படும் ஒருவன் ராவணனாகவோ சூர பத்மனாகவோ இருந்தாலன்றி, கொன்ற செய்கையை 'கொன் றருளி' என்று நாம் கூறமாட்டோம். முதலாவது ராஜ ராஜ சோழனின் காலத்திலிருந்த சேர மன்னரின் கடற்படை அழிக்கப்பட்டதை ஒரு கருணைச் செயல் என்று நினைக்கக் கூடியவகையில் அந்த சேர அரசர்கள் மக்களால் வெறுக்கப் பட்டிருந்தார்களா?

சி. தே. வி.

II

திரு. T. K. ஜோசப் அவர்களின் குறிப்புகள்.

(1) திருவல்லா என்னும் இடத்திலிருந்து சுமார் 80 மைல்களுக்கப்பாலுள்ள மலயிக்கிளில் உள்ள திருவல்லாளப் பனைப்பற்றி வேறு உதாகரணங்களை கேரள சொசைட்டிப் பேப்பர் முதல் தொகுதியில் 71-72 பக்கம் பார்க்க.

(2) பெரிய ஊட்டுப்புரை என்று பொருள் தொனிக்கும் **வலிய சாலே** என்ற தமிழ் பெயரையொத்த **மகா சால** என்ற ஒரு இடம் வட இந்தியாவில் அசோகனின் ஞாபகார்த்த சின்னங்களுடன் இருக்கிறது. இந்த இடத்தின் எதிரே ஏழாவது நூற்றூண்டில் யுவான்சுவாங் என்பவர் கல்வெட்டுகளையுடைய அசோக ஸ்தம்பம் ஒன்றைக் கண்டார். அக்ரசால, அதாவது உணவளிக்கும் இடம், அல்லது பிராமணர்களின் ஊட்டுப்புரை என்ற வார்த்தையின் குறுகியசொல்லான **ஸால** என்ற வடமொழிச்சொல்லிலிருந்து கிடைத்த **சாலே** என்ற தமிழ்பேராலும் **சால** என்ற மலேயாளப்பேராலும் வளங்கப்பெறும் நான்கு இடங்கள் ஒன்றையொன்று மிக அடுத்து திருவனந்தபுரத்தில் இருக்கின்றன. அவைகள் (1) பழையசாலே, (2) ஆரியசாலே, (3) வலிய சாலே, (4) சின்ன சாலே. இந்த நான்கு இடங்களிலும் ஒருக்கால் ஊட்டுப்புரைகள் இருந்திருக்கலாம். அவைகளில் மிகவும் புராதீனமானது பழையசாலேயிலிருந்ததாகும். இது புத்த அல்லது ஜைனமத ஸ்தாபனமாகவும், ஆரியசாலேயிலிருந்தது ஆரிய பிராமணர்களின் ஸ்தாபனமாகவும் இருந்திருக்கவேண்டும்.

திருவனந்தபுரத்திற்கு தெற்கே எட்டுமைல் தூரத்திலிருக்கும் **விளிஞ்சம்** என்றும் ராஜேந்திர சோழபட்டினம் என்றும் அழைக்கப்பெறும் இடத்தில் வலிய சோழன் சாலபுரயிடம், சிறிய சோழன் சாலபுரயிடம் என்ற பேர்களால் இரண்டு இடங்கள் இன்னும் இருக்கின்றன. அதாவது சோழ அரசரால் ஏற்படுத்தப்பட்ட வலிய ஊட்டுப்புரையும் சிறிய ஊட்டுப்புரைகளும் இருந்த இடங்கள் என்பதாகும்.

விளிஞ்சத்தை கைப்பற்றியபின் இந்த சாலைகளை, ராஜேந்திர சோழனே ஏற்பாடுசெய்திருக்கலாம்.

K. S. பேப்பர் I. பக்கம் 74, குறிப்பு 22 உம் T.A.S.I பக்கம் 6, 7. 165 (சாலபோகம்), 287 (அக்ரம்) உம், இனியொரு சாலையைப்பற்றி குறிப்பு காண்க.

(3) வலியசாலை கோயிலிலிருக்கும் தெய்வம், **'காந்தளூர் சாலை மகாதேவர்'** என்று அழைக்கப்படுகிறது. அதன் கருத்து காந்தளூர்ச்சாலையின் சிவன் என்பது. ஸால என்ற வடமொழி மலையாளத்தில் சால என்றாயிற்று. வடமொழி பாண்டித்தியம் உள்ளவர்கள் இந்த தெய்வத்தை காந்தளூர் ஜ்வால மகாதேவர் என்றழைக்கிறார்கள். எனவே சால என்பது ஜ்வால (நெருப்பு) என்ற வடமொழியிலிருந்து வந்ததாகவும் தெரிகிறது. காந்தளூரில், முதல் ஸால அல்லது ஊட்டுப்புரை அந்த இடத்தில் மகாதேவர் கோயில் கட்டுவதற்கும் முன்பே ஏற்பட்டிருக்கவேண்டும்.

(4) தற்சமயம் வழங்கும் மலையாள மொழியில் கலம் என்பதற்கு கீழ்க்காணும் பொருள்களுண்டு.

(a) ஆழமான பாத்திரம் அல்லது பானை. (களிமண், செம்பு, பித்தளை மரம் அல்லது வேறு உலோகங்களினால் ஆயது. உ-ம். மண்கலம், பச்சக்கலம், செம்புகலம், மரக்கலம் முதலியன. கலம் என்ற வார்த்தை, சம்ஸ்கிருதத்தில் **கலசம்** எனவும், மலயாளத்தில் **கலயம்** எனவும் வழங்கும் வார்த்தைகளுடன் தொடர்புடையதாக இருக்கவேண்டும். கலசம், என்ற பதத்தின், மூலம் எதுவென்பது தெரியவில்லை.

(b) மணிகள் செய்யும் உலோகத்தின் பேராகிய **வெண்கலம்** என்பதின் இறுதியாகிய **கலம்**, உலோகம் என்ற கருத்தைத்தருகிறது. இந்தவார்த்தை ஒன்றில், இந்தியச்சொல் அல்லாமலிருக்கவேண்டும். அல்லது தமிழ் மூலத்திலிருந்து வந்திருக்கவேண்டும். கலம் என்பதற்கு தமிழில் ஆயுதம் அணிகலம் என்ற கருத்துக்களுமுண்டு. இந்த சொற்கள் உலோகம் என்ற கருத்திலிருந்து கிடைத்தவைகள் எனத்தெரிகிறது.

பழயகாலத்தில் வழங்கிய மலையாள பாஷையில் **கலம்** என்பதற்கு கீழ்காணும் பொருள்களிருந்தன.

(a) நெல், தானியம் முதலியன விளையும் நிலத்தின் அளவை. ஆழமான பாத்திரம் அல்லது குடம் என்ற கருத்திலிருந்து இந்த பொருள் கிடைத்தது.

(b) குவிந்திருப்பதும், அகன்றவாயுடையதும், தட்டையான அடியுடையதும் சாதம் வைத்து உண்ணுவதற்கு உபயோகிப்பதுமான வெண்கலபாத்திரம். இத்தகைய உணவு பாத்திரத்தின் முழுப்பேர் பரிக்கலம் அல்லது அடிக்கலம் என்பது. உணவு அருந்துவதற்கு அடிக்கலம் பருகுக என்பது பழய மலயாளச்சொல். அரசர், அல்லது அத்தகைய அந்தஸ்திலுள்ளவர்கள் உணவு அருந்துவதற்கே அந்தபதம் உபயோகிக்கப்பட்டது. செம்பு அல்லது வெண்கலத்திலாய இரண்டுவித உணவு பாத்திரங்களுக்கு சாதாரணமாக மலையாளத்தில் கிண்ணம், கங்காளம் என்ற பேர்களுண்டு. மேலே குறிப்பிட்ட பேப்பரில் வரும் முதல் பிரமாணத்தின் ஆறுவது வரியில் குறிப்பிடும் கலம், கிண்ணம் அல்லது 15 பலம் தூக்கமுள்ள வெங்கலத்திலாய கங்காளமாகத்தானிருக்க வேண்டும்.

(c) இத்தகைய உணவுபாத்திரங்கள் கொள்ளக்கூடிய சாதத்தின் அளவு. முன்னர் கூறிய பிரமாணத்தில் 4 வது வரியில் கலம் என்பது இதே கருத்தில் தான் உபயோகிக்கப்படுகிறது.

(5) **அறுத்து,** அறுப்பு என்ற சொற்களுக்கு பண்டைமலையாளத்தில் தீர்மானித்தல், முடிவுசெய்தல், ஒழுங்குபடுத்தல் தீர்மானம் அல்லது ஒழுங்கு என்ற கருத்துக்களுண்டு உ-ம். செலவறுத்து = செலவுகளை ஒழுங்குபடுத்தல் செலவு செய்தல். செலவறுப்பு = செலவின் ஒழுங்கு அல்லது செலவு.

இந்த சொற்களுக்கு வெட்டுவது அல்லது அறுப்பது என்ற சாதாரண பொருள்களுமுண்டு (நிகழ்காலம்) உ-ம்.

கழுத்தறுத்து, அறுப்புவாள். உண்மையில் அறுத்து என்ற பதத்திற்கு மலையாளத்திலும் தமிழிலும், கண்டித்து, பரிச்சேதித்து என்ற வார்த்தைகளின் முழுத்தாத்பரியமுமுண்டு. இந்த வார்த்தைகள் சம்ஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கியவைகளாகும்.

(6) குறிப்பு இரண்டில் வரும், சோளசாலை போன்ற சேரலன்சாலையும், திருவனந்தபுரம் K. S. பேப்பர் I. பக்கம் 74 ல் வரும் சக்கரசாலையும், ஊட்டுப்புரைகளாகத்தானிருக்க வேண்டும். சாலை என்பது இடங்களைக்குறிப்பிடும் பேர் அல்ல. (குறிப்பு 2) சாலையின் பிராமண அதிகாரிகளும், அதைச் சூழ்ந்திருந்த கிராமங்களில் உள்ள பிராமணர்களும் தமது ஸ்தாபனம் சோழன் கைக்கு மாறுவதை ஆட்சேபிக்கவும், அதனால் சோழன் பலாத்காரத்தை உபயோகிக்கவும் நேர்ந்திருக்கலாம். கள்ளிக்கோட்டை (Calicut) ஸாமோரின், 1757 ல் கொச்சிமீது படை எடுத்தபோது, அங்கே திருச்சூர் கிராமத்திலிருந்த, யோகம் என்றழைக்கப்படும் நம்பூதிரி பிராமணர்களின் சபை, தாமும் தமது வேதகலாசாலை (வாத்யன்மடம்) போன்ற ஸ்தாபனங்களும் ஸாமோரினுக்கு கீழ்ப்படிய மறுத்ததும், கரிங்காடு வீட்டில் நம்பூதிரிப்பாடு கீழ்காணும் சம்ஸ்கிருத சுலோகத்தால் ஸாமோரின் அச் அறுத்தலுக்கு பதில் அளித்ததும் நமக்குத் தெரியும்.

മാടക്ഷ്മാരമണബാഹുബലാദിഗുപ്താ
സേയം സഭാ പരവശേതിന ശങ്കനീയാ;
ഏകാകിനീ നിശിചരാലയമദ്ധ്യഗാപി
കിം രാമഭദ്രദയിതാ ദശകണ്ഠ മാപ?

(மாடக்ஷ்ம=கொச்சி) இந்த உக்கிரமான பதிலைக் கேட்டதும் ஸாமோரின் அடங்காக் கோபமடைந்து, இன்னும் அதிகப் பலத்தைத் திரட்டி தனது ஆச் மிப்பை ஆரம்பித்தான். (திருச்சூர் அப்பர் தம்புரானின் (1089. M. E) சரித்திரம் பக்கம் 47-48 பார்க்க.

(7) மலபாரில் பண்டைக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய விளிஞ்சம், கொல்லம் முதலிய துறைமுகங்களில் கூட கடற்படை இருந்ததாகத் தெரியவில்லை. (T. K. J.)

அனுபந்தம் I

திருவனந்தபுரம் சாலையிலுள்ள ராஜேந்திர சோழனின் கல்வெட்டு (A. D. 1013-1045)

(1) ஸ்வஸ்திஸ்ரீ திருமன் (2) னிவளர இருநிலமட (3) ந்தையும் பொற்ச்ச (4) யப்பாவையும் சீர் (5) த்தனிச் செல்வியுந்தன் (6) பெருந்தேவியாகியின்புற (7) நெடிது யிஹாழியுள்இ (8) டைதுறைநாடுந், துடர்வ (9) னவேலி படர்வன (10) வாசியுஞ், சுள்ளிச்சூழ் (11) மதிள் கொள் ளிப்பாக் (12) கையும், நண்ணற்கருமு (13) ரண்மண் ணைக்கடக்க (14) மும், பொருகடலீழத்தரை (15) யர்தம் முடியும் ஆங், (16) கவர்தேவியரோங்கெழி (17) ல்முடியு, முன்னவர்பக் (18) கல்தென்னவர்வை (19) த்த சுந்தர முடியும், இ (20) ந்திரனாமும், தெண்டி (21) ரை ஈழ மண்டலமுழு (22) தும் எறிபடைகேரளன் (23) முறையில் சூடுங்கு (24) லதனமாகியபலர்புக (25) ள்முடியுஞ் செங்க திர்மாலை (26) லயு................

S. D. P.

அனுபந்தம் II


(1) தலைக்குளம்: இரணியல் தாலூக்கில் ஒரு கிராமம் தெற்கே கன்னியாகுமரி வரை தனது ராஜ்யத்தை ஸ்தாபித்த முதல் சோழ அரசனாகிய பராந்தகச் சோழனின் சுசீந்திரம் கல் வெட்டுகளில் இந்தப் பற்றின குறிப்பு இருக்கிறது. (T. A. S. I. p. 292) இங்கே புராதீனமான ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது.


(2) திருநயினார்குறிச்சி: தலைக்குளத்துக்கு சிறிது தெற்கே வள்ளியாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. இது ஒரு சிறுகுக்கிராமம் இங்கே இருக்கும் கோயில் கறைகண்

KALAM LOCALITIES.

Scale 1″ = 2 Miles.

A. B. வள்ளியாறு.
1. தலைக்குளம்.
2. திருநயினார்குறிச்சி.
3. கடிகைப்பட்டணம்.
4. பெரியகுளம்.
5. முட்டம்
6. இராஜாக்கமங்கலம்
7. அம்மாண்டிவிளை.
8. வெள்ளிக்கிழமைசந்தை
9. இரணியல்.
10. மணவாளக்குறிச்சி.
C. D. அரபிக்கடல்.





டேஸ்வரம் என்றழைக்கப்படும். அதாவது கறையுடன் கூடிய கழுத்தையுடைய ஈஸ்வரன் கோயில் என்பது.

(3) கடிகைபட்டணம்: முதலாவது ராஜ ராஜன் காலத்தில் பிரசித்திப் பெற்றுவிளங்கிய ஒரு புராதன துறை முகம். இதுவரையும் பிரசுரமாகாத முதலியார் பிரமாணம் ஒன்றில் இதற்கு பெரிய பிராட்டி சதுர் வேதிமங்கலம் என்ற பேர் காணப்படுகிறது.

(4) பெரியகுளம்: கடிகைபட்டணத்தின் பெரிய குளம். இந்த குளத்தின் கரையில் இயற்கையாக அமைந்த ஒரு பொத்தையில் முதலாவது ராஜ ராஜ சோழனின் 27வது வருடமிட்டு ஒரு கல் வெட்டு காணப்படுகிறது.

(T. A. S. VI. p. 145)

(5) முட்டம்: ஒரு துறைமுகம் முதலாவது ராஜ ராஜ சோழனால் இதற்கு மும்முடி சோழநல்லூர் என்று பேரிடப்பட்டது. (T. A. S. V. p. 292)

படத்தை கூர்ந்து பார்த்தால் தலைக்குளத்திலாவது, கறைக்கண்டேஸ்வரம் கோயில் இருக்கும் திருநயினார்க் குறிச்சியிலாவது எந்தக் காலத்திலும் கடற்படை இருந்திருக்க முடியாது என்பது தெரியும். குறிச்சி என்று முடியும் பேர் ஒருக்காலும் கடற்கரை பட்டணமாக இருந்திருக்க முடியாது. கடற்கரையிலிருந்து முறையே இரண்டும் மூன்றும் மைல்களுக்கப்பால் இரண்டு இடங்களும் உள் நாட்டில் இருக்கின்றன. முதலாவது ராஜராஜன் காலத்தில் இந்த நாட்டிலே பிரசித்திப்பெற்றிருந்த துறைமுகங்கள் கடிகைபட்டணமும் முட்டமும்தான் (Contra: T. A. S. I. p. 128)

அனுபந்தம் III.

A.

1. 'ஆயிரத்து நாற்பதின் மன்சாலை என்று இவர்க்கு தர்மமாக பிராமணர் உண்ணைச்சாலை' (S.I.I., IV. p.137).

2. 'இத்தேவர் கோயிலிலே கருணாகரந்சாலை அக்கிரபோசனத்துக்கு கலம் ஐஞ்சுக்கு அரிசி குறுணியிருநாழிக்கும் நெல்லு முக்குறுணி ஒரு நாழியும்' (S.I.I., VII. p-260).

3. 'நிசதமிருபத்தைய்வர் பிராமணர் சந்திராதித்தியவத் உண்பதாகச் சாலையும் வைத்தருளினர்' (S.I.I., III. part III. p.302)

4. 'ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையான ராஜ ராஜப் பெருஞ்சாலை' (T.A.S, I. p 163).

5. 'இவ்வூர் ராஜராஜன் சாலைக்கு சாலோபோகமான வூர்கள்' (T.A S., I. p.165).

6. 'திருவதிக்கு சாலாபோகம்' S.I.I., III part III. pp.303 & 305).

7. 'இவ்வூர் உழக்குடிகள் கொடுசென்று இத்திருமலையிற் சாலைக்கே கொடுசென்று தேவகன்மிகளிடங் அளந்து தரவுகொள்ளக்கடவராகவும்'....................

8. 'நெல்லட்டிச் சாலை முட்டாமே வூட்டுவிக்கக்கடவோமாகவும்'. (திருவெறும்பூர் கல்வெட்டு)

9. 'சாலை சிங்களாந்தகனில் உண்ணும் பிராமணர் இருபத்தைவர்க்கு' (S.I.I., IV. p.30).

10. 'சாலைமடையன் ஒருவன்' (S.I.I., IV. p.31)

11. சாலை அடுவான் ஒருவன்' S.I.I., V. p.243).

12. திருவிடைமருதூர் சாலை உண்ணும் பிராமணர்க்கு இவனிட்ட தாலம்' (S.I.I., V. p.301).

Upatthana salas (service halls),
Aggi salas (halls with fire-places in them).
Chankamana salas (halls for exercise),
Udapana salas (sheds for the wells),
Jantaghara salas (halls attached to the bath-rooms).
(*Sravasti* in *Indian Literature*,pp.23,24.)

'The *Mahagovinda Suttanta* refers to a *Mahasala* as Vedic institution for educating the *nahatakas* (*snatakas* or advanced students).

(Ibid., pp. 14, 15,)

B.

1. 'இவர்களுக்கு அமுதுசெய்யக் கலம்பதிநெய்ஞ் சும்' (S.I.I., IV. p.424).

2. 'இக்கலம் இப்பரிசெய் ஊட்டுவதாக' (S.I.I., III part III. p.240)

3. 'உத்தமாக்கிரம்கலம் ஒன்றுக்கு அரிசி இரு நாழியும்' (திருவெறும்பூர் கல்வெட்டு).

4. 'பந்திருநாழிபூஜை' is often referred to as 'பெருங்கலபூஜை' in many a temple on the west Coast.

C.

1. 'அளவறுப்பதற் கரியவன்'.
(திருவாசகம்—திருச்சதகம் 35).

2. 'நாடற்றமரியாதி' *Inscriptions of the Pudukkottai State*, No. 596).

3. 'அசற்பற்றில் பாடிகாப்பாற்கு அற்றமரிஆதி சுபந்திறம் இடக்கடவர்களாகவும்' (Ibid., No. 799).

4. 'அசற்பாடிகாவலுக்கு அற்றமரியாதிகளும் பெற்று' (Ibid., No. 801).

5. 'இருஞ்சிறை பெருந்துறைக்கு அற்றமரியாதி இன்னுயினுற்கு விட்ட அளவுக்கு' (Ibid., No. 800).

6. 'இறையூற்கு அற்றமரியாதி பெறக்கடவார்களாகவும்' (Ibid., No. 821).

7. 'நாட்டவற்கு அற்றமருவாதி நடத்திக்கொள்ளவும்' (Ibid., No. 827).

8. 'இவர்கள் பூறுவார்களில் உதையப்பெருமாள் ஆனவணிகராமர் எழுந்தருளிவித்த உடையார் திருப்பூமீசுவரமுடையநாயினுற்கு திருநாமத்துக்காணியாக பிரமாணம் பண்ணிக்குடுத்து முன்றுள் ஆற்ற நிற்செயிப்பு அன்றி காணிக்கைபூண்ட இலக்கத்துக்குபகுதிமுட்டுக்குவாங்கிக்குடுப்பித்த சக்காம்' (Idid., No. 835).

9. 'நாங்கள் அரன்குளவர் சன்னதியிலே அறுதி பண்ணிக்குடுத்து அந்த அறுதிப்படியிலே இற்றைவரையும் நடந்துபோதுகையில் (Idid., No 698).

10. 'அறுதிமுறி' (Ibid., No. 749).

11. 'திருவதிக்கு அற்றபிறசாத காணிக்கை' (S.I.I., VI. p.39)

12. 'சிலவறுக்கும் பொன் நாற்று ஒன்றும்'. *Inscriptions of the Pudukkottai State*, No 355)

13. 'செலவறுப்பித்துக்கொண்டு, (Ibid., Nos. 359 and 898).

14. 'தாங்கள் நிச்சயித்துக்குடுத்த கடமை ஆண்டுதோறும் சிலவறுப்பிச்சுக் கொண்டு' (Ibid., No. 354).

15. 'செட்டியப்பன் வசம் செலவறுத்த பணம் ௱௫௰-ம்.....................செலவறுத்த பணம் ௱உ௰-ம் ஆக பணம் உ௱எ௰-ம்' (S.I.I., IV. p.19).

16. 'தம்முடையபேற்கு முன்னின்று செலவருமல்' (Ibid.).

17. 'வச்சணந்தி வரையறுத்தபாட்டியல்'.

அனுபந்தம் IV.

ஹிந்து அரசர்களில் மிகச்சிறந்தவன் என்ற முறையில் புராதன இந்தியாவின் வேதங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் பாதுகாத்து, அவைகளை மக்களுக்கு பயிற்றுவிக்கவேண்டியது தனது கடமைகளில் முக்கியமானது என்று முதலாவது ராஜ ராஜ சோழன் கருதினன். எனவே, தென்னாட்டு நலந்தா எனத்தகுந்த காந்தளூர்ச்சாலை வேதகல்லூரி இருந்த கேரளதேசத்தின்மீது தனது முதல் படை எடுப்பை ஆரம்பித்தான். அந்த ஸ்தாபனத்தைக் கைப்பற்றி, அவன் எண்ணப்படி திருத்தியமைத்தான்.* இந்த வெற்றி செய்கை

*Compare:—

(1) "Not only the Palas, who ruled over Magadha for some four centuries, contributed their mite according to the vicissitudes of the time in which they flourished to the maintenance and preservation of art and culture as embodied in Nalanda but *others also the Gurjara Pratiharas and others who now and then invaded Magadha, contributed their mite or, shall we say, forced the university to acknowledge thier sovereignty and even record it.*"

(*The University of Nalanda* p. 61.)

(2) "வேலைகொண்ட விழிஞமழித்ததும்
சாலைகொண்டதும் தண்டுகொண்டல்லவோ? (கலிங்கத்துப்பரணி 370.)

From this it is quite evident that Chalai(சாலை)was only taken possession of or captured, and not destroyed.

தான் அவனுடைய எல்லா சிலாசாசனங்களிலும் அவன் பேருக்கு அடைமொழியாக வளங்கப்படும், சுருங்கிய ஆனால் விவாதத்திற்குரிய 'காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளி' என்ற சொற்றொடரால் குறிக்கப்படுகிறது. உண் மையில், காந்தளூர்ச்சாலை வெற்றியை எண்ணி முத லாவது ராஜராஜ சோழன் மிகப் பெருமையடைந்தான் எனத்தெரிகிறது. அவன் பல பிரமாணங்களில் காந்தளூர்ச் சாலை கலமறுத்த ராஜகேஸரி என்று மட்டுமே குறிப்பிடப்படு கிறான். வேறு பேர்களோ பட்டங்களோ அல்ல. இந்த வியாக்யானத்திற்கு அனுசரணையாக, பராந்தகபாண்டியனின் கன்னியாகுமரி பிரமாணங்களின் முன்னுரையில் காணப்படும் கீழ்க் காணும் வரிகளை மேற்கோளாகக் கொள்ளலாம்:—

"***கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து**
மன்னுப் புகழ் மறையவர்தம்
மணியம்பலத்துளினிதிருந்து
ஆயிரத் தெண்மர் அவிரோதம்
பணிப்பணியால்
மறை பேர்த்துக்கல் நாட்டிப்
பண்டுள்ள பேர் தவிர்த்து
நிறுப்பனவு மளப்பனவும்
கயலெழுதி
அனந்த புரத் தெம்மாற்கு
நிலவிய பொன்
மணிவிளக்கு நின்றெரியப்
பத்தமைத்து" (T. A. S. I. No. 3 p. 4)
(கன்னிப்போர் = முதல் யுத்தம்)

காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி என்பதற்கு டாக்டர் ஹல்ஷ் செய்த வியாக்யானம் சரியல்ல என்பதற்கு ஒரு பெரிய ஆராய்ச்சியாளர் என்னுடன் விவாதித்துக் கொண்டிருக்கும் போது கீழ்காணும் நியாயங்களை எடுத்துக் காட்டினார்:—

"முதலாவது ராஜ ராஜ சோழனுடையவும் அவனின் பிந்திய சந்ததிகளுடையவும் கல்வெட்டுகளில் காந்தளூரில்

*கலைமகள் VOL. 1. P. 585-590-பார்க்க.

நடந்த சம்பவம்—அது எதுவாக இருப்பினும்சரி—முதல் முதலில் குறிப்பிடப்படுகிறது. இந்த சம்பவம் கடற்படை வெற்றியாக இருந்தால் அது முதலாவது ராஜ ராஜ சோழனுக்கு மட்டுமே பொருந்தும் அவன்—சந்ததியார்கள் ஒவ்வொருவரும் அந்த ஸ்தலத்தில் அதே வெற்றியை அடைந்தாலல்லாமல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த அடைமொழி பொருந்தக்கூடியதல்ல.

"காந்தளூர்ச்சாலை சம்பவத்தை கடற்படை வெற்றியாகக் கொள்வது பொருந்தாது என்பதை உறுதிப் படுத்த இனியொரு சந்தர்ப்பமும் உண்டு. ஒருவெற்றி சம்பவத்தைக் குறிப்பிடுகையில் யார் மீது வெற்றி கொண்டானோ, அந்த எதிரி அரசனைப் பற்றின குறிப்பு முதலில் இருக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பது இயற்கை. இந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அத்தகை எதிரி அரசனின் பேர் காணப்படாமையினால் ஒரே ஒரு முடிவிற்குத் தான் இயற்கையாக வர முடியும். அதாவது இந்த சம்பவத்தின் தன்மைவேறு எதாக இருந்த போதிலும், இது கடற்படைப் போரோ அல்லது வெற்றியோ அல்ல என்பதுதான்.—

அனுபந்தம் V.

திருவிதாங்கூர் சிலாசாசன வெளியீடு மூன்றும்பாகத்தில் 56 வது கல்வெட்டு கறைக் கண்டேஸ்வரத்து கலமற்றயாண்டு என்ற சொற்றொடருடன் ஆரம்பிக்கிறது. இதன் பொருள் இதுவரையும் சரியாகக் குறிப்பிடப்படவில்லை. இதன் ஆசிரியர், இந்த சொற்றொடருக்கு கீழ்காணும் பொருள் கூறுகிறார்'' கறைக்கண்டேஸ்வரத்தில் கப்பல்களை அழித்த வருடம் (T. A. S. III. p. 206). மேலே கண்ட பொருள் சரி என்று ஒப்புக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். அதற்கு காரணங்கள் கீழ்வருவன:—

(1) கறைக்கண்டேஸ்வரம் ஒரு கோயிலின்பேர். கிராமம் நகரம் அல்லது துறைமுகம் ஆகியவைகளின் பேரல்ல. இந்தக் கோயில் இரணியல்தாலூக்கில் வள்ளியாற்றின் இடதுகரையில் தலைக்குளத்திற்கும், கடியபட்டணத்திற்குமிடையே இருக்கி

றது. இதன் பக்கத்தில் சமீபத்தில் தோன்றிய குக்கிராமத்தின் பேர் திருநயினார்குறிச்சி (அனுபந்தம் II.)

(2) இன்றுவரையும் தேவஸ்தான பிரமாணங்களில் இந்தக் கோயில் கறைக்கண்டேஸ்வரம் என்று தான் குறிப்பிடப் படுகிறதேயன்றி வேறு பேர்களினாலல்ல.

(3) சமீபத்திலுள்ள கிராமத்து மக்களும் இதே பேரினால் தான் கோயிலைக் குறிப்பிடுகிறார்கள்.

(4) சர்வே பிளானில் கறைக்கண்டேஸ்வரம் என்ற பேரால் எந்த கிராமமும் குறிப்பிடப்படவில்லை. மேலும் அந்த பேரையுடைய எந்தக் கிராமமும் பக்கத்திலுமில்லை.

(5) சிலாசாசன பிரமாணங்களும் மேலே கூறிய கருத்துக்கு பலமளிக்கின்றன.

(a) "தென்னாட்டுக் குறுநாட்டு கடிகைபட்டினத்து உடையார் கறைக்கண்டீஸ்வரமுடைய மகாதேவற்கு" (T. A. S., IV. P. 83)

(b) "இராஜராஜத் தென்னாட்டுக் குறுநாட்டு கடிகைபட்டினத்து உடையார் கறைக்கண்டேஸ்வரத்து மகாதேவற்கு" (T. A. S., IV. P.85).

(c) "ராஜராஜத் தென்னாட்டுக் குறுநாட்டுக் கடிகைபட்டினத்து உடையார் கறைக்கண்டீஸ்வரமுடைய நாயனார்க்கு". (T. A. S., VII. P.30.)

(d) "கறைக்கண்டேச்சரத்து தேவரடியான் பெற்றான்" (Ibid., P.31).

(e) "இராசராசத் தென்னாட்டுக்குறுநாட்டுக் கடிகைபட்டனமுடைய நாயனார் கறைகண்டீசுரமுடைய நாயனாற்கு', (Ibid.. P.33),

கறைக்கண்டேஸ்சுவரத்துக் கலமற்றயாண்டு என்பதற்கு கீழ்காணும் பொருள் கொள்ளலாம். கறைக்கண்டேசுவரம் கோயிலில் உணவு அளிக்கவேண்டிய பாத்திரங்களின் அல்லது பிராமணர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்ட வருடம் அல்லது இன்னும் சிறிது விரிவாகக் கூறவேண்டுமானால் கறைக்கண்டேஸ்வரம் கோயிலின் படித்தரத்தின் அளவை கணக்கிட்டு முடிவுசெய்தவருடம்".

கறைக்கண்டேஸ்வரம் என்பது கடியபட்டணத்தின் சமீபத்தில் திருநயினார்க்குறிச்சியிலுள்ள ஒரு கோயில் என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். எனவே, கலம் என்பதற்கு கப்பல் அல்லது கடற்படை என்று பொருள் கொண்டால் கறைக்கண்டேஸ்வரத்து கலமற்றயாண்டு' என்ற சொற்றொடர் முழுமையும் வெறும் பிதற்றல் என்றுதான் ஏற்படும் என்பது தெளிவு- ஏனென்றால் கடற்படை வைத்திருப்பதற்கும் அல்லது அழிப்பதற்கும் கோயிலுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்.

மேலே காட்டிய சொற்றொடருடன் நம்மனதில் தோன்றும் இனியொன்று, 'தலைக்குளத்துக் கலமற்றயாண்டு" என்பது (T. A. S. III. P.202). இதற்கும் ஆசிரியர் தப்பான பொருளையே கொடுத்திருக்கிறார். இங்கே, தலைக்குளம் என்பது அங்கிருக்கும் கோயிலைக் குறிப்பிடுகிறது. ஆகவே, சொற்றொடரை கீழ்காணுமாறு விரித்துக்கூறலாம். "தலைக்குளத்திலுள்ள கோயிலில் விநியோகிக்கவேண்டிய உணவு பாத்திரங்கள் அல்லது உணவு அருந்த வேண்டிய பிராமணர்களின் எண்ணிக்கையை வரையறுத்த வருடம்" அல்லது, இன்னும் சிறிது விரிவாக தலைக்குளத்திலுள்ள கோயிலின் படித்தரம் நிர்ணயித்த வருடம் என்று கொள்ளலாம்.

(1) திருவிடைமருதூர் கும்பாபிஷேகம் (2) சுசிந்திரம் கொடியேற்று முதலியன காண்க.

குறிப்பிட்ட ஒரு ஸ்தலத்தில் ஏற்படும் முக்கியமான சம்பவங்களிலிருந்து உதாரணமாக ஒரு கோயில் கட்டி முடிப்பதோ அல்லது அதில் கும்பாபிஷேகம் நடப்பதோ போன்ற சம்பவங்களிலிருந்து வருடங்களைக் கணக்கிடுவது பண்டைக்கால முறை. திருக்கண்டியூர், திருக்காக்கரை முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுகளில் இதற்கு ஏராளமான உதாரணங்களைக்காணலாம்.

(1, 'திருக்கண்டியூர் மஹாதேவருக்கு ஸர்வாதி (கக௩) செய்தருளிச் செல்லா நின்றயாண்டு நாகூமசலாமாண்டை மேடவ் வியாழத்தில்" (T. A. S. I. p.290.)

(2, 'திருக்கண்டியூர் மஹாதேவர்க்குச் செல்லா நின்ற யாண்டு நூற்றிருபத்துமூன்று (Ibid.- P.293).

(3, 'திருக்கால்கரைப் பெருமாள் தர்வாதிச்சஞ்செய்தருளிச் செல்லா நின்ற மூவாயிரத்தெழு நூற்றைய்யாமாண்டைக்கெதிராண்டு மேடத்தில் வியாழுங்நின்ற கன்னிஞாயிற்று' (T.A.S.III.P.185).

(4, 'திருக்குலசேகரபுரத்து தளிக்குச் செல்லா நின்ற யாண்டு நூற்றுத் தொண்ணூற்றைஞ்சு" (T.A.S. VI. p. 193).

அனுபந்தம் VI

கலமறுந்தல் என்பதற்கு கவிமணி தே. வி. தரும் வியாக்யானம் மிகப் பொருத்தமானது என்பதை சில புதிய சான்றுகளும், சரித்திர ஆசிரியர்களின் கருத்துக்களும் ஊர்ஜிதம் செய்கின்றன. பேராசிரியர் நீலகண்டசாஸ்திரி அவர்கள் "சோழர்கள் "என்றதம் நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்."

"கலமறுத்தல் என்பது ஜெய்மினிய சாமவேதம் 266/1923. உச்சரிப்பதைச் சொல்லும் கீழ்க்காணும் வாக்கியத்தில் வருகிறது.

'மெய்க்காட்டுத் தீட்டினரெல்லாரும் தம்மில் அஞ்சுபுரியிலுஞ் சொல்லிக்கலமறுத்து நல்லாரானொருவர்கு வ்ருத்திபான இக்காசு மூன்றும் இத்தேவரே கொடுப்பாராக"* புனிதமான வேதத்தை ஓதுவதுடன் சம்பந்தப் பட்டிருக்கும் ஒரு வார்த்தை கடற்படையை நிர்மூலம் செய்ததைக் குறிப்பிடவும் உபயோகிக்கப்பட்டது என்பது கருத்துக்குப் பொருத்தமல்ல.

இதே பேராசிரியர், தம் நூலில் "காந்தளூர் என்பதின் ஆதி குறிப்பு, திரு தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின்

* The Colas vol II. Part II. p. 797.

வியாக்யானத்தை ஒத்துக் கொள்கிறது என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்''* என்று எழுதுகிறார்.

Prof. வின்சன்ட் ஸ்மித் என்ற சரித்திராசிரியர் இந்தியாவின் பண்டைச் சரித்திரம் (Early History of India) என்ற நூலின் 465 பக்கத்தில் ராஜராஜ சோழன், சேரனின் படையை அழித்தான் என்று எழுதுகிறார். அனால் அவர் பின்னால் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு சரித்திரம் இரண்டாம் பதிப்பில் (Oxford History of India 2nd edition) தனது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறார். ராஜராஜ சோழனும், அவனைப்போலவே யுத்த ஆசைகொண்ட அவன் மகனும் செய்த தீரச்செயல்களை ராஜராஜனின் ஆட்சியின் எட்டாவது ஆண்டு முதல் ஏற்பட்ட பல சிலாசாசனங்கள் புகழ்ந்து கொண்டாடுகின்றன, ராஜராஜனின் ஆரம்ப படையெடுப்பு சேரநாட்டின் மீதுதான் என்று அவர் எழுதுகிறார், பின்னர் இதன் குறிப்புரையொன்றில் இந்தியாவின் பண்டைச் சரித்திரம் 465-ம் பக்கத்தில் கூறப்பட்டதைப் போன்று சேரனின் கடற்படையைப்பற்றி கூறப்படுகிறது. Prof. ஸ்மித்துக்கு ஏற்பட்ட கருத்துமாற்றத்திற்கு திரு T. A. கோபிநாதராவ் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரைதான் காரணம் என்றும் குறிப்பிடப்படுகிறது.† திரு கோபிநாதராவ் அவர்களின் கருத்து கவிமணியின் கருத்துடன் சரியாக இணைந்துபோகாவிட்டாலும் 'கலமறுத்தருளி' என்பது மரக்கலத்தை அழிப்பது என்ற அபிப்பிராயத்தை அடியோடு மறுக்கிறது.

குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழில்,
'தண்டில் விழுஞத் தெயில் தகர்துடைய முத்தச்
சலாபமுழுதும் பொறையர்சாலையொடு கொண்டாய்''
என்றும் கலிங்கத்துப்பரணி 370 ம் பாடலில்
வேலைகொண்ட விழிஞமழித்ததும்
சாலைகொண்டதும் தண்டு கொண்டல்லவோ''
என்றும் காணப்படுகின்றன.

---

* "It must be admitted, however, that the earliest mentions or Kandalur (T. A. S. I. p 6 C. 6) does support P. Pillai's interpretation."

(The Colas vol I p. 200)

† T. A. S. vol II pp. 3—5

இந்த இரண்டுபாடல்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இரண்டி லும் ஒரே சம்பவமும் கருத்தும் தான் கூறப்படுகின்றது என் பது தெரியும். கலிங்கத்துப்பரணி ராஜராஜ சோழனைப் புகழ்ந் துரைப்பது. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், ராஜரா ஜனின் மகன் விக்கிரம சோழன் அவனின் மகன் குலோத் துங்கச் சோழனைப்பற்றி பாடியதாகும். இதில் பாட்டனு டைய பிரதாபங்களை பேரனுக்கும் ஏற்றிக் கூறப்பட்டிருக்கி றது என்று கொள்ளவேண்டும். அன்றி கலிங்கத்துப்பரணி யில் காணும் கருத்தைவிட வேறு புதிய கருத்து பிள்ளைத் தமிழில் கூறப்படுகிறது எனக் கொள்வது பொருந்தாது.

N. A. N.
